In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழகன் முருகனின்

இருபெரும் தேவியர்



பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மாப்பிள்ளை சுவாமி எனப்படும் ஸ்ரீ குமாரவிடங்கர், திருச்செந்தூர்



ஸ்ரீ முருகன் தேவசேனா திருக்கல்யாண கோலம், திருப்பரங்குன்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

அனைத்தும் சிவகுக மயம்

அழகன் முருகனின்

இருபெரும் தேவியர்

(ஸ்ரீவள்ளி,தெய்வயானையர் பற்றிய செய்திக்கோவை)

சிவமஞ்சரிச் செம்மல்,அருட்பணிஅரசு,சிவசேவாரத்தினம்

பூசை. ச.அருணவசந்தன்

மலேஷியா, பெட்டாலிங்ஜெயாவிலுள்ள

திருமுருகன் திருவாக்கு திருபீடமும்

மலாயப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையும் இணைந்து நடத்தும்

அனைத்துலக முருக பக்தி மாநாடு.2012.ல்

திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின்

அருளாசியுடனும்,மலேசியா திருமுருகன்திருவாக்கு திருபீடத்தின் ஸ்தாபகர்-அதிபர்

அருட்சித்தர்.தவத்திரு.பாலயோகி சுவாமிகள் அவர்களின்

நல்லாதரவுடனும், 11-08-2012 ஆம்நாள் சனிக்கிழமை வெளியிடப்பட்டது.

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பிமண்ணமுதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலின் விவரம்

நூலின் பெயர்	அழகன் முருகனின் இருபெரும்தேவியர்
நூலின் ஆசிரியர்	பூசை.ச.அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற்பதிப்பு- 2012
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர்/ ஆசிரியர்	பூசை.ச.அருணவசந்தன்
முகவரி	ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018 அலைபேசி 9941124964
பக்கங்கள்	10 + 86 ஆக 96 பக்கங்கள்
நூல் அளவு	கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 செ.மீ.X 15.2 செ.மீ.
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாப்பூர் 11.6p.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	11.6 ஸ்ரீலிபி
மின் அச்சுக்கோவை	சிவசுந்தரி, 14, செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு [சி.பி.கோயில் தெரு], மயிலாப்பூர், சென்னை-4
மறுதோன்றி அச்சகம்	தேவா ஆப்செட் பிரின்ட்டஸ் சென்னை-600 005,
நூலின் பொருள்	தண்தமிழ் தெய்வமாகிய முருகப்பெருமானின் தேவியர்களான வள்ளி, தெய்வயானை ஆகிய இருவரும் ஆலயங்களில் போற்றி வணங்கப் படும் நிலைகளை விவரிக்கும் நூல்
விலை	ரூபாய் 100/-
நூலகக் குறியீட்டு எண்.	-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ



பாலயோகி சுவாமிகள்

ஸ்தாபகர் - அதிபர், திருமுருகன் திருவாக்கு திருபீடம்

BALAYOGI SWAMIGAL

THIRUMURUGAN THIRUVAKKU THIRUPEEDAM

15, JALAN 1/6 46000 P.J. OLD TOWN MALAYSIA

ஆசியுரை

தேவ+ஆன்+ஐ என்பதன் விளக்கம் தான் தேவயானை. தேவர் குலத்தில் [மேலோர்] சிறந்த பெண்ணாகத் தோன்றியதால் தேவயானை என்றும், விண் உலகத்தவரைக் காப்பவர் என்பதால் தேவசேனா [சேனா என்றால் காப்பவர் என்று பொருள்] என்றும் இவரை அழைப்பர்.

வள்ளம் என்ற சொல்லுக்கு நீர் என்பது பொருள். வள்ளத்துள் வந்த தேவியாதலின் அவர் வள்ளி என அழைக்கப்பட்டார். வள்ளி என்ற சொல்லுக்குக் கருணை என்ற பொருளும் உண்டு.

இருதேவியரின் திருமண வைபவம், சிறப்புச் செய்திகளுடன் அவதார நோக்கத்தையும் இந்த நூல் எடுத்து இயம்புகிறது.'

குறிஞ்சிக் கடவுளான முருகப்பெருமான், துதிப்போருக்கு வல்வினைகள் நீக்கக் கூடியவர். வள்ளி தெய்வயானையுடன் இவரைக் கண்குளிர தரிசனம் செய்தால் மன அமைதியுடன் இடர்கள் நீங்கி எல்லாப் பாக்கியங்களும் கிடைக்கும் என்பதை இந்நூலைப் படிக்கும் போது உணரலாம்.

முருகனின் அருள் வேண்டிப் பணிபவர்கள் இச்சா சக்தி, கிரியா சக்தியாக, வள்ளி தெய்வயானையை வழிபடும் வரலாறுகள் பல்லாயிரம் ஆண்டுகளாக அமைந்துள்ள அருட்சேர் வழக்கமாகும்.

இருபெரும்தேவியர் என்னும் தலைப்பில் திருமுருகப் பெருமானின் இருபெரும் தேவியர்களைப் பற்றி திருமிகு பூசை.ச.ஆட்சிலிங்கம் எழுதியுள்ள நூலைப் பார்வையிட்டோம். வள்ளி, தெய்வயானை ஆகியோரின் சிறப்புக்களை கூறும் நூல் இது. எந்தை பிரபுவான முருகப் பெருமானின் பரிபூரண கருணை இந்நூலைப் படிப்போருக்கு அமையத் திருத்தாளினைப் போற்றி வாழ்த்துகிறோம்.

- சுபம் -

முருகா சரணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சர்வம் சிவகுக மயம்
திருச்சிற்றம்பலம்

அறிமுகவுரையும் நன்றி மலர்களும்

செவ்வேள் பரமனின் பெருமைகளை இயன்றவரை அன்பர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும் என்னும் முயற்சியில் குமார மஞ்சரி என்னும் தொடர்நூலைத் தொடங்கினேன். அதில்வேல் வெற்றிவேல், நீலமயிலும் செஞ் சேவலும், வள்ளி மணவாளன், நாக சுப்பிரமணியர் என்னும் நான்கு தலைப்புகளில் நூல்கள் வெளிவந்தன. இவ்வரிசையில் ஐந்தாம் நூலாக முருகப் பெருமானின் தேவியர் களான வள்ளி, தெய்வயானையரின் சிறப்புகளைப் பேசுவதாக **அழகன் முருகனின் இருபெரும் தேவியர்** என்னும் இந்நூல் மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது.

இந்த இனிய வேளையில் இந் நூல்மலர்ந்து மணம் பரப்பத் துணை நின்ற அனைவருக்கும் எனதுநெஞ் சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

என்னையும், எனதுநூற்பணிக ளையும்ஆதரித்து அருளாசிபுரிந்து வரும் **திருக் கயிலாய பரம்பரை திருவாவடு துறை ஆதீன குருமகா சந்நி தானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமி களின்பொன்னார் திருவடிகளைப் போற்றிப்** பணிந்து வணங்குகின்றேன்.

இந்நூல் முருகன் மாநாட்டு மலராக மலர்ந்து மணம் பரப்ப விரும்பித் துணைநின்று ஆசி வழங்கிய **திரு முருகன் திருவாக்கு பீடம் தவத்திரு பாலயோகி சுவாமி களுக்கு** எனது நன்றியறிதலைப் பணிந்து தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சுவாமிகளிடம் என்னை ஆற்றுப் படுத்திய **அருமை நண்பர் சிவத்திரு. கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியனுக்கு** (கலைமகள், திருவாக்கு திருபீடம் ஆசிரியர்) இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

எனதுசமயப் பணிகளுக்குப் பேருதவி புரிந்துவரும் எனது அன்பிற் கினிய **சகோதரி திருமதி. அனந்தலட்சுமி,** அவரது கணவர் **கயிலைமணி சிவத்திரு. வரத.வீரராகவன்** தம்பதியருக் கும், நுங்கம்பாக்கம் எல்.வி.ஜே.பில்டர்ஸ் உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்டளையின் நிறுவனருமான திருப் பணிச் செல்வர், அருட்பணி அரசு எம்.வி.ஜெய்சங்கர் அவர்களுக்கும் என் இனிய நன்றி உரித்தாகுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குமாரமஞ்சரி நூல் தொடரில் வள்ளி மணவாளன் வெளியீட்டுக்குப் பிறகு ஆறுமாமுகன், சூரசம்ஹாரம், சிவசுப் பிரமணியர்என்னும் மூன்று தலைப்புக் களில்செய்திகளைத் திரட்டத்தொடங்கி யிருந்தேன்.அவ்வேளையில் சென்னை மேற்கு மாம்பலம்,ஸ்ரீலலிதா சமிதியின் ஸ்தாபகர் வேதநிதி சாக்தஸ்ரீ மோகன்குருஜி அவர்கள் சென்னை தர்ம பிரகாஷ் கல் யாண மண்டபத்தில், பெரியஅளவில் வள்ளிதிருமண வைபவத்தைச் சிறப்பாக நடத்தினார்கள்.அவ்வைபவத்தில் மதிப்பிற்குரிய செல் வத் திருமதி குகப் பிரேமி பிரேமா வெங்கட்ராமன்அவர்கள் குகப்பெம்மானந்தாதி என்னும் நூலை வெளியிட்டார்கள். சிறந்த செவ்வேட் பக்தையான பிரமோ வெங்கட்ராமன் தம்முள்ளத்தில் பொங்கிய கவிதை வெள்ளத்தையே அந்தாதியாகப் பாடி யிருக்கிறார்.அதை நூலாக அச்சிட முனைந்தபோது, நமது பேர ன்பர்டி.கே. நீலகண்டன்அவர்கள் அப்பொறுப்பை என்னிடம் கொடுத்தார்கள். நூலைச் செவ்வனே அச்சிட்டு அவர்களிடம் அளித்தேன். அந்நூலை மேற்படி வள்ளி திருமண வைபவ வேளையில் வெளி யிட்டார்கள். அவ்வெளியீட்டு விழாவில் திருமதி. பிரேமா அவர்கள் ரூ.2000/-த்தை அளித்து, வள்ளி தெய்வ யானை பற்றியசெய்திகளைத் தொகுத்து வெளி யிட வைத்துக் கொள்ளுமாறு கூறினார் கள். அதை யொட்டி வள்ளி,தெய்வ யா னையர் பற்றிய செய்திகளைத் தொகுத்து நூலாக்கினேன். அதுவே இப்போது இருபெரும் தேவியர் என் னும் பெய ரில் வெளிவந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது.

இந்நூலாக்கத்தில் பேருதவிபுரிந் தவர்குகத்திரு.வலையப்பேட்டை. கிருஷ்ணன் அவர்களாவர்.இவர்கள் குடும்பமே திருப்புகழ் குடும்பம்.அனைவரும் அற்புதமாகப்பாடுபவர்கள்.திரு. கிருஷ் ணன் இந்நூலுக்கு வேண்டிய படங் களை அளித்ததுடன் செய்திகள் பலவற் றையும் கூறி உதவினார்கள். திருப்பரங் குன்றம் சென்றபோது குகத் திரு பாண்டி யராஜ் அவர்கள், பழைய தல வர லாற்று நூல்களை அளித்தும், படங்கள் வாங் கிக் கொடுத்தும் பேருதவி புரிந்தார்கள்.

திருத்தணி, பழனி, திருச்செந்தூர் முதலிய தலங்களுக்கு நேரில்சென்று விவரம் திரட்டினோம். இத்தலப் பய ணங்களுக்குபோதுமான நிதியை அருட் கொடையாக அளித்து ஆதரித்தவர் மேனாள் விஞ்ஞானி சித்தாந்த ரத்தினம் விஸ்வ.ஆறுமுகம்ஆவார்.அத்துடன் அச்சுப் படிகளைத் திருத்தியும், உதவி புரிந்தார்கள்.இப்பயணங்களில் திரு. நாராயண.முருகன் அவர்கள் உடன் வந்து உதவினார்கள்.

இவ்விதம்,பலஅன்பர்களின் பேரு தவியாலேயே இந்நூல் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக் கிறது.இந்த இனிய வேளையில் இவர்கள் அனைவருக் கும் எனது அன்பு கலந்த நன்றி யைப் பணிந்து தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும்,இந் நூலை மாநாட்டில் வெளி யிட பயணம்மேற்கொள்வதற்காக கோடம்பாக்கம் திரு. இராம்குமார், காஞ்சிபுரம் சுப்பையா ஸ்தபதியார் குமாரர் சுவாமி நாத (சிவா) ஸ்தபதியார், திருவேற்காடு பெருமாள கரம் மோகன. இராஜசிம்ம மகேந்திரன், நூம்பல் ஆர்.இராமச்சந்திரன் முதலியோர் உதவினார்கள்.

இவர்கள் எல்லோருக்கும் வள்ளி தெய்வயானையர் உடனாய செவ்வேட்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமன் நோயற்றவாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் தந்தருள்பாலிக்க வேண்டுமென்றும்அவர்தம் பொற் பாதங்களைப் போற்றி வணங்குகிறேன்.

குமாரமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்துச் செம்மைப்படுத்தி உபகரித்து வரும் அடையாறு கற்பகம்கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ ஜி.எஸ்.நடராஜன் அவர்களை வணங்கி மகிழ் கிறேன். இவருடைய குமாரர் என். பாலு (ம) பாலசுப்பிரமணியன் (ஸ்பீகள்பிரிண்டர்ஸ்) அவர்களும் அநேகஉதவிகளைச் செய்து வருகின்றார்.

இந்நூலுக்குத் தேவையான ஓவியங்களை வரைந்தளித்த மயிலை ஸ்ரீ காசி ஸ்தபதியார் தேவையான படங்களை வழங்கிய மயிலை ஆர்.ராஜு வலையப்பேட்டைதிரு.கிருஷ்ணன் முதலான பல அன்பர்கள் அளித்தார்கள். இவர்கள் யாவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்து வரும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்தினர்க்கு எங்கள் நன்றி.

இந்நூல் அச்சிடுவதற்கு உதவி யாக கணினி தட்டச்சு செய்துதவிய திரு.சு.கதிர்வேலு அவர்களுக்கும்,நிழற் பிரதி களைச் செய்து தந்த சந்தியா பிராஸஸ் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் நன் முறையில் அச்சிட்டளித்த பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. கே. வசந்தா எனது அனைத்துச் சிவப்பணிகளும் நன்கு நடைபெறுவதற்கு ஏதுவாக இல்லப் பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருந்து வருகிறாள். அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பர்கள் அனவைருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாகிய அண்ணாமலை யெம்மண்ணல்சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்கவேண்டுமென்று அவருடைய பொன்னார் திரு வடிகளைப் போற்றிப் பணிந்து வேண் டுகின்றேன்.

திருமயிலாபுரியில் புன்னை மர நீழலில் வளர் பொற்கொடியான கற்பக வல்லி உடனாய கபாலீசுவரப் பெருமானின் திருவருள் எங்கும் நிறைந்து எல்லோரையும் மகிழ்ச்சியுடன் வாழ வைக்க வேண்டுமென்று பிரார்த்திக் கின்றேன்.

இங்ஙனம்
என்றும் சிவப் பணியில்,

[பூசை.ச.அருணவசந்தன் [எ] பூசை.ச.ஆட்சிலிங்கம்

குமார மஞ்சரி முருகப் பெருமானின் பெருமைகளைப் பேசும் நூல்
குமரப்பெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

திருமுருகன் திருவருளால் இந்த அழகன் முருகனின் இருபெரும்தேவியர் என்னும் இந்நூல் வெளிவரும்வேளையில்,இதற்கென செய்திதிரட்டுதல், தல யாத்திரை படம் சேகரித்தல், ஓவியம் தீட்டுதல் முதலிய பல்வேறு பணிகளுக்குத் துணை நின்றும்,அருட்கொடை வழங்கியும் சிறப்பித்த பின்வரும் அன்பர்களுக்கு எமது இனிய இதயங்கனிந்த நன்றி .

வாழி நலம் சூழ அன்பர் பூசை ச. அருணவசந்தன்

சித்தாந்த ரத்தினம் டாக்டர் விஸ்வ. ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி

ஸ்ரீமதி கோமதி ஹரிகரன் அஸ்தினாபுரம்
ஸ்ரீ மல்லிகார்ஜுனா சேவா டிரஸ்ட்,

திரு..M.S.முத்துக்குமார முதலியார்
மதுரவாயல்

திருமதி. விமலா சுப்ரமணியன்,
சித்தாந்தப் பேராசிரியை, தூத்துக்குடி

இருமொழிச்சீராளர்.திருவையாறு வே. ரமணன்
இருப்பு சிதம்பரம்

ப்ரம்மஸ்ரீ P.B.வெங்கட்ராமன்
ஆஷியானா சென்னை-18

திருமதி. பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41.

திரு.டி.கே. நீலகண்டன்,
அமைந்தகரை, சென்னை-29

சிதம்பரம் சீனு.அருணாசலம்
(அமைப்பாளர், சைவசித்தாந்தபயிற்சி மையம்)

தங்க.சொர்ணகுமார்
இராமாபுரம், சென்னை

டாக்டர்.வி.பி.ஆர்.வரதராஜன்
ராமராஜ் பாண்டியன் கிளினிக், சென்னை-4

திரு.ஏ.வெங்கடேசன்
கோரல் மினார், சென்னை-28

சிவஸ்ரீ.எல்.சங்கர்மாடம்பாக்கம், சென்னை

மோகனசம்பத், ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம், சென்னை

சிவத்திரு.எம்.சச்சிதானந்தம்,
தனலட்சுமி வங்கி, சென்னை

சித்தாந்த ரத்தினம். S. ரவீந்திரன்
தனலட்சுமி வங்கி, சென்னை

திருமதி. S. பத்மா.தனலட்சுமி வங்கி, சென்னை

திரு. ஜி.டி. நாடியன் செல்வன்.பெங்களூரு

திருமதி. சியாமளா ஸ்ரீநிவாசகோபாலன்
மேனாள் எஸ்.பி.ஐ. அதிகாரி, சென்னை

தில்லை. கார்த்திகேயன்
பொரசங்குறிச்சி, கள்ளக்குறிச்சி

திரு. என்.கார்த்திகேயன், திருவல்லிக்கேணி

சிவத்திரு மு.அபிராமன் கோவை

பேராசிரியர்.சத்யநாராயணா
ஐ.ஐ.டி. கிண்டி, சென்னை

சித்தாந்த ரத்தினம் டாக்டர் C.ரவிகுமார்
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை

குகஸ்ரீ எஸ். குமார்
மேனாள் ஸ்டேட்பேங்க் அதிகாரி, திருப்பூர்

சிற்பஸ்ரீ சாமி. சுப்பையா ஸ்தபதியார் (குமாரர்)

சிவஸ்ரீ. சுவாமிநாதன்(சிவா)காஞ்சிபுரம்

திரு. மல்லி. ஜினேந்திரதாஸ்
துணை இயக்குநர் சி.எல்.ஆர்.ஐ. சென்னை

திருமிகு. எம்.எஸ். ராமகிருஷ்ணன் பாண்டிச்சேரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சர்வம் சிவகுக மயம்

திருச்சிற்றம்பலம்

திருமிகு.டாக்டர். T.K.தேவராஜன்
திருமழிசை,சென்னை-124

சிவஸ்ரீ வி.எஸ். கல்யாணராமன் ஐ.பி.எஸ்(ஓ)
சுக்ருதா, மாருதி நகர், பெங்களூரு.

சிவஸ்ரீ. வி. ராம்குமார்
ஸ்ரீவத்சம், கோடம்பாக்கம், சென்னை-24

குருஜி. கே.கே. கோபாலன்சர்மா,
பரமேஸ்வரி நகர், அடையாறு,சென்னை-20

பிரம்மஸ்ரீ .சுந்தர. கிருஷ்ணமூர்த்தி
டிரஸ்டுஸ்கொயர், அயன்புரம்.சென்னை

திருமிகு.டாக்டர் .D.துரைரராஜ் ,
சி.எல்.ஆர்.ஐ.மருத்துவமனை,கிண்டி,சென்னை

திரு.L.ஆறுமுகம்,
(மேனாள் சுகாதாரஅதிகாரி, சென்னை மாநகராட்சி)

லால்குடி திரு. வேதநாராயணன், லண்டன்

நுண்கலை ஓவியர், திரு. சீனிவாசன்
சைதாப்பேட்டை, சென்னை-15

திருமிகு.இரா.இராமச்சந்திரன்
நூம்பல்.சென்னை

திருமிகு.இரா.முத்துக்குமாரசிவாச்சாரியார்
ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம், வாரன் ரோடு.சென்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்....

01. அழகன் முருகனின் இருபெரும் தேவியர் - அறிமுகம். ..01

02. கண்களில் தோன்றிக் கலந்த காதலர்கள். ...02

03. வள்ளி தெய்வயானையர் வரலாற்றுச் சுருக்கம் ...03

04. வள்ளி தெய்வயானையர் திருப்பெயர் விளக்கம் ...09

05. காமகோட்டத்து நாச்சியாராக வள்ளி, தெய்வயானையர் ...10

06. தனி அம்மனாக உலா வரும் வள்ளி தெய்வயானையர் ...12

07. அறுபடை வீடுகளில் வள்ளி தெய்வயானையர் ...14

08. திருச்செந்தூர் வள்ளி தெய்வயானையர் ...16

09. தென்பழனி வள்ளி தெய்வயானையர் ...20

10. சுவாமிமலை வள்ளி தெய்வயானையர் ...22

11. திருப்பரங்குன்றம் வள்ளி தெய்வயானையர் ...24

12. திருத்தணிகை வள்ளி தெய்வயானையர் ...26

13 திருப்போரூர் கந்தசாமி ஆலயத்தில் வள்ளி தெய்வயானையர் ...29

14. சென்னைமாநகர் முருகன் ஆலயங்களில் வள்ளி தெய்வயானையர்...32

15. காஞ்சிபுரம் குமரகோட்டத்து வள்ளி தெய்வயானையர் ...34

16. தெய்வயானையர் வழிபட்ட சக்தி லிங்கம் ...35

17. கொங்குநாட்டில் வள்ளி தெய்வயானையர் வழிபாடு ...37

18. திருமுருகன் வள்ளி தெய்வயானை திருமணவிழாக்கள் ...38

19, தெய்வயானை திருமணம் ...40

20. வள்ளி திருமணம் ...44

21. குறவர் தாங்கும் பல்லக்கு, படுகளம் ...52

22. பள்ளியறை வழிபாட்டில் வள்ளி தெய்வயானையர் ...53

23. வள்ளி மணவாளனாகவும் தேவசேனாதிபதியாகவும்
முருகன் வீற்றிருக்கும் திருத்தலங்கள் ...55

24. வள்ளிக்கு ஏற்றமளிக்கும் திருத்தலங்கள் ...59

25. தெய்வயானைப் பிராட்டியாரின் முளைப்பாரி விழா
எண்ணெய்காப்பு உற்சவம் ...65

26. வள்ளி தெய்வயானையுடனாய மணவிடக் குமரர் ...67

27. வள்ளியும் தெய்வயானையும் எழுந்தருளி பவனிவரும்வாகனங்கள்...69

28.முருகனின் அருள்வடிவங்களில் வள்ளி தெய்வயானையர் . ..71

29, இலக்கியம் காட்டும் வள்ளி தெய்வயானையர் ஏசலும் தெய்வயானையும் ஊடலும்..81

30. முப்பெருந்தேவியரும் வள்ளி தெய்வயானையரும் ...86

தேவர்தம் மகளே போற்றி!! தெய்வயானைப் பிராட்டியே போற்றி!!போற்றி!!
குறவர்தம்கொடியே போற்றி!! குமரனின் கொடிதோள் புணரும் வள்ளிதேவியே போற்றி!போற்றி!!

அழகன் முருகனின்

இருபெரும் தேவியர்

(ஸ்ரீவள்ளி,தெய்வயானையர் பற்றிச் செய்திக் கோவை)

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமானாகவும் தண்தமிழ்ப் பெருந்தெய்வ மாகவும் விளங்குபவன் முருகப்பெருமான். அவன் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்னும் முப்பெரும் சக்திகளை உடையவன். அச்சக்தியரில் ஞானசக்தியானது வேலாயுத மாகவும், இச்சாசக்தி தெய்வயானையாகவும், கிரியாசக்தி வள்ளியம்மையாகவும்அவனுடன் விளங்குகின்றனர்.

ஆதியில் குகனிடத்தில் இருந்த இச்சா சக்தியும், கிரியாசக்தியும் உலகநன்மைக்கா கவும்,அன்பர்களுக்கு அருள்புரிந்து மேன்மை அளிக்கவும், திருமாலின் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீராக வெளிப்பட்டு அழகிய பெண்களாக உருப்பெற்று முருகனை நோக் கித் தவம் செய்து அவருக்குத் தேவியரானர். அந்த இருபெரும்சக்தியரே வள்ளியும் தெய்வ யானையும் ஆவர். இந்த வரலாற்றைக் கந்த புராணம் முதலான புராணங்களும், வள்ளி யம்மை கதைப்பாடல் முதலான நாட்டுப்புற இலக்கியங்களும் விரிவாகக் கூறுகின்றன.

சமய இலக்கிய நூல்கள் பலவற்றிலும் வள்ளி, தெய்வயானையர் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்றாலும், முருகன் ஆலயங்களில் நடைபெறும் நாள் வழிபாட்டிலும், விழாக்களிலும் அவர்கள் பெற்றுள்ள சிறப்புகளை விளக்கிக் கூறும் வகை யில் வெளிவந்த நூல்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவே. மேலும், இச்செய்திகள் வட்டார நடைமுறைக்கேற்பத் தலத்திற்குத் தலம் வேறுபடுவதுடன், அன்பர்களின் சமய வாழ்வியல் செயல்பாடுகளுக்கு ஏற்பவும் மாறுபடுகின்றன. இவை ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டவைகளாக உள்ளன.

முருகன் திருத்தலங்களில் இவர்களுக்குச் செய்யப்படும் பூசைகள் விழாக்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாக **அழகன் முருகனின் இருபெரும்தேவியர்** என்னும் இந்நூல் மலர்ந்து தங்கள் கரங்களில் தவழ்கிறது.இதில் உள்ள செய்திகளை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கற்பகவல்லி மைந்தனான செவ்வேட் பரமனும்,அவனது மனைவியரான வள்ளி, தெய்வயானையரும் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வைத் தந்து, இன்பமுடன் வாழவைக்க வேண்டு மென்று அவர்தம் பொன்னார் திருவடிகளில் பணிந்து வேண்டி நிற்கின்றேன். - சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்களில் தோன்றிக் கலந்த காதலர்கள்

சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து ஆறு நெருப்புப் பொறிகளாகத் தோன்றி உருப்பெற்றவன் ஆறுமுகப் பெருமான். அதனால் அவனைத் தீயின் வடிவமாகப் போற்றுகின்றனர். அவனைப் போலவே,அவனது தேவியர்களான வள்ளியும்தெய்வயானையும் திருமாலின் கண்களின் வழியேதோன்றியவர்கள் என்பது புராண வரலாறாகும்.இவர்கள் திருமாலின் தாமரை போன்ற கண்களில் இருந்து வெளிப்பட்ட ஆனந்தக் கண்ணீர்த் துளிகளிலிருந்து தோன்றியவர்கள். முருகன் நெருப்பு வடிவினன் என்றால் இவர்கள் தண்ணீரின் வடிவானவர்கள் என்பது குறிப்பிடத் தக்க தாகும்.சிவம் நெருப்பாகவும், சக்தி நீர் வடிவாகவும் இருப்பதைப் போலவே இவர் களும் நீரும் நெருப்புமாக உள்ளனர்.

சிவனின் கண்களில் இருந்து தோன்றிய முருகனும், புருஷசக்தி வடிவான திருமாலின் கண்களில் இருந்து தோன்றிய வள்ளியும் தெய்வயானையும் தம்முள் அன்பில் கலந்த காதலர்களாக விளங்கி, அன்பர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர். இலக்கியங்கள் இவர்களைக் கண்களில் தோன்றிக் கலந்த காதலர்கள் என்று போற்றுகின்றன.

இருமுறை கண்வழி வந்த வள்ளி

முருகனின் இருபெரும் தேவியர்களான வள்ளி, தெய்வயானையரில் முதலாவதான தெய்வயானைப் பிராட்டியார் ஒரு முறை மட்டுமே செந்தாமரைக் கண்ணனின் கண் வழியே வெளிப்பட்டு, அமுதவல்லி என்னும் பெயரில் விளங்கித் தவம்புரிந்தாள். பின்னா ளில் முருகன் ஆணையால் வாசவன் மகளாக வளர்ந்து அவரை அடைந்தாள்.

வள்ளியம்மையாரோ, · இரண்டாவது முறையாகவும்,திருமாலின் கண்களிலிருந்து வெளிப்பட்டதாகக் கந்தபுராணம் கூறு கின்றது.முதலில் அவள் பாம்பணையில் பள்ளிகொண்டிருந்த திருமாலுக்கு ஆனந்த மேலீட்டால் விளைந்த மகிழ்ச்சியின் அடை யாளமாக வெளிப்பட்ட கண்ணீர்த் துளிகளில் இருந்துதோன்றி, சுந்தரவல்லி என்ற பெயரில் வளர்ந்தாள்.

பின்னர், முருகன் ஆணையால் குறக் குடியில் தோன்ற எண்ணம் கொண்டாள். அதற்கு முன்பாக அவள் பூவுலகம் வந்து தவம் மேற்கொண்டாள்.

ஒரு சமயம் திருமால் முனிவன் வடிவு கொண்டு வள்ளி மலையை அடைந்து சிவ வழிபாடு செய்து வந்ததுடன், தவத்திலும் மூழ்கிக் களித்திருந்தார். அந்த மலைச் சாரலி லேயே திருமகள் மான் வடிவு கொண்டு வசிந்துவந்தாள். ஒரு சமயம் அவள் தவம் புரிந்து கொண்டிருக்கும் திருமாலின் முன்பு துள்ளிக்குதித்து விளையாடிக் கொண்டிருந் தாள்.அந்த அழகிய மானைக் கண்ட திருமால், காமம் மேலிட்டு அதனை அன்புடன் நோக் கினார்.தவத்தில் திளைத்திருந்த சுந்தர வல்லி, அந்தச் செயலைக் காரணமாகக் கொண்டு மகாலட்சுமியின் திருவயிற்றுக் கருவினை அடைந்து வளர்ந்து, உரியகாலத்தில் அழகிய குழந்தையாக வெளிப்பட்டாள்.

மானாக இருந்த மகாலட்சுமி, அக்குழந்தை யை வள்ளிக் கிழங்கை அகழ்ந்தெடுத்தால் உண் டான குழியில் விட்டுச்சென்றாள். குழந்தையைக் கண்டெடுத்த வேடர் குலத்தலைவன்அதற்கு வள்ளி என்று பெயர் சூட்டி வளர்த்தான். இப்படி இரு முறை திருமாலின் கண்களிலிருந்து வெளிப்பட்ட வளாக வள்ளி திகழ்கிறாள். இதனை, காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால் வாம மடமானின் வயிற் றுதித்து பூமருவு கானக்குறவர் களிப்பூரப் பூங்குயில் போல் ஏனப் புனங்காத்து இனிதிருந்த வள்ளி என்று குமரகுருபரர் குறிப்பிட்டுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி தெய்வயானையர் வரலாற்றுச் சுருக்கம்

ஒரு சமயம் திருமால், யோகநிலையில் இருந்தவாறு சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்துக்கொண்டிருந்தார். அந்த அற்புத நடனத்தில் லயித்திருந்ததால், அவர் உள்ளத்தில் எல்லையற்ற இன்பம் பொங்கியது. அதன் வெளிப்பாடாக அவருடைய அழகிய கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வெளிப்பட்டது. அந்த ஆனந்தக் கண்ணீர்த் துளிகள், மகாலட் சுமியின் அருளுடன் இரு பெண்களாக வடிவு கொண்டன. அவர்களைக் கண்டு மகிழ்ந்த திருமாலும், மகாலட்சுமியும் அவர்களைத் தமது குமாரத்திகளாகஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு அமுதவல்லி, சுந்தரவல்லி என்று பெயர் சூட்டி, அன்புடன் வளர்த்துவந்தனர்.

அவர்களுக்குத் திருமால் மந்திர உபதேசம் செய்து முருகனை நோக்கித் தவம் செய்து, அவரைக் கணவனாக அடையுங்கள் என்றார். திருமாலின் விருப்பப்படியே அவர்கள் தவம் மேற்கொண்டனர்.

அவர்களது ஒப்பற்ற தவத்தால் மகிழ்ந்த முருகன் அவர்கள் முன்னே தோன்றினார். அவர்களிடம் அன்பு பாராட்டி அவர்கள் விரும்பியவாறே அவர்களைத் திருமணம் செய்து கொள்வதாக வரமளித்தார்.

சுந்தரவல்லியை மண்ணுலகிலும், அமுதவல்லியைத் தேவர் உலகிலும் பிறக்கும்படிக் கூறினார். அதன் படியே அவர்கள் வள்ளியாகவும் தெய்வயானையாகவும் பிறந்து முருகனை மணந்து கொண்டனர் என்றுபுராணங்கள் கூறுகின்றன.

அமுதவல்லி, இந்திர உலகத்தை அடைந்து அங்கிருந்த பொய்கையில் மலர்ந்திருந்த நீலோற்பல மலரில் குழந்தை யாகத் தோன்றினாள். தேவேந்திரனும் இந்திராணியும் அவளைக் கண்டெடுத்து மகளாக வளர்த்தனர்.

கற்பகவிருட்சத்தின் கீழே காமவல்லியால் கட்டப்பட்ட, தங்கத் தொட்டிலில், ஐராவதம் எனும் யானையால் வளர்க்கப்பட்டு மேன்மை பெற்றிருந்தாள். தேவர்களாலும் யானையாலும் வளர்க்கப்பட்டதால் அவளுக்குத் தெய்வயானை என்று பெயர் சூட்டினர். அவள் தெய்வலோகத்தின் இனிய சூழலில் வளர்ந்துவந்தாள்.

ஒரு சமயம் பிரம்ம தேவனிடம், 1008 அண்டங்களை 108 யுகங்கள் ஆட்சிபுரியும் படியானஅரியவரத்தைப் பெற்று சூரபத்மன், தன் சுற்றத்தாருடன் பெருஞ்சிறப்புடன்

அமுதவல்லியும் சுந்தரவல்லியும் திருமாலிடம் உபதேசம் பெறுதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமுதவல்லியும் சுந்தரவல்லியும் முருகனிடம் வரம் பெறுதல்

ஆட்சிபுரிந்து வந்தான். அவன் அசுரனுக்குரிய இயல்பால்தேவர் களைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான். அவனுக்கு அஞ்சிய தேவேந்திரன் சீர்காழிக்குச் சென்று அங்கிருந்த மூங்கில் வனத்தில் ஒளிந்திருந்தவாறே சிவபெருமானைப் பிரார்த்தித்து வந்தான். அவனுடைய வேண்டுகோளை ஏற்றுச் சிவ பெருமான் , சூரபத்மனை அழிக்கத், தனது நெற்றிக்கண்களில் இருந்து முருகப்பெருமானைத் தோற்றுவித்தார்.

முருகன், சூரபத்மனோடு பெரும்போர் நடத்தி அவனது படைகளை அழித்தார். இறுதியில் போருக்கு வந்த சூரபத்மன், பற்பல மாயங்களைப் புரிந் தான். அவற்றால் முருகனை வெல்ல முடியாது தோற்ற அவன், இறுதியில் கடலின் நடுவே ஒரு மாமரமாக நின்றான். அந்த மரத்தை முருகன் தன் கை வேலால் இரு கூறுகளாகப் பிளந்தார். அவை மயிலும் சேவலும் ஆயின.

அருள்மிகு வள்ளிதேவி

முருகன் அவற்றிற்கு அருள் புரிந்து மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடி யாகவும் ஏற்றுக் கொண்டார். சூரனால் சிறை வைக்கப்பட்ட தேவர்களைச் சிறையில் இருந்து விடுவித்தார்.

விடுதலை பெற்ற தேவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் தமக்கு வெற்றி தந்த முருகப்பெருமானுக்குத் தமது தலைவன் இந்திரனின் மகளான தெய்வ யானையைத் திருமணம் செய்து வைத்தனர். தெய்வயானையுடன் முருகன் எழிலுடன் வீற்றிருந்து தேவர்களுக்கு அருள்பாலித்தார்.

... ...

முருகனின் ஆணைப்படி, பூவுலகம் வந்த சுந்தரவல்லி தவம் செய்வதில் விருப்பம் கொண்டவளாய். ஒரு மலைக் குகையில் யோகத்தில் வீற்றிருந்தாள்.

அவளிருந்த மலையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் நம்பிராஜன் என்னும் குறவர் குலத்தலைவன் ஆண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தான். அவன் சிறந்த சிவபக்தன். அவனுக்கு ஒன்பது புதல்வர்கள். எல்லோருமே வீரதீரர்கள். அவனுடைய மனதில் தனக்கு ஒரு பெண் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் இருந்தது. அவன் தமது குறவர் குல தெய்வமான முருகனை வழிபட்டுத் தமக்குப் பெண்குழந்தையை அருளுமாறு நோன்பிருந்தான்.

இப்படி,இருக்கும் நாளில் அவனுடைய மலைச்சாரலில், திருமால் யோகியாக எழுந்தருளித் தவம்புரிந்து கொண்டிருந்தார். அங்கு மகாலட்சுமி மானாக வடிவெடுத்து வந்து அவர் முன்னே துள்ளிக் கொண்டிருந்தாள். யோக நிலையில் இருந்த திருமால், தன் முன்னே துள்ளித்திரியும் மானை இச்சையுடன் நோக்கினார். அந்தச் செயலைத் தனது யோகத்தால் அறிந்த வள்ளிதேவி அதையே காரணமாகக் கொண்டு திருமாலின் கண் வழியாகப் புகுந்து மான் வயிற்றிலுள்ள கருவை அடைந்தாள். மான் கருவுற்றது.

உரிய வேளையில் அந்தப் பெண் மான், குட்டியாக அவளை ஈன்றது. தான் ஈன்ற குட்டி தன்னைப் போல் மானாக இல்லாமல் பெண் குழந்தையாக இருப்பதைக் கண்ட அந்தமான் அஞ்சி, குழந்தையை வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் விட்டுவிட்டு ஓடியது.

அக்கணமே, மகாலட்சுமியின் மான் வடிவம் நீங்கியது.அவள் தான் ஈன்ற அக் குழந்தையைத் தழுவி மகிழ்ந்தாள். திருமாலும் தனது யோகநிலையை விடுத்து, அங்கே வந்தார். இருவரும் குழந்தையை வாழ்த்தி விட்டு வைகுண்டம் சென்றனர்.

வள்ளிக்கிழங்கை அகழ்ந்த குழியில் அவர்கள் விட்டுச் சென்ற குழந்தை அழுது கொண்டிருந்தது. அந்த ஒலியைக் கேட்டு அவ்வழியே வந்த நம்பிராஜனும் அவனது புதல்வர்களும் குழந்தையைக் கண்டனர்.

முருகன் வேடனாக வந்து வினாவுதல்

மிகுந்த மகிழ்ச்சிகொண்டனர். சுற்றி எங்கு தேடியும் குழந்தைக்கு உரியவர்கள் கிடைக்காததால், நம்பிராஜன் இறைவன் தனக்களித்த செல்வமாகவே எண்ணி, அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு தன் இல்லத்திற்குச் சென்றான்.

அவன் மனைவி அக்குழந்தையை அன்புடன் வாங்கிக் கொண்டாள். குறவர் குலமே அக்குழந்தையைத் தம் குலக்கொடியெனச் சிறப்புடன் கொண்டாடியது. வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியிலிருந்து கிடைத்ததால் அவளுக்கு வள்ளி என்று பெயர் சூட்டினர்.

வள்ளிதேவி நாள் ஒருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மங்கைப் பருவம் எய்தினாள்.

வேடர்கள், குலவழக்கப்படி அவளைத் தினைப்புனம் காக்க அனுப்பினர். அவள் தம் தோழியருடன் தினைப்புனத்திற்குச் சென்று அங்கு காவல் தொழில் பூண்டாள். தினைக் கதிர்களைத் கொத்தித் தின்னவரும் கிளி, குருவி, மைனா முதலிய பறவைகளைக் கவண்கல் எறிந்து துரத்தி ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தாள். அதே சமயம் அவள் முருகப் பெருமானைத் தம் மனதிற்குள் எண்ணித் தவம் இருந்தாள்.

முருகன் சூரனை வென்று தெய்வயானையை மணந்தபின் திருத்தணிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மதயானை துரத்த வள்ளி முருகனைத் தாவி அணைத்துக் கொள்ளுதல்

மலைக்குவந்து யோகத்திலிருந்தார். நாரதர் அவரிடம் வந்து அருகிலுள்ள வள்ளிமலையில் வாழ்ந்து வரும் தெய்வீக மகளான வள்ளிதேவியின் சிறப்புகளையும், பெருமைகளையும் அழகையும் எடுத்துக் கூறினார்.

முருகன் வள்ளியம்மைக்கு அருள் புரியத் திருவுள்ளம் பற்றினார். வள்ளிமலைக்குச் சென்று, அவள் காவல் காத்து நிற்கும் தினைப்புனத்தை அடைந்தார். வேடனாக உருத்தாங்கி அவள் முன் சென்றார். அவளை அன்புடன் நோக்கினார்.

"பெண்ணே! நான் ஒரு அழகிய மானைக் கண்டேன். அதைப்பிடிக்கத் துரத்தி வந்தேன். அது இந்தப் பக்கம்தான் ஓடிவந்தது. அதைக் கண்டீர்களா? என்றார். தொடர்ந்து காதல் மொழிகளைப் பேசி அவளைப் புகழ்ந்தார்.

அவரைக்கண்டு வள்ளியின் மனம் முன்னைத்தவத்தால் மகிழ்ந்தது என்றாலும் அவரிடம் இங்கே மான் எதுவும் வரவில்லையே என்றாள்.

வந்த வேடனோ,"பெண்ணே! நான் தேடி வந்த வனமான் தேவையில்லை. புன மானாகிய உன்னைக் கண்டதும், உன் மீது காதல் கொண்டுவிட்டேன்,நீ இன்றி என்னால் வாழ முடியாது என்று பலவாறு இனிய காதல் மொழிகளைப் பேசிக் கொண்டே இருந்தார்.

வள்ளி சிரித்தாள், "வேடனை நோக்கி நீ உயிர் பிழைத்திருக்க விரும்பினால் இங்கிருந்து ஓடிவிடு. எம் தந்தையாரும் சகோதரர்களும் மிகவும் கண்டிப்பானவர்கள்.அவர்கள் இங்கு உம்மைக் கண்டால் தண்டிப்பார்கள். அவர்கள் வருமுன்பாக இங்கிருந்து ஓடிவிடு அதுவே உமக்கு நல்லது" என்றாள்.

அந்தச் சமயம், நம்பிராஜனும் அவனது புதல்வர்களும்அங்குவரும் அரவம் கேட்டது.

முருகன் உடனே உருமாறி அங்கு ஒரு நெடிய வேங்கை மரமாக நின்றார். அங்கு வந்த நம்பிராஜனும், அவனது புதல்வர்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தப் புதிய மரத்தைக் கண்டு வியந்தனர்.

''நேற்று வரை இல்லாத இந்த மரம் எப்படி இங்கு வந்தது. இது மாயமாய்த் தோன்றுகிறது. இதனால் நமக்கு ஏதேனும் தீங்கு உண்டாகலாம். இதனை உடனே, வெட்டி விடவேண்டும்" என்றனர்.

வள்ளி நிழல் தரும் அம்மரம் இருக் கட்டும்" என்றாள். அப்போது முருகன் அங்கு மரத்தில் பல்லியைத் தோற்றுவித்து ஒலி எழுப்பும்படிச் செய்தார். அந்த ஒலியைச் சுப சகுனமாக எண்ணிய அவர்கள் மரத்தை வெட்டும் எண்ணத்தை கைவிட்டனர்.

வள்ளியிடம் உண்பதற்குத் தேன், தினை மாவு, காட்டுப் பசுவின் பால் முதலிய வற்றை அளித்துக் கவனமாக இருக்கும்படிக் கூறிவிட்டு அவ்விடம் விட்டு அகன்றனர்.

அவர்கள் சென்றதும் மீண்டும் முருகன் வேடனாகத் தோன்றி காதல் மொழிகளைப் பேசினான்.

"நீர், இங்கிருந்துசெல்லும்.நான் முருக னை யன்றி மற்ற எவரையும் மணம் புரியேன் என்றாள் வள்ளி. நம்பிராஜனும் புதல்வர் களும் மீண்டும் அங்கே வரும் ஒலி கேட்க, முருகன் மறைந்தான்.

நம்பிராஜன் வரும் வழியில் அவன் முன்னே வயதால் மூத்து வாடும் வயோதிக னாக வடிவெடுத்து முருகன் நின்றான்.நம்பி ராஜன் அவரை வணங்கினான். முருகன் அவனுக்குத் திருநீறு அளித்து ஆசி கூறினார். பெரியவரே கொடிய க்காட்டில் ஏன் வந்தீர் என்றான் நம்பிராஜன்.

வயோதிகனாக வந்தமுருகன் அன்பனே, குமரித்துறையில் நீராட வந்தேன். இவ்விடம் என் மனத்தைக் கவர்ந்து விட்டது. சில நாள்கள் இங்கிருக்கலாம் என எண்ணுகி றேன். முடிந்தால் நீ அதற்கான ஏற்பாட்டி னைச் செய்க என்றார்.

வள்ளியைக் களவு கொண்டு வரும் முருகன்

அவன்,அவரிடம் ஐயனே நீங்கள் இங்கேயே தங்கலாம். எமது மகள் உமக்குத் துணையாக இருப்பாள் என்றான். அவரை அழைத்துச் சென்று வள்ளியிடம் விடுத்து இவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்க என்று கூறிவிட்டு அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டான்.

அவன்,சென்றபின் வள்ளியிடம் வயோ திகனாக வந்த முருகன், பெண்ணே! நான் மிகுந்த பசியாலும், பயணத்தாலும் சோர்ந்து களைத்திருக்கிறேன். உண்பதற்கு உணவு ஏதாவது இருக்கிறதா? என்றான்.

வள்ளி அவருக்குத், தேனுடன் தினை மாவைக் கலந்து பரிவுடன் அளித்தாள். அதை உண்ட அவர் தனக்கு விக்கல் வந்தது போல் நடித்தார். அவரது துன்பத்தைக் கண்ட வள்ளி, அருகிலுள்ள சுனைக்கு அழைத்துச் சென்று தண்ணீர் முகந்து தந்தாள். அவன் ஆவலுடன் அதைப் பருகினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியவரே! தாகம் தீர்ந்ததா என்றாள் வள்ளி. முருகன் பெண்ணே எனது தாகம் தீர்ந்து விட்டது. ஆனால் உன்மேல் நான் கொண்ட மோகம் தீரவில்லை என்னை இப்போதே திருமணம் செய்து கொள் என்று கூறித் தாவி அணைத்தார்.

வள்ளி கோபித்தாள். அவரது பிடியி லிருந்து விடுவித்துக் கொண்டு, நான் முருகனை மணக்க உள்ளவள். நீர் சற்று தள்ளி இரும், என்றாள். அவரோ அவளைத் தாவிப் பிடிக்க வந்தார். அவள் ஓடினாள்.

முருகன் தன் அண்ணனான கணேசனை உதவிக்கு அழைத்தார். அவர் பெரிய யானை யாக அங்கு தோன்றினார். துதிக்கையை உயர்த்திப்பெருத்த குரலெடுத்துப் பிளிறினார். வள்ளி அந்த யானையைக் கண்டு அஞ்சி பெரியவரைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

அவ்வேளையில், முருகன் விளையாடி யது போதும். இவளுக்கு அருள்புரிவோம் என்று எண்ணித் தமது உண்மை வடிவுடன் வெளிப்பட்டார். வஜ்ர, சக்தியுடன் ஞான வேல் ஏந்தி மயில்மீது ஆறுமுகனாகக் காட்சி யளித்தார். அதைக் கண்டு அவள் வியந்து பணிந்து வணங்கினாள்.

அவர் அவளுக்கு ஞான உபதேசம் செய் தார். அவளும் நாம் அடைவதற்கு உரியவர் இவரே எனத் தெளிந்தாள். அவரை உடனே களவு மணம் புரிந்து கொண்டாள். அவர்கள் இருவரும் சுனைகளில் நீராடியும், சோலை களில் ஆடியும் பாடியும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். நடந்ததை அறிந்த நம்பிராஜனும் அவனது புதல்வர்களும் கோபித்தனர். வள்ளி யை அழைத்துப் போக வந்தனர்.

முருகன் வள்ளியை மயில் மீது வைத்துக் கொண்டு பூரணகிரியை(திருத்தணிகை) நோக்கி விரைந்தார்.

நம்பிராஜனும், அவனது புதல்வர்களும் குறக்குடி மறவர்களும் முருகனைத் துரத்தி வந்து அவனோடு போர் புரிந்தனர். போர் கடுமையானது. அவ்வேளையில் முருகனின் சேவல் கடுங்குரல் எடுத்துக் கூவியது. அந்தக் கடுங்குரலால் தாக்குண்ட குறவர்கள் அனை வரும் மாண்டனர்.

நாரதரும் வள்ளியும், அவர்களை உயிர்ப் பித்து அருளும்படி வேண்டினர். முருகன் சேவலை நோக்கினார். அது மீண்டும் பெருங் குரலெடுத்துக் கூவியது. அனைவரும் துயில் நீங்கி எழுவது போல் எழுந்தனர். நாரதர் நம்பிராஜனுக்கும் சுற்றத்தினருக்கும் வந்தவர் முருகப் பெருமானே என்பதை உணர்த்தி வள்ளியை அவருக்குத் திருமணம் செய்து கொடுக்கும்படி அறிவுரை கூறினார்.

குறவர் குல முறைப்படி முருகனுக்கும் வள்ளிக்கும் சிறப்பானமுறையில் திருமணம் நடைபெற்றது. நாரதர் முன்னின்று திருமண வேள்விபுரிந்து, திருமணச் சடங்குகளைச் செய்தார். வள்ளியை மணந்து வள்ளி மண வாளனாக முருகன் எல்லோருக்கும் காட்சி யளித்தார்.

வானில் நின்று வானவரும் சிவபெரு மானும் உமாதேவியும் அரி, பிரமன் முதலா னோரும் வாழ்த்திப் பூமழை பொழிந்தனர்.

முருகன் குறவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு பூர்ணகிரியான திருத்தணிகை மலையை அடைந்து, அங்குச் சிலகாலம் வள்ளியுடன் தங்கியிருந்தார். பின்னர் தெய்வலோகத்திற்குத் திரும்பினார்.

வள்ளியை அழைத்துச் சென்று தெய்வ யானையிடம் விடுத்தார். அவள் தமக்கு உற்ற துணை கிடைத்ததென்று மகிழ்ந்தாள். சில நாட்கள் கழிந்தன. பின்னர் மூவருமாகப் பழமுதிர்ச்சோலையை அடைந்தனர். அங்கே யே நிலையாகத் தங்கி அன்பர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி, தெய்வயானை
திருப்பெயர் விளக்கம்

வள்ளி-வேடர்குல வனிதையான வள்ளியம்மையைத் தமிழில் வள்ளி என்றும், வடமொழியில் வல்லீ என்றும் அழைக்கின் றனர். வள்ளல் தன்மை உடையவளாக இருப்பதால் அவள் வள்ளி எனப் பெயர் பெற்றாள் என்பர். கருணை வள்ளலாக விளங்கும் முருகப்பெருமானின் தேவியாத லின் அவள் வள்ளி என அழைக்கப்படுகிறாள் என்பர்.

வள்ளம் என்பது நீராகும். வள்ளத்துள் வந்த தேவியாதலின் அவள் வள்ளி எனப் பட்டாள் என்பர். சிவபெருமான் செந்தீயா கவும், அவன் தேவியான பார்வதி தண்ணீரா கவும் இருப்பது போலவே முருகன் செந் தழற் பிழம்பாகவும் அவனது தேவியான வள்ளி தண்ணீராகவும் விளங்குகின்றாள் .

புராணங்கள், திருமாலின் கண் வழியே வெளிப்பட்டு, மான் வடிவில் இருந்த மகா லட்சுமியின் வயிற்றில் சுந்தரவல்லி புகுந்தாள் என்றும், உரிய காலத்தில் மகா லட்சுமி அவளைப் பெண்ணாகப் பெற்று வள்ளிக் கிழங்கை அகழ்ந்ததால் உண்டான குழியில் அவளை விட்டுச் சென்றாள் என்று கூறுகின்றன. அவ்வழியாக வந்த நம்பிராஜன் அக்குழந்தையைக் கண்டெடுத்து, வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியிலிருந்து பெற்றதால் வள்ளி என்று பெயர் சூட்டினான் என்பர்.

வள்ளி என்பதே பெருவழக்காக வழங் கும் தமிழ்ப்பெயராகும். வடமொழியில் ள இல்லாததால், ஆகமங்களிலும் சில புராண நூல்களில் மட்டுமே அவள் வல்லி என்று போற்றப்படுகிறாள். அன்பர்களுக்கு உதவும் கற்பக மரமான முருகனைத் தழுவிப் படரும் காமவல்லியாக இருப்பதால் அவள் வல்லீ எனப்பட்டாள் என்பர்.

முருகனின் முதற்தேவியான அமுத வல்லியைத் **தெய்வயானை** என்று தமிழி லும், தேவசேனா என்று வடமொழியிலும் அழைக்கின்றனர்.

தெய்வத்தன்மை கொண்ட ஆனை யாகிய ஐராவதத்தால் வளர்க்கப்பட்டவள் என்னும் காரணம்பற்றி அவள் தெய்வ யானைப் பிராட்டியார் என்று தமிழில் அழைக்கப்படுகிறாள்.

தமிழில் ஆன் என்பது மிகச் சிறந்தது என்பதைக் குறிக்க முன்னொட்டாக வழங் கும் சொல். எடுத்துக்காட்டாக ஆயர், ஆனாயர் என்றும், பட்டீச்சரம், ஆன் பட்டீச் சரம் என்றும்,கொங்குநாட்டுப் பொருனை, ஆன் பொருனை எனவும் அழைப்பது இங்கே நோக்கத் தக்கதாகும்.

தெய்வ நலன்கள் பொருந்திய சிறப்பு களைப் பெற்ற பெண் என்ற பொருளைத் தருவதாக(தேவ+ஆன்+ஐ) தேவயானை எனும் சொல்அமைகிறது. இதையொட் டியே தேவர்குலத்தில் சிறந்த பெண்ணாகத் தோன் றியவளும் முருகனின் முதல்தேவியுமான அமுதவல்லியைத் தெய்வானைப்பிராட்டி யார் என்று அழைக்கின்றனர்.

சேனா என்ற வடமொழிச் சொல்லுக்கு காப்பது என்பது பொருள். தேவர்கள் குலத் தைக் காக்க வந்தவளாதலின், அவள் தேவ சேனா என்று அழைக்கப்படுகின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமகோட்டத்துப் பரமநாச்சியராக விளங்கும்

ஸ்ரீ வள்ளி, தெய்வயானையர் சந்நிதிகள்

பெருந்தெய்வ வழிபாட்டில் ஆண் தெய்வங்களுக்கென அமைந்த பெருங்கோயில்களில் அத்தெய்வத்தின் தேவியான பெண் தெய்வத்திற்கும் தனிஆலயம் அமைத்துள்ளனர்.

சைவ ஆலயங்களில் சிவபெருமானின் தேவியான பார்வதிதேவிக்குத் தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகள் இவற்றைக் காமகோட்டம் என்று குறிப்பிடுகின்றன. இதில் எழுந்தருளியிருக்கும் உமாதேவியை அவை **காமகோட்டத்துப் பரம நாச்சியார்** என்று அழைக்கின்றன.

திருமால் ஆலயங்களில் அவரது தேவியர்களான ஸ்ரீதேவியான மகாலட்சுமிக்கும், பூதேவியான ஆண்டாள் நாச்சியாருக்கும் தனி ஆலயங்கள்அமைக்கப்படுகின்றன. இவ்விதம் அமையும் மகாலட்சுமி சந்நிதியைத் தாயார் சந்நிதி என்றும், ஆண்டாள் சந்நிதியை நாச்சியார் சந்நிதி எனவும் அழைக்கின்றனர்.

ஜைன ஆலயங்களிலும் காமகோட்டத்து நாச்சியார் எனும் பெயரில் தர்மதேவி, பத்மாவதி, ஜ்வாலாமாலினி முதலிய பெண் தெய்வங்கள் வீற்றிருக்கும் தனிச்சிற்றாலயங்களை அமைத்துள்ளனர். பௌத்தர்கள் ஆலயத்திலும், மஞ்சுஸ்ரீ, நீலசரஸ்வதி முதலிய பெண் தெய்வங்களுக்கென சந்நிதிகள் உள்ளன.

முருகன் ஆலயங்களில் அவரது தேவியரான வள்ளிக்கும், தெய்வயானைக்கும் தனிச் சந்நிதிகள்அமைக்கும் வழக்கம் உள்ளது. திருவிடைக்கழி, திருப்போரூர், முதலிய இடங்களில் தெய்வயானைப்பிராட்டியார் பெரிய துணையாலத்தில் எழுந்தருளி, அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

திருச்செந்தூர், திருத்தணி முதலிய தலங்களில் பிராகாரத்தில் ஸ்ரீவிமானத்துடன் தனிச் சந்நிதிகள் அமைத்து, அதில் வள்ளியையும், தெய்வயானையையும் தனித்தனியே எழுந்தருளுவித்து வழிபடுகின்றனர்.

திருச்செந்தூர், வள்ளிமலை, பழனி, வள்ளியூர் முதலிய தலங்களில் வள்ளிதேவிக்கெனத் தனிச் சிற்றாலயங்கள் கோயிலுக்கு வெளியே இருக்கின்றன.

அருள்மிகு தெய்வயானைப் பிராட்டியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொங்கு நாட்டில் பெரும்பாலான முருகன் ஆலயங்களில்,அவன் தண்டாயுதபாணியாகவே எழுந்தருளியுள்ளான். இத்தகைய தலங்களில் ஆலயத்திற்கு வெளியே அமைந்த சிறிய சந்நிதியில் வள்ளி தெய்வயானையர் ஒரே பீடத்தில் இருப்பதைக் காணலாம்.

சில தலங்களில் மட்டுமே வள்ளியும், தெய்வயானையும் தனிக் கோயில்களைக் கொண்டுள்ளனர் என்றாலும் அவை தனிச் சிறப்பு மிக்கவைகளாக உள்ளன.

இவ்விதம்,முருகன் ஆலயங்களில் தனிவள்ளியும், தனி தெய்வயானையும் எழுந்தருளியிருக்கும் இடங்கள் யாவும் காமகோட்டங்களேயாகும்.

அருள்மிகு வள்ளியம்மை முகப்புச் சிற்பம்

சிற்ப உலகில் வள்ளி தெய்வயானையர்

சிவபெருமான்,திருமால்,பிரமன், முருகன் முதலியோருடன் எழுந்தருளியிருக்கும் அவர்களது தேவியர்கள் இரண்டு கைகளுடனேயே இருப்பர்.

அதே பெண் தெய்வங்கள் தனித்த நிலையில் இருக்கும்போது நான்கு கைகளுடன் காட்சியளிக்கின்றனர். எடுத்துக் காட்டாகச் சிவ வடிவங்களில் பராசக்தி சிவபெருமானுடன் அமைந்திருக்கும் வேளையில் இரண்டு கரங்களுடனும், தனிச் சந்நிதியில் எழுந்தருளும் போது நான்கு கரங்களுடன் இருப்பதைக் காண்கிறோம். இது போன்றே திருமாலுடன் இருக்கும் போது,திருமகள் இரண்டு கரங்களுடனும் தனிக் கோயிலில் இருக்கும் போது நான்கு கரங்களுடனும் காட்சி தருகின்றாள்.

முருகன் ஆலயங்களில் பொதுவாக, தனி வள்ளி,தனித் தெய்வயானையரை இரண்டு கரங்களுடனேயே அமைத்துள்ளனர். சிற்பக்கலை மரபையொட்டி தனித்தெய்வயானையை நான்கு கரங்களுடன் அமைக்கும் வழக்கமும் இருந்துள்ளது.திருப்போரூர் அதை அடியொற்றி அமைந்த சென்னை குசப்பேட்டை கந்தசாமி கோயில், சென்னை ஜார்ஜ்டவுன் கந்தசாமி கோயில் இவற்றில் மூலமூர்த்தியாக விளங்கும் தெய்வயானை நான்கு கரங்களுடன் அமைந்திருக்கின்றனர்.

மேலும், தெய்வமாக இருந்தாலும் மண்ணுலகில் தோன்றி மக்களுடன் வாழ்ந்து, அருள் விளையாடல்களைப் புரிந்த மீண்டும் தன்னுலகிற்குத் திரும்பியதெய்வங்களை அமைக்கும் போதும், அவர்களை இரண்டு கரங்களுடன் இருப்பதாகவேஅமைத்தனர். மதுரை மீனாட்சி, நெல்லை காந்திமதி,சங்கரன் கோயில் கோமதி என தென்னாட்டு அம்பிகையர் இரண்டு கைகளுடன் அமைக்கப்பட்டிருப்பது நிந்தஎடுத்துக் காட்டாகும். இவ்வகையில் வள்ளியம்மையும் இரண்டு கைகள் கொண்டவளாகவே அமைக்கப்பட்டுள்ளாள்.

சென்னை குயப்பேட்டை கந்தசாமி கோயிலில் நான்கு கரங்களுடன்உள்ள தெய்வயானையும், இரண்டுகரங்களை உடைய வள்ளியும் எதிரெதிராக அமைந்த சந்நிதியில் உள்ளனர்.சைதை செங்குந் கோட்டத்தில் இருவருமே நான்கு கரங்களுடன் திகழ்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்ற கட்டுரையில் மூலமூர்த்திகளாகத் தனிச்சந்நிதிகளில் விற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வள்ளி, தெய்வயானையர் பற்றி அறிந்தோம். இப்பகுதியில் உலாத் திருமேனிகளாக விளங்கி முருகனுடன் பவனிவரும் தனிவள்ளி, தனிதெய்வயானையர் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

தனியம்மனாக உலாவந்து அருள்பாலிக்கும் வள்ளி தெய்வயானையர்

ஒவ்வொரு ஆண் தெய்வத்தின் இடத்திலும் அதன் அருட்சக்தி மூன்று நிலைகளில் விளங்குகிறது என்றுஆகமநூல்களும் புராண நூல்களும் கூறுகின்றன. இச்சக்திகள் யோக சக்தி, போக சக்தி, வீரசக்தி என்றும், இச்சா சக்தி,கிரியாசக்தி,ஞானசக்தி என்றும் அழைக் கப்படுகின்றனர்.

இந்தச் சக்திகளைப் பெண் வடிவிலும் ஆயுத வடிவிலும் அமைத்து வழிபடும்

வழக்கம் நெடுங்காலமாக உள்ளது. இச்சக் திகளை ஆண் தெய்வத்துடன் இல்லாமல் தனித்து எழுந்தருளிவைத்து வழிபடும் வழக்கமும் உள்ளது. தனித்த நிலையில் உள்ள சத்திகள் வீரசக்திஎன்றும், தனியம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களுக் கெனத் தனியே உலாத்திருமேனிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்தெய்வங்களோடு இருப்பதுடன், தனி நிலையிலும் இவர்கள் சிறப்பு அலங்காரங்களுடன் வீதியுலாவில் பவனி வருகின்றனர்.

எடுத்துக்காட்டாக, சிவலாயங்களில் முதன்மை உலாத்திருமேனியாக விளங்குபவர் சோமாஸ்கந்த மூர்த்தியாவார். இக்கோலத்தில் உயர்ந்த ஆசனத்தில் சிவபெருமான் வீற்றிருக்க, அவருடைய இடப்பாகத்தில் உமையம்மை வீற்றிருப்பாள். அவர்கள் இருவருக்கும் இடையில் முருகப் பெருமான் குதித்தாடிக் கொண்டிருப்பார். இவர்கள் மூவரும் சேர்ந்த வடிவமே சோமாஸ்கந்தர் என்றுஅழைக்கப்படுகிறது.இதற்கு (ச+உமா+ ஸ்கந்தர்) உமை, ஸ்கந்தர் ஆகிய இருவரோடும் கூடியிருப்பவர் என்பது பொருள்.

சோமாஸ்கந்தருடன் இருப்பதோடு அல்லாமல் உமாதேவி, மற்றோர் பீடத்தில் தனியாக நின்றநிலையிலும் இருக்கிறாள். இந்த அம்பிகையைத் தனியம்மன் என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைப்பர். சிவனோடு அமர்ந்திருக்கும் அம்பிகைக்குப் பிரியாவிடையாள் என்பது பெயர்.

சிவபெருமானிடத்திலுள்ள முப்பெரும் சத்தியரில், ஞானசக்தி, சிவபெருமானுக்குள் நிறைந்திருக்கிறாள். அவள் வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. அடுத்ததான யோக சக்தி அவருடைய இடப்பாகத்தில் வீற்றிருக்கின்றாள். மூன்றாவதான போக சக்தி தனியே நின்றவாறு காட்சிதருகிறாள். வீதியுலாவின் போது சோமாஸ்கந்தரின் பின்னே, இந்தபோக சக்தியம்மன் தனி வாகனத்தில் அவரைத் தொடர்ந்து வருகின்றாள். இந்தத் தனியம்மனை வீரசக்தி எனவும் அழைப்பர்.

குகனடியார்கள் வள்ளி தெய்வயானை உடனாய முருகப்பெருமானைச் சிவனுக்குரிய பெயர்களால் சோமாஸ்கந்தர் என்றும், அவருடைய சிறப்புப் பெயர்களான விடங்கர் என்பதன் அடிப்படையில் குமாரவிடங்கர் எனவும் அழைக்கின்றனர். திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள வள்ளி தெய்வயானை உடனாய முருகனின் உலாத்திருமேனியைக் குமாரவிடங்கர் எனவும், திருவிடைக்கழியில் உள்ள வள்ளி, தெய்வயானை உடனாய முருகனை சோமாஸ்கந்தர் என அழைப்பதும் இங்கே எண்ணத்தக்கதாகும்.

சோமாஸ்கந்தருடன், உமாதேவியார் தனியம்மனாக எழுந்தருளியிருப்பதைப் போலவே வள்ளி, தெய்வயானை உடனாய குமார விடங்க சோமாஸ்கந்த மூர்த்தியுடன் தனியம்மன் என்னும் பெயரில் வள்ளியும் தெய்வயானையும் எழுந்தருளியுள்ளனர். இவர்களைத் தனிவள்ளி, தனிதெய்வயானை என்று அழைக்கின்றனர்.

திருச்செந்தூர், திருப்போரூர், சென்னையிலுள்ள என்.எஸ்.சி.போஸ் ரோடு குமர கோட்டம், ஜார்ஜ்டவுன் கந்தகோட்டம் குசப்பேட்டை கந்தசாமி கோயில், சொக்க வேல் சுப்பிரமணியசுவாமி கோயில் முதலிய சிறப்பு மிக்க திருத்தலங்களில் தனிவள்ளி தனித்தெய்வயானையர் உலாத்திருமேனிகள் உள்ளன.

சென்னையிலுள்ள, மேற்குறித்த ஆலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவில் முதலில் வீரபாகுதேவரும், அவரையடுத்து குமார விடங்கரான வள்ளி தெய்வயானை , உடனாய முருகப்பெருமானும் அவரையடுத்துத் தனித்தெய்வயானையும், அவருக்குப் பின்புறம் தனிவள்ளியும், ஐந்தாவதாகச் சுமந்தரீசுவரரும் பவனி வருகின்றனர்.

திருச்செந்தூரில் தனியம்மன்களாக வள்ளி, தெய்வயானை இருந்தபோதிலும் அவர்கள் முருகனுடன் குடமுழுக்கு நாளில் மட்டுமே தனித்தனி வாகனங்களில் பவனி வருகின்றனர். மற்றைய விழாக்களில் இருவரும் ஒன்று சேர உடன்வருவதில்லை.

பங்குனி முதல் புரட்டாசி வரை நடைபெறும் விழாக்களில் குமார விடங்கரின் பின்னால் தனி வள்ளியும், ஐப்பசி முதல் மாசி வரை நடைபெறும் விழாக்களில் தனி தெய்வயானையும் வருகின்றனர். இத்தகைய நடைமுறை வேறெங்கும் இல்லை.

திருப்போரூரில் உலாத் திருமேனிகளாக விளங்கும் தனிவள்ளி, தனித் தெய்வயானையருக்குச் தனிச் சந்நிதியும் அதன்மேல் அழகிய விமானங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நவராத்திரியின்போது இரண்டு தனித் தேவியர்களையும் எழுந்தருளிவைத்து விழா காண்கின்றனர். திருவிடைக்கழியிலும் திருப்பரங்குன்றத்திலும் தனியம்மனாகத் தெய்வயானை மட்டுமே உள்ளாள்.

தனியம்மனாக வள்ளியையும் தெய்வயானையையும் வழிபடும் வழக்கம் குறைவாக இருந்தாலும் அது தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழகன் முருகனின் அறுபடை வீடுகளில் வள்ளி, தெய்வயானையர் வழிபாடு



குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் குடியிருக்கும் இடமென்பர். குன்றுதோறும் வீடு கொண்டருளும் குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் போற்றப்படுகின்றான்.

முருகன் செந்தமிழின் தலைவனாகப் போற்றப்படுவதால், குறிஞ்சி நிலத்தில் மட்டுமின்றி, ஐம்பெரும் நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களிலும் எண்ணற்ற இடங்களில் கோயில் கொண்டுள்ளான்.

குறிஞ்சி நிலத்தின் தலைவனாகவும் முல்லை நிலக் கடவுளான திருமாலின் மருமனாகவும், மருதநிலக் கடவுளான இந்திரனின் மருமகனாகவும், நெய்தல் நிலக் கடவுளான வருணனால் தலைவனாக ஏற்றுத் தொழப்படும் தெய்வமாகவும், பாலை நிலப் பாவையான துர்க்கையின் செல்வனாகவும் அவன் போற்றப்படுகின்றான். மாலோன் மருகனென்றும், வாசவன் மருகனென்றும் வருணாதிபன் என்றும் கொற்றவைச் சிறுவன் என்றும் இலக்கியங்கள் அவனைக் கொண்டாடுகின்றன.

தென்னகம் மட்டுமின்றிக் கடல் கடந்த நாடுகளிலும் முருகன் ஆலயங்கள்உள்ளன.

பாரத தேசமெங்கிலும் எண்ணற்ற தலங்களில் முருகன் கோயில் கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்தாலும் அன்பர்கள் அவற்றுள் அவன் விரும்பி உறையும் பதிகளான ஆறுபதிகளைத் தனிச் சிறப்புடன் கொண்டு போற்றுகின்றனர்.

ஆறு திருப்பதிகண்டு ஆறு எழுத்து அன்பினுடன்
கூறுமவர்சிந்தை குடிகொண்டோனே.

என்று குமரகுருபரர் போற்றுகின்றார். முருகன் மேவி நிற்கும் ஆறு திருப்பதிகளாவன. பழனி (திருவாவினன்குடி), திருஏரகம் (சுவாமிமலை), திருச்செந்தில் (திருச்செந்தூர்,)திருப்பரன்குன்றம் (திருப்பரங்குன்றம்), திருத்தணி, பழமுதிர்ச் சோலை (அழகர்மலை) என்பனவாகும்.

ஆறாவது தலமான பழமுதிர் சோலையில் முருகனும் வள்ளி தெய்வ யானையரும் அருவமாக இருப்பதாகக் கொள்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்மலையின் அழகே அவனும் அவனது தேவியருமாகக் கொள்ளப்பட்டது. எனவே, இம்மலை முழுவதும் அவனது இருப்பிட மாகும். அதனால் இங்கு அவனுக்கு நெடுங் காலமாக ஆலயம் அமைக்கப்படவில்லை.

முதலில் இங்கு வேல் வழிபாடு மட்டு மே இருந்து வந்தது. பின்னாளில் வள்ளி தெய்வயானை உடனாய முருகனை மூலவ ராக எழுந்தருளி வைத்ததுடன் உலாத் திருமேனிகளையும் அமைத்துச் சிறப்பு வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

நான்காம் படைவீடான திருப்பரங் குன்றம் அடிப்படையில் சிவாலயமாகும். அதனுள் தனிச்சந்நிதியில் வீற்றிருக்கும் பெரு மானாகப் படைவீடுகண்ட முருகன் எழுந்த ருளியுள்ளார். இங்கு அவரைத் தெய்வயானை யுடன் மட்டுமே காண்கிறோம்.

மற்றைய நான்கு படை வீடுகளில் அவர் தனியாக எழுந்தருளியுள்ளார். அவரு டைய ஆலயத்தில் இரு பெரும்தேவியரும் தனித்தனி சந்நிதிகளிலேயே உள்ளனர்.



தொடர்ந்துவரும் பகுதிகளில் அறு படை வீடுகளில் நான்கு படை வீடுகளில் காணப்படும் இருபெரும் தேவியர் வழிபாடு பற்றியதான செய்திகளைத் தொகுத்துக் காணலாம்..

சுயம்பு வடிவில் வள்ளி தெய்வயானையர்

கொங்குநாட்டுக் குமரத் தலமான மருத மலையில் கோயிலுக்குப் பின்புறம் ஆதிகோயில் என்னு மிடம் உள்ளது. இங்கு முருகன், வள்ளி, தெய்வயானையர் சுயம்பு வடிவில் (மூன்று கற்களை நட்டதுபோல்) காட்சி தருகின்றனர். இங்கு மூவரை யும் உரு அருவ நிலையில் காண்கிறோம்.

முருகனின் சுயம்பு வடிவம் பெரியதாகவும், அதன் வலப்பக்கமுள்ள வள்ளியின் வடிவம் சற்று சிறியதாகவும் இடப்பக்கமுள்ள தெய்வயானையின் சுயம்பு வடிவம் அதைவிடச் சிறியதாகவும் உள்ளன. முருகன், வள்ளி, தெய்வானையரைக் குறிக்கும் இத் தகைய சுயம்பு வடிவம் வேறெங்கும் இல்லை. திருப் போரூரிலுள்ள முருகன், வள்ளி தெய்வயானையர் வடிவங்களும் சுயம்பு வடிவங்களாகும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. திருச்செந்தூர் வள்ளி, தெய்வயானையர்

கயிலைமலை அனைய செந்தில் என்றும், தென்கயிலைஎன்றும் அன்பர்களால் போற்றப் படும் தலம் திருச்செந்தூர்.முருகனின் அறு படை வீடுகளில் முதன்மை பெற்றது.வங்கக் கடல் தனது அலைக் கரங்களால் வழிபட்டுக் கொண்டிருக்கும் திருப்பதி. சூரபத்மனோடு போர்புரிய முருகன்,இங்கு படைவீடு அமைத் துத் தங்கியிருந்தார் என்பர். இந்த இடமே கந்தமாதன பர்வதம் இருந்த இடம்.

இங்கு கடற்கரையோரம் அமைந்துள்ள ஆனந்த விலாச(பதினாறுகால்) மண்டபத்தில்

அருள்மிகு செந்திலாண்டவர் திருச்செந்தூர்

இருந்துதான் முருகன், கடல்நடுவே இருந்த சூரபத்மனின் மாளிகையைக் கண்டு வியந் ததுடன், தேவர் களைச் சிறைவிடுத்து நல்வாழ்வு பெறுக என்று சொல்லி வரும்படி வீரபாகுவை அவனிடம் தூது அனுப்பினார் என்கின்றனர்.

சூரபத்மன், சரணடையாததால் முருகன் அவனோடு போர் தொடுத்தார். சூரபத்மனின் படைகள் மாண்டன. இறுதியில் தனித்து நின்ற சூரபத்மன் பற்பல மாயங்களைக் காட்டிப் போர் செய்தான். முருகன் அவற்றை எல்லாம் முறியடித்தார். இறுதியில் சூரபத் மன் கடலின் நடுவே பெரிய மாமரமாக நின்றான்.

முருகன் தனது வேலை விடுத்து, அந்த மாமரத்தை இருகூறுகளாகப் பிளந்தார். அவற்றில் ஒன்று மயிலாகவும், மற்றது சேவ லாகவும் ஆயின. முருகன் மயிலை ஊர்தி யாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டார்.

சூரபத்மனையும் அவனதுபெரும் படை யையும் அழித்த பாவம் தீரவும், உலகில் இன்பம் செழிக்கவும்,முருகன் அங்கே சிவ பூசை செய்ய விரும்பினார்.

அங்கு தேவர்கள் வழிபடும் பஞ்ச லிங்கங்களை வழிபட்டதுடன், அவ்விடத் தில் தமக்கு முன்பாகவே தம்மைக் கணவ னாக அடையத் தெய்வயானையார் தவம் மேற்கொண்டு சிவபூசை செய்த போது வழி பட்டதும், சூரியனால் அவளுக்கு அளிக்கப் பட்டதுமான சக்திலிங்கத்தையும் விருப் ப முடன் பூசித்து மகிழ்ந்தார். அப்பூசையால் அவருக்கு உண்டான பழியும் பாவமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விலகியது.

தேவர்கள் அவருக்கு அங்கே ஆலயம்அமைத்தனர்.அதில் முருகன் எழுந்தருளினார். திருச்செந்தூரில் கடற்கரையில் கந்த மாதன பர்வதத் தில் அமைந்துள்ள குகையில் இருப்பதும், தேவர்களால் பூசிக் கப்படுவது மான பஞ்ச லிங்கங்களை வணங்கிய பின் அதன் வாயி லில் சக்திலிங்கத்தைப் பூசித்த வாறு நின்று கொண்டிருக்கும் கோலத்தி லேயே இப் போதும் காட்சியளிக் கிறார். செந்திலாதிபன் எனப்படும் அம்மூர்த்தி மேற்கரங்களில் சக்தி, ஜெபமாலையும்,முன்வலது கரத் தில் தாமரையைத் தாங்கி,இடது கரத் தினைத் தொடைமீது வைத்த வாறு உள்ளார்.



அருள்மிகு குமாரவிடங்கப் பெருமான்- திருச்செந்தூர்

கருவறையைச் சுற்றியமைந்த முதற் பிராகாரத்தில்,தென்மேற்கு முனையில் வள்ளியும், வடமேற்கு முனையில் தெய்வ யானையும் மூலமூர்த்திகளாக எழுந்தருளி யுள்ளனர்.இங்கு இவர்களுக்கு உலாத் திரு மேனிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அமைந்துள்ள சந்நிதி மீது ஒற்றைக் கலசம் கொண்ட விமானங்கள் அமைக்கப்பட்டுள் ளன. மூலவருக்குப் பூசை நடந்ததும் இவர் களுக்குப் பூசை நடைபெறுகிறது.

இனி,திருச்செந்தூர் ஆலயத்தில் உலாத் திருமேனிகளாக விளங்கும் முருகன் திரு வடிவங்களையும் அவற்றோடு இணைந்த வாறுள்ள வள்ளி தெய்வயானையர் திருவுரு வங்களையும் சிந்திக்கலாம்.

திருச்செந்தூரில் ஐந்து வகையான முருகனின் திருஉலாத் திருமேனிகள் உள்ளன. இவை ஆறுமுகநயினார், குமார விடங்கர், ஜயந்திநாதர், அலைவாய் உகந்த பெருமான், ஸ்ரீபலி நாயகர் என்றழைக்கப் படுகின்றன.

ஸ்ரீ பலிநாயகர் என்பது மூல வடிவை ஒத்த முருகனின் வடிவமாகும். திருச்செந் தூரில் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன் றாலும் செய்யப்பட்ட மூன்று பலி நாயகர் களும் உள்ளனர். தங்கத்தாலும் வெள்ளியா லும் செய்யப்பட்ட இரண்டு பலி நாயகர்கள் வடிவங்கள் கருவறையில் மூலவருக்கு முன்பாக உள்ளன. தினமும் இவர்கள் உலா வந்து ஸ்ரீபலி அளிக்கின்றனர்.

ஆறுமுக நயினார் எனப்படும் ஆறுமுகர் தெற்கு நோக்கி அமைந்த பெரிய சந்நிதியில் எழுந்தருளியுள்ளார். இவரே இவ்வாலயத் தின்முதன்மை உலாமூர்த்தியாவார். மற்றைய (மூர்த்திகளான)குமாரவிடங்கரும், அலை வாய்உகந்த பெருமானும்,ஜெயந்தி நாதரும் தனித்தனி சந்நிதிகளில் உள்ளனர்.

இந்த ஐந்து மூர்த்தங்களில் ஆறுமுக நாயனார், குமார விடங்கர், ஜெயந்தி நாதர் ஆகிய மூன்று மூர்த்தங்களும் வள்ளி, தெய்வ யானையருடன் சேர்ந்திருக்கும் முருகன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு ஜயந்தி நாதர்-செந்திலாதிபன்

வடிவங்களாகும்.

இதிலும் பெருந்திருவிழாவில் பவனி வரும் குமாரவிடங்கர் எனப்படும் வில்லேந்திய வேலவருடன் வள்ளி தெய்வயானையர், ஒன்றுசேர்ந்து இருப்பதுடன், தனித்தனியாகவும்உள்ளனர். இவர்களைத் தனிவள்ளி, தனிதெய்வயானை என்று அழைக்கின்றனர். இந்தத் தனித்தேவியர்கள் தமக்குரிய சந்நிதிகளிலேயே எழுந்தருளியுள்ளனர்.

பங்குனி உத்திரத்தின்போது குமார விடங்கருடன், தனிவள்ளியம்மனை எழுந்தருளிவித்து வள்ளி திருமணம் நடத்தப் பெறுகிறது.அன்றிரவு குமார விடங்கரும், அவருடன் பூம்பல்லக்கில் வள்ளியும் வீதி யுலா காண்கிறனர்.

ஐப்பசி மாதக் கந்தர் சஷ்டி விழாவின் போது சூரசம்ஹாரம் வரையில் ஜயந்திநாதர் காலையிலும்,மாலையிலும்பவனி வருகிறார்,அடுத்தநாள் தெய்வயானைத் திருமணம் நடைபெறுகிறது.

குமாரவிடங்கருடன் தனித்தெய்வ யானை எழுந்தருள, தெய்வயானைத் திருமணவிழாவும்,தொடர்ந்து மூன்று நாட்கள் ஊஞ்சல் விழாவும் இனிதே நடைபெறுகின்றன.

ஐப்பசியில் நடைபெறும், இந்த தெய்வயானைத் திருமணத்திற்குப் பிறகு பங்குனி உத்திரத்திற்கு முன்னாள் வரை நடைபெறும் விழாக்களில் குமாரவிடங்கருடன் தனித் தெய்வயானை உடன் வந்து அருள் பாலிக்கின்றாள்.

பங்குனி உத்திரத்தில்குமாரவிடங்கருக்கும் வள்ளிக்கும் திருமணம் நடத்தப்படுகிறது .இதன் பிறகு ஐப்பசி மாதத்துச் சூரசம்ஹாரம் வரையுள்ள ஆறு மாதங்களில் நடைபெறும்விழாக்களில் குமார விடங்கர் எழுந்தருளும் வேளையில் தனியம்மனாக அவருடன் தனிவள்ளியம்மன் அவரைத் தொடர்ந்து வருகின்றாள்.குறிப்பாக,மாசி

மூன்று வள்ளி மூன்று தெய்வயானை பவனி

திருச்செந்தூரில் நடைபெறும் மாசிமாத விழாவின் ஆறாம் நாளில், குமார விடங்கரோடும்,ஜெயந்திநாதரோடும் சேர்ந்திருப்பவளாகவும், தனியம்மனாகவும் மூன்று நிலைகளில் தெய்வயானை பவனி வருகின்றாள்.

இதுபோன்று ஆவணிப் பெருந்திருவிழாவின் போது குமாரவிடங்கர்,ஜயந்திநாதர் பக்கத்தில் இருப்பவளாகவும் தனியம்மனாகவும் மூன்று நிலைகளில் வள்ளியம்மை வலம் வந்து அருள்பாலிக்கின்றாள். இந்த இரண்டு நாட்களிலும் இவர்கள் திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடத்திற்கு எழுந்தருளி அருள்பாலிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது மடத்திற்கே உரித்தான தனிச்சிறப்பாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாதத் திருவிழா முழுவதும் குமார விடங்க ருடன் அவள் உலாவந்து அருள்புரிகின் றாள்.

திருமணம் காணும் மூர்த்தியாக இருப் பதால் குமாரவிடங்கரை மக்கள் **மாப்பிள்ளை சுவாமி** என்று அழைக்கின்றனர்.

ஆவணி மாத விழாக்களில் குமாரவிடங் கருக்குப் பின்னே வரும் தனி வள்ளியம் மையும்,மாசிமாத விழாக்களில் உடன் வரும் தனி தெய்வயானையும்முதல் மூன்றுநாட்கள் கேடயத்திலும், நான்காம் நாள் வெள்ளி அன்னத்திலும், ஐந்தாம் நாள் வெள்ளிச் சரபத்திலும்,ஏழாம்நாள் இந்திர விமானத் திலும் ஒன்பதாம் நாள் வெள்ளிக் கமலத் திலும், பத்தாம்நாள் பல்லக்கிலும்,பதி னோரு, பன்னிரண்டாம் நாட்களில் பூஞ்சப் பரத்திலும், இவர்கள் பவனி வருகின் றனர்.

இவ்விதம் முருகனுடன் விழாக்களில் ஆறுமாதம் தனிவள்ளியும், ஆறு மாதம் தனித் தெய்வயானையும் பவனி வருவது வேறெங் கும் காணமுடியாத அற்புத நிகழ்வாகும்.

இவ்விழாக்களில் இவர்கள் பல்வேறு வாகனங்களில் பவனிவந்து அருள்பாலிப்பது காணற்கினிய காட்சியாகவுள்ளது.

இனி வள்ளியம்மை இத்தலத்தில் பெற்றுள்ள தனிச்சிறப்புக்களைக் காணலாம்.

ஆலயத்தைச் சுற்றி அமைந்துள்ள கிரி வீதியின் வடபுறம் கடலை நோக்கிச் சென் றால், கந்தமாதனக் குன்றில் அமைந்த குகை யைக் காணலாம். இக்குகையின் முன்புறம் பதினாறு கால்களைக் கொண்ட மண்டபம் உள்ளது.இங்குள்ள தென்புறச் சுவரில் வள்ளி திருமணக்காட்சி உள்ளது. மண்டபத்தின் பின்புறமுள்ள கந்தமாதனக் குன்று மணற் பாறை வகையினது.

குகை வாயில் நான்கடி உயரமுள்ளது. அதன் வழியாக மூன்றுபடிகள் ஏறி, இடப் புறம் திரும்பி மூன்றுபடிகள் இறங்கினால் பதினாறு சதுர அடி பரப்புள்ள குகையின்

அருள்மிகு சண்முகர்-திருச்செந்தூர்

உட்பகுதி உள்ளது.குகையில் வள்ளியம்மை யின் திருவுருவம் உள்ளது.அவளுக்கு முன் பாக எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டி ருக்கின்றது.அன்பர்கள் இக்குகையில் அமர்ந்து தியானம் செய்கின்றனர்.

மக்கள் இதனை வள்ளி ஒளிந்த குகை என்கின்றனர். முருகன் வள்ளியைச் சிறை யெடுத்துச் சென்று கொண்டிருந்தபோது நம்பி ராஜன் தம் புதல்வருடன் அவரைத் துரத்தி வந்து சண்டையிட்டான் என்றும்,அவனோடு போர்புரிய விரும்பிய முருகன் வள்ளியை இக்குகையில் ஒளித்து வைத்து, விநாயகரை அவளுக்குக் காவலாக வைத்து விட்டுப் போரிடச் சென்றார் என்றும் கூறுகின்றனர்.

மேலும், திருச்செந்தூரில் வள்ளியே பள்ளியறை நாச்சியாராக இருந்து முருகனு டைய பள்ளியறை சேவை காண்கிறாள். வள்ளிக்கு ஏற்றம் தரும் தலமாகத் திருச் செந்தூர் விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென் பழனியில் வள்ளி தெய்வானையர்

அதிசயம்அனேகம் உற்ற பழனிமலை என்று அருணகிரிநாதர் போற்றி மகிழ்ந்து. நெடுநாள் தங்கியிருந்து முருகனை வழிபட்ட திருத்தலம் பழனியாகும். பழனி மலை மீது முருகன் தண்டாயுதபாணியாக இருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

பழனி மலையின் அடிவாரத்தில் அறு படைவீடுகளில் ஒன்றான திருவாவினன் குடி உள்ளது. இதில் முருகன் குழந்தை வேலாயுத னாக மயில் மீது அமர்ந்திருக்கும் கோலத்தில் காட்சி தருகின்றார். பழனி மலைக்கு வடக் கில் வையாபுரி ஏரியை அடுத்து பழனி ஊர் அமைந்துள்ளது. இங்கு ஊருக்கு நடுவில்

பெரியநாயகிஉடனாய கயிலாயநாதர் ஆலயம் உள்ளது. இதனுள் நான்கு சந்நிதிகள் வரிசையாக அமைந்துள்ளன. நடுவில் இருப்பது செல்வமுத்துக்குமரன் ஆலய மாகும். இதில் வள்ளி தெய்வாயானையுடன் முருகன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இவருக்கு நேராக மயில் மண்டபம் தங்கக் கொடி மரம் ஆகியன உள்ளன. முத்துக் குமர னுக்கு வடக்கில் அமைந்த சந்நிதியில் கயிலாய நாதர் எழுந்தருளியுள்ளார். தெற்கில் அமைந்த சந்நிதியில் பெரிய நாயகியும், அவருக்குத் தெற்கில் உலாத்திருமேனியனாக முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வயானை யுடன் எழுந்தருளியுள்ளார்.

மக்கள் இந்த ஆலயத்தை ஊர்க்கோயில் என்றும் பெரியநாயகிகோயில் என்றும் அழைக்கின்றனர். முருகனுக்குரிய வைகாசி விசாகத் திருவிழாவும், தைப்பூசத் திருவிழா வும் கொடியேற்றத்துடன் இங்கு சிறப்பாக நடத்தப்படுகின்றன. இந்த இரண்டு திரு விழாக்களலும் வள்ளி கல்யாணம் சிறப்பு டன் நடத்தப்படுகிறது.

திருவாவினன்குடி கோயிலில் பங்குனி உத்திரத்தை கடைநாளாகக் கொண்டு பெருந் திருவிழா நடைபெறுகிறது. இந்த விழாவி லும் ஊர்க்கோயில் முருகனே வந்து வள்ளித் திருமணம் காண்கிறார்.

மலைமீது ஐப்பசி கந்தர் சஷ்டி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சஷ்டி விழாவில் விநாயகர் வீரபாகுதேவருடன் பழனியாண்டவர் ஆகிய மூர்த்திகள் காலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்மிகு சண்முகர் தெய்வயானை திருமணக்கோலம்-பழனி மலை

யும் மாலையும் பவனி வருகிறார். சஷ்டி யன்று பராசக்தி வேலுடன் பழனியாண்டவர் மலையில் இருந்து இறங்கி வந்து மலை சுற்றுப் பாறையில் சூரசம்காரம் நடத்தித் திரும்புகிறார். மறுநாள் மலைமீது காலை யில் ஆறுமுகப் பெருமானை எழுந்தரு ளுவித்து தெய்வயானைத் திருமணவிழாவை நடத்துகின்றனர். மாலையில் ஊர்க்கோயிலில் முத்துக்குமாரசுவாமியை எழுந்தருளுவித்து தெய்வயானை திருமணம் நடத்தப்படு கிறது.

இத்தலத்தில் மலைமேல் காலையிலும் கீழே ஊர்க்கோயிலில் மாலையிலும் தெய்வ யானைத் திருமணம் இரண்டு முறை நடத்தப் படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வள்ளித் திருமணம் வைகாசி விசாகம், தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய மூன்று விழாக்களிலும் (ஆக மூன்று முறை) நடத்தப் படுகிறது. மலைக்கோயிலில் வள்ளி தெய்வயானை உடனாய ஆறுமுகப் பெருமா னுக்கும் ஊர்க்கோயிலில் எழுந்தருளியிருக் கும் வள்ளி தெய்வயானை உடனாய முத்துக் குமாரசுவாமிக்கும் திருமண விழாக்கள் நடத்தப்படுகின்றன.

முருகனுக்கு ஆண்டில் ஐந்து முறை திருமணவிழாக்கள் நடைபெறும் தலமாகப் பழனி விளங்குகிறது.

பழனியில் மலைமீதோ, ஊர்க்கோயிலி லோ வள்ளி தெய்வயானையருக்குத் தனிச் சந்நிதிகள் இல்லை. மலையடிவாரத்தில் வள்ளியம்மை சந்நிதி உள்ளது. இத்தலத் திற்குத் திருப்புகழில் அருணகிரிநாதர் வள்ளி யின் சிறப்புகளை அதிகமாகப் புகழ்ந் துள்ளார். ✿

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவாமி மலை

வள்ளி தெய்வயானையர்

குடந்தையை அடுத்துள்ள தலம் சுவாமி மலை. முருகனின் இரண்டாவது படை வீடாகவும் அவன், தன் தந்தைக்குத் தனி ஞானப் பொருளை உபதேசித்துத் தகப்பன் சாமியாக வீற்றிருக்கும் இடமாகவும் இருப்பது.

இத்தலத்தில் கட்டுமலைமீது அமைந்துள்ள ஆலயத்தில் முருகன் ஞானதண்டாயுத பாணியாக எழுந்தருளியுள்ளான். மூலவர் தனித்து இருந்தாலும் முதன்மை உலாத்திரு மேனியாக விளங்கும் ஷண்முகர் வள்ளி தெய்வயானையுடன் எழுந்தருளியுள்ளார். இங்கு அவருக்கு அடுத்தபடியாக வள்ளி தெய்வயானை உடனாய கல்யாண முருகன் எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்தில் உலாத்திரு மேனிகளாகத் தெய்வயானையுடன் கூடிய தாரகாரி சுப்ர மணியரும் வள்ளியம்மையும் கூடிய வேடமூர்த்தியாகிய முருகனும் உள்ளனர்.

சிவபெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று திரிபுராரி. அது அவரது வில்லேந்திய கோலமாகும். அதற்கிணையான முருகனின் திருக்கோலம் தாரகாரி எனப்படுகின்றது. இந்தக் கோலத்தை முருகனடியார்கள் சபாபதி என அழைப்பதுடன், மார்கழி மாதத்தில் இவருக்குத் திருவெம்பாவை விழாவை நடத்துவதுடன் இவருக்குத் திருவாதிரை நாளில் வீதியுலாவும் செய்து மகிழ்கின்றனர்.

திரிபுரமெரிந்த போது சிவபெருமானுடன் உமா தேவி இருந்தாள். அதுபோலவே வில்லேந்திய வீரகோலத்துடன் விளங்கும் தாரகாரியான முருகனுடன் தெய்வ யானை காட்சி தருகின்றாள். இவர்கள் மார்கழித் திருவாதிரை நாளில் பவனி வந்து அருள் பாலிக்கின்றனர்.

முருகன் தெய்வயானையுடன் வில்லேந்தியவனாகக் காட்சியளிப்பதைப் போலவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு தனி வள்ளி மணக்கோலத்தில்

வள்ளியுடனும், வில்லேந்திய வேடுவனாகவும் இங்கு காட்சி யளிக்கின்றான். வள்ளியம்மை காத்து வந்த தினைப் புனத்திற்கு அவன் வேடனாகச் சென்று காதல் மொழி பேசியதைக் குறிக்கும் வகையில்இத்திருவுருவமுள்ளது. முன்னையது முருகனின் போர் வடிவம் பின்னையது வள்ளியுடன் காதல் மொழிபேசி நிற்கும் காதல் நிறை வேடவடிவம்.

இத்தலத்தில் பங்குனி உத்தி ரத்தை யொட்டி நடைபெறும் வள்ளி கல்யாண விழா புகழ் பெற் றதாகும். இதில் வள்ளியம்மை திருவலஞ்சுழியில் அமைக்கப் பட்டுள்ள தினைப் புனத்தைக் காத்தல், அவளைத் தேடி வந்த முருகன், முதலில் வேங்கை மர மாகவும், அடுத்து வயோதிக சந்நி யாசியாகவும், இறுதியில் வேட னாகவும் காட்சி கொடுப்பது, முருகன் வேண்டு கோளால் விநாயகர் யானை வடிவுகொண்டு வள்ளியை விரட்டுவது, முருகனும் வள்ளியும் சேர்வது, முருகன் வள்ளியை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு வருதல், அங்கு அவளுக்கு முருகன் ஆறுமுகனாகக் காட்சி தருதல், தொடர்ந்து வள்ளியும் ஆறுமுகனும் மாலை மாற்றிக் கொள்ளுதல் ஆறுமுகன், வள்ளி திருக்கல் யாணம் ஆகியவை சிறப்புடன் நடத்தப்படுகின்றன.

இத்தலத்தில் வள்ளியின் பெற்றோர்களான நம்பி ராஜனுக்கும், அவன் மனைவிக்கும் உலாத் திருவுரு வங்கள் உள்ளன. வள்ளி திருமணத்தின் போது, அருகிலுள்ள அமல னந்தபுரம் என்னும் ஊருக்கு இவை எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அபிஷேக ஆராதனை கள் செய்யப்படுவதுடன், இவர்கள் சீர்வரிசைகளை எடுத்து வந்து வள்ளி திருமணத்தை நடத்தி வைக்கும் ஐதிகமும் நடத்தப்படுகிறது.

வள்ளிக்கு முருகன் ஆறுமுகனாகவே காட்சி தந்து அருள்பாலித்ததையொட்டி இத்தலத்தில், ஆறுமுக சுவாமிக்கும், வள்ளிக்கும் திருமண விழா கொண்டா டப்படுகிறது. வேறெந்த தலத்திலும் இப்படி ஆறுமுக னுக்கும் வள்ளிக்கும் திருமணம் நடத்தப்படுவதில்லை. வள்ளி திருமண விழாவிற்குப் பிறகு மூன்று நாட்கள் ஊஞ்சல் விழாவும், தொடர்ந்து விமானத்தில்-ஆறுமுக னும் புஷ்ப பல்லக்கில் வேடமுருகனும் வள்ளியும் பவனி வரும் வீதியுலாவும் நடத்தப்படுகின்றன.

இத்தலத்தில் வள்ளியுட னும் தெய்வயானையுடனும் முருகன் வில்லேந்திய வேல னாகக் காட்சி தருவது கண்டு மகிழ்வதற்குரியது. திருவா திரையில்தெய்வயானையுட னும், பங்குனி உத்திரத்தில் வள்ளியுடனும் வில்லேந் தியவேலன் பவனி வந்து காட்சியளிக்கின்றான்.

மாதிரி வடிவம்
தெய்வயானையுடன் திரிபுராரிமுருகன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பரங்குன்றம்
வள்ளி. தெய்வயானையர் வழிபாடு

திருப்பரங்குன்றம் மூவராலும் பாடப் பட்ட தேவாரத் தலம். சங்க காலத்திலிருந்தே முருகன் தலமாகப் போற்றப்படுவது. தண் பரங்குன்றம், தெய்வக்குன்றம், பல்பொரி மஞ்சை, வெல்கொடி உயர்த்திய ஒழியா விழவின் நெடியோன் குன்றம் எனப் பலவாறு இலக்கியங்கள் புகழ்ந்துரைக்கும் தெய்வத் திருத்தலம்.

முருகனின் படைவீடு வரிசையில் நான் காவதாகத் திகழ்வது. பழனித் திருவாவினன் குடியில் பாலசுப்பிரமணியனாக இருக்கும் முருகன். தந்தைக்குத் தனி ஞானஉபதேசத் தைச் சுவாமிமலையில் செய்த பின் செந்தூர்



சென்று சூரனை வென்று வாகை சூடி, நான்காம் படைவீடான இந்தத் திருப்பரங் குன்றிற்கு வந்து தெய்வயானைப் பிராட்டி யாரை மணந்து கொண்டார்.அந்தத் திருமணக் கோலத்துடனேயே கோயில் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இக்கோயில் சிவாலயமாகப் போற்றப் பட்டாலும், திருமால், துர்க்கை, விநாயகர், முருகன் ஆகியோர் வீற்றிருக்கும் தெய்வத் திருத்தலமாகும்.

இங்கு முருகன், மணக்கோலத்தில் உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருக்கிறார். அவ ருக்கு வலப்பக்கம் நாரதரும், இடப்பக்கம் தெய்வ யானையும் அமர்ந்துள்ளனர். முருக னுக்கு மேலே சூரிய சந்திரர்களும், பீடத்தில் ஆடு, யானை, பூதகணங்கள் முதலிய உருவங் களும் உள்ளன.

பாறையைக் குடைந்து செதுக்கப்பட் டுள்ள இவ்வடிவங்களின்மீது கடுசர்க்கரையி னால் மெழுகி உருவத்தை வனப்பூட்டியுள் ளனர். முருகனுக்கு மட்டும் வைகாசி புனர் பூசத்தன்று புனுகுக் காப்பு அணிவிக்கப்படு கின்றது.அவரைச் சுற்றியுள்ள சூரியன், சந்திரன், நாரதர், தெய்வயானை முதலிய வடிவங்க ளுக்கு அதே நாளில் சாம்பிராணித் தைலம் அணிவிக்கப்படுகிறது.

புனுகுக் காப்பில் இருக்கும் முருக னுக்கு அபிஷேகமில்லை. அவருடைய கையில் உள்ள வேலுக்கே அனைத்துஅபி ஷேகங்களும் செய்யப்படுகின்றன.

முருகனின் திருமண வைபவத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவராகப் பரங்கிரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாதர் எழுந்தருளியுள்ளார் என்பர். முருகன் திருமணக் கோலத்துடன் சிவபூசை செய்து கொண்டிருப்பதாகவும் சிலர் கூறுவர்.

இத்தலத்தில் முதன்மை மூர்த்தியாக விளங்கும் உலாத் திருமேனியிலும் முருகன் (வள்ளியின்றி) தெய்வயானையுடன் மட்டுமே காட்சியளிக்கின்றார். இக்கோயிலிலுள்ள ஆறுமுகர், முத்துக்குமாரர், சுப்பிரமணியர் ஆகிய மூன்று மூர்த்தங்களில் மட்டுமே வள்ளி, தெய்வயானையர் உள்ளனர். மூல வராக இல்லாவிட்டாலும் தனித் தெய்வ யானை பிராட்டியாருக்கு உலாத்திருமேனி உள்ளது. திருமண விழா, எண்ணெய்க் காப்பு உற்சவம் முதலியவற்றிற்கு இவள் எழுந்தருளி விழா காண்கிறாள்.

தெய்வயானை கல்யாணம், பங்குனி உத்திரத்தில் சிறப்புடன் கொண்டாடப்படு கிறது. மாசி மாதத்தில் எண்ணெய்க் காப்பு உற்சவம் நடத்தப்படுகிறது.

முருகனையும் தெய்வயானையையும் அமர்த்திப் பட்டாபிஷேக விழா கொண்டாடு கின்றனர். இது வேறெந்தத் தலத்திலும் இல்லாத விழாவாகும். கார்த்திகை மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவின் எட்டாம் நாளிலும், பங்குனி உத்திர விழாவின் பதினோராம் நாளிலும் ஆக ஆண்டுக்கு இரு முறை பட்டாபிஷேக விழா கொண்டாடப் படுகிறது.



திருப்பரங்குன்றத்தில் வள்ளியைச் சிறப்பிக்கும் வகையில் திருவுருவங்களோ விழாக் களோ இல்லை. நடைமுறையில் வள்ளிக்குத் திருப்பரங்குன்றத்தில் இன்னா ளில் ஏற்றமில்லாதிருப்பினும், இலக்கி யங் களில் ஏற்றம் மிகுந்திருக்கின்றன. பரிபாடல் எனும் நூலில் வானுலகத்தில் தெய்வ யானைத் திருமணம் நடைபெற்றது போல், மண்மீது திருப்பரங் குன்றில் வள்ளி திருமணம் நடைபெற்றதாகக் கூறப்பட் டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் திருப்பரங்குன்றத் திலுள்ள முருகன் வடிவம் வள்ளி கல்யாண சுந்தரர் என்றே கருதுகின்றனர். இப்பகுதியில் வழங்கும் நாட்டுப்புற இலக்கியங்களில் இங்கு வள்ளிக்கும் முருகனுக்கும் காதல் விளையாட்டை விவரிக்கின்றன. தேர்த்திரு விழாவில் பாடப்படும் நாட்டுப் புறப் பாடல்களில் முருகன் வள்ளிக்கு ஏற்ற சேவக னாகவும், காவலனாகவும் விளங் குவது நகைச்சுவையுடன் சொல்லப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றில் உள்ள குகை ஆதியில் வள்ளியம்மையோடு தொடர்பு கொண்ட குகையாகவே இருந்தது என்றும், பின்னாளில் சமணர்களின் வாழிடமாக ஆனதென்றும், அதையடுத்து மீண்டும் சைவக் குகையாக மாற்றம் பெற்றதென்றும் கூறுகின்றனர். இக் குகையில் சமணர்களால் செதுக்கப்பட்டிருந்த திருவுருவங்கள் சில உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தணிகை வள்ளி தெய்வயானையர்

திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் முடித்து, திருபரங்குன்றில் தெய்வயானையைத் திரு மணம் செய்து கொண்டபின் முருகப் பெருமான் தனிமையை விரும்பித் திருத் தணிகைக்கு வந்து மலைமீது தங்கிஇருந்தார்.

இத்தலத்திற்கு மேற்கே வள்ளி மலை உள்ளது. அங்கே வள்ளியம்மை குறவர் குலக் கொடியாக வளர்ந்து தினைப்புனம் காத்து இனிதிருந்தாள்.

அந்நாளில் நாரதரால் வள்ளியின் முற் பிறப்பு பற்றியும் அவளது அழகையும்,

பெருமைகளையும், அவள் தன்னை நோக்கித் தவம் புரிவதையும் அறிந்த முருகன், அவளது இருப்பிடமான வள்ளி மலைக்குச் சென்று, பல திருவிளையாடல்களைப் புரிந்தபின் அவளுக்கு அருள்செய்து அவளை மணந்து கொண்டார். வள்ளியம்மையுடன் தணி கைக்கு வந்து, இங்குள்ள மலைச்சாரலி லுள்ள சோலைகளில் அவன் பாடி ஆடிக் களித்தான் என்பர்.

தணிகைமலையில் வள்ளி முருகனுடன் நீராடி மகிழ்ந்த சுனைகள் ஒளிந்த குகைகள் உள்ளன. கோயிலுக்கு மேற்புறம் வள்ளி தீர்த்தம் உள்ளது. (நாள்தோறும் இதிலி ருந்தே முருகனின் திருமஞ்சனத்திற்கு நீர் எடுத்துச் செல்வது வழக்கம்.)

பின்னர் வள்ளியுடன் தனது தேவ உலகத்திற்கு முருகன் சென்றதாகவும் அங்கு தெய்வயானை, வள்ளியை மகிழ்ச்சியுடன் வரவேற்று ஏற்றுக் கொண் டாள் என்றும் கந்தபுராணம் கூறுகிறது.

திருத்தணிகை காஞ்சீபுரத்திலிருந்து 40 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து 85 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. திருத் தணிகையில் மலை மீது முருகன் ஆலயம் உள்ளது. ஆலயத்தைச் சுற்றித் தேரோடும் வீதிகள் அமைந்துள்ளன.

கருவறையில் முருகப்பெருமான் சக்தி யாயுதத்தை ஏந்தி, ஞான சக்திதரனாகத் தனி யாக நிற்கின்றான். இருபுறமும் உலாத் திரு மேனிகளாக வள்ளி தெய்வயானையும் போக சக்தியராக எழுந்தருளியுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவறைக்கு இணையாக இரு புறமும் இரண்டு சந்நிதிகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் வலப்பால்உள்ளதில் வள்ளியும் இடப்பால்உள்ளதில் தெய்வயானையும் மூலமூர்த்தியாக எழுந்தருளியுள்ளனர்.

இந்திரன்; இங்கு முருகனை கல்ஹார (செங்கழுநீர்ப்பூக்களால்) புஷ்பங்களால் வழிபட்டான் என்று புராணங்கள் கூறுகின்றன. மலைப் படிக்கட்டு ஓரத்தில் இந்திரன் அமைத்த இந்திரநீலச்சுனையும், அதன் முன்பாக விநாயகர் திருவுருவமும் உள்ளன.

இங்கு முருகனின் கருவறை நோக்கிய வாறு மயில் இல்லை. அதற்குப் பதிலாக இந்திரன் அவருக்கு அளித்த ஐராவதம் நிற்கிறது. அதுவும் முருகனை நோக்காமல் அவருக்குப் பின்புறத்தைக் காட்டிக் கொண்டு கிழக்கேயுள்ள இந்திர லோகத்தில் தலை நகரான அமராவதியை நோக்கி நின்று கொண்டிருக்கின்றது என்கின்றனர்.

இத்தலம் கிருத்திகை விழாவுக்குப் பெயர்பெற்றதாகும். ஆடிகிருத்திகையன்று பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் காவடி எடுத்து பிரார்த்தனை செலுத்துகின்றனர்.

இத்தலத்தில் முருகன் சினந்தணிந்து வீற்றிருப்பதால், சூரசம்ஹார விழா நடத்தப் படுவதில்லை. சஷ்டியில் சிறப்பு அபிஷேக அலங்கார வழிபாடுகள் மட்டுமே நடத்தப் படுகின்றன.

இவ்வாலயத்தில் மாசி, சித்திரை ஆகிய மாதங்களில் பெருந்திருவிழாக்கள் நடத்தப் படுகின்றன.அனைத்து கிருத்திகைகளிலும் பெருமளவு மக்கள் வந்து வழிபடுகின்றனர். குறிப்பாக சித்திரை மாதவிழாவின்போது தெய்வயானைத் திருமணமும் மாசி மாதப் பெருந் திருவிழாவில் வள்ளி திருமணமும் நடத்தப் படுகின்றன.

மாசி மாத அசுவினி நட்சத்திரத்தில்



அருள்மிகு ஜயந்தி நாதர்-செந்திலாதிபன்

கொடியேற்றப்பட்டு பத்து நாட்கள் விழா நடைபெறுகிறது.முன்னாளில் இவ்விழாவின் ஆறாம் நாளில் மஞ்சள் நீராட்டு விளையாட்டும். ஏழாம் நாள் தேவதாசியர் நடத்தும் காதல் கூத்து என்னும் நாடகமும் நடந்து வந்துள்ளன. காதல் கூத்து என்பது தினப் புனத்தில் வள்ளியோடு முருகன் காதல் மொழி பேசி பல்வேறு திருவிளை யாடல்கள் புரிந்ததைக் குறிக்கும் ஐதீக நாடகக் காட்சிகளாகும்.இந்நாளில் இவ் விழா பழைய வழத்தின்படி நாடகங்களோடு நடத்தப்படுவதில்லை. காலத்திற்கேற்ப புதிய முறையில் நடத்தப்படுகிறது.

இந்நாளில் எட்டாம்நாள் பகலில் முருகன் மலையிலிருந்து கீழிறங்கி ஆறு முகர் கோயிலுக்குச் செல்கிறார். அங்கு அபிஷேக ஆராதனைகள் நடந்ததும், மீண்டும் மலைக் கோவிலுக்கு வந்து குதிரை வாகனத்தில் பவனி வருகிறார். அதன் பின்னர் முருகன்,வள்ளி, வேடர் ரூபமான முருகன் ஆகியமூவரும் மலையின் மேற்குப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகுதியில் அமைந்திருக்கும் மண்டபத் திற்கு எழுந்தருள்கின்றனர். அங்கு சிறப்பு வழி பாடுகள் நடத்தப்படுகின்றன. பிறகு மலைக்கு மேல் வந்து ஆலயத்தின் தென் புறம் அமைந்துள்ள வள்ளி திருமண மண் டபத்தில் வள்ளி திருமணம் சிறப்பாக நடை பெறுகிறது. இது விடிய விடிய நடைபெறும் திருவிழாவாக அமைந்துள்ளது. விழாவில் திருமணப் பரிசாக அன்பர்கள் மொழி எழுதுகின்றனர்.

பிறகு வள்ளி தெய்வயானை ஏசல் என்னும் (வள்ளியும் தெய்வயானையும் வாதம் புரிந்து ஏசுதல்)விழாவும் (தெய்வ யானை கதவடைத்துக் கொண்டு ஊடல் விழா)பிறகு முருகன் இருவரையும் சமா தனப்படுத்தி ஏற்றுக் கொள்வதும் நடை பெறும்.11ம் நாள் ஏழு சுனைக்கருகில் (வள்ளியம்மையின் தாய் வீடு என்று கருதப் படும் இடத்திற்கு) முருகனை எழுந்தருளச் செய்து திருமண மறு உண்ணும் விழாவும் எளிய முறையில் நடைபெறுகின்றன.

சித்திரை மாதப் பெருந்திருவிழா மிருக சீரிஷத்தில் கொடியேற்றி சித்ராபெளர்ணமி யில் நிறைவடையும்வகையில் கொண்டாடப் படுகிறது. இதில் எட்டாவது நாள் தெய்வ யானைத் திருமணம் நடைபெறுகிறது. இதிலும் ஊடல் விழா எளிய முறையில் நடத்தப்படுகிறது. இவ்விழாவின் 10ம் நாள் இரவு மலைக்குக் கிழக்கே 5 கி.மீ தொலை வில் விநாயகபுரத்திற்கு எழுந்தருளுகின்றார். இது தெய்வயானைப் பிராட்டியாரின் தாய் வீடு என்று போற்றப்படுகிறது.

இரண்டு பெருந்திருவிழாக்களில் முருகன் இருபெரும் தேவியரை மணப்பதும் ஊடல் விழா கொண்டாடுவதும் இத்தலத் திற்கே உரிய காட்சிகளாகும்.

தெய்வயானையும், நீலோற்பல மலரும்

முருகனோடு அமைந்துள்ள வள்ளி தேவியின் திருக்கரத்தில் தாமரை மலரும், தெய்வயானையின் திருக்கரத்தில் நீலோற்பல மலரும் இருக்கின்றன. நீலோற்பலம் ஓடைகளில் மலரும் தெய்வீக மலர். திருத்தணிகை மலையில் அமைந்த ஓடைகளிலும், சுனைகளிலும் நீலோற்பல மலர்கள் பூத்துக் குலுங்கின. அந்த மலர்களின் பெயரால் தணிகைமலைசெங்கழுநீர்வரை என்றும் உற்பலகிரி என்றும் அழைக்கப்படுகிறது. செங்கழுநீர் மலரும் குன்றின் தலைவன் என்ற பொருளில் அவன் செங்கழுநீர் வரையன் எனப்பட்டான். அதுவே திரிந்து செங்கல்வராயன் என ஆனது என்பர்.

தணிகை மலையில் இந்திரன் தோற்றுவித்த இந்திர சுனை உள்ளது. அதில் நாள்தோறும்தெய்வீக நீலோற்பலமலர் பூத்ததென் றும், அதைக் கொண்டு அவன் முருகனை வழிபட்டான் என்றும் கூறுவர். மலைப் பாதையில் உள்ள இந்திர நீலச் சுனையின்கரையில் இந்திரநீல விநாயகர் உள்ளார். தேவேந்திரன் பூசிக்கும் மலராகவும், தெய்வயானை ஏந்தும் மலராகவும் நீலோற்பல மலர் விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்போரூர் கந்தசாமி ஆலயத்தில் வள்ளி தெய்வயானையர் வழிபாடு

திருச்செந்தூருக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் முருகன் திருத் தலம் திருப்போரூர்.

சென்னை மாமல்லபுரம் (ஓ.எம்.ஆர் எனப்படும் பழைய மாமல்லபுரம்) சாலை யில் சென்னையிலிருந்து 37 கிலோ மீட்டர் தொலைவில் திருப்போரூர் இருக்கிறது. புராணங்களில் இது போரியூர், சமராபுரி, யுத்தபுரி, குமாரபுரி என்று பல பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலம் தெய்வயானையம்மைக்கு ஏற்றம் அளிக்கும் தலமாகும்.கிழக்கு நோக்கி யுள்ள நெடிய வாயிலைக் கடந்து கொடிமரம், பலிபீடம், மயில் உள்ள வட்டமான மயில் மண்டபத்தை வணங்கி. ராஜகோபுரத்தின் வழியாகச் சென்றதும் மகாமண்டபத்தினை அடையலாம். இம்மண்டபத்தின் வடக்கே தெற்கு நோக்கியவாறு தெய்வயானையம் மையார் எழுந்தருளியுள்ள பெருஞ்சந்நிதி தனிச் திருச்சுற்றுப் பிராகாரத் துடன் உள்ளது.

இந்தச் சந்நிதியின் புறச்சுவர்களில் ஐந்து சக்தியர் வடிவங்கள் உள்ளன. கருவறையில் தெய்வயானைப் பிராட்டியார் நான்கு கரங் களுடன் திகழ்கின்றாள். மேல் வலது கையில் நீலோற்பலமலரும் இடது கையில் தாமரை மலரும் உள்ளன. முன்வலது கை அபய முத்திரை காட்ட, இடது கையைத் தொடை மீது வைத்துள்ளாள்.

சிதம்பரசுவாமிகள் மதுரையைச் சேர்ந் தவராக இருந்ததால், மதுரையை ஒட்டி அமைந்திருக்கும் திருப்பரங்குன்றத்தை அடியொற்றியே இங்கு தெய்வயானைக்கு முதன்மை அளித்துள்ளார் என்கின்றனர்.

பின்னாளில் வள்ளிக்கும் சிறப்பளிக்கும் வகையில் தனிச்சந்நிதி அமைக்கப்பட்டுள் ளது. என்றாலும் அச்சந்நிதி உற்சவர் கொலு மண்டபத்தையொட்டி ஓரமாக அமைந் துள்ளது. இதில் வள்ளியம்மையும் நான்கு கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின் றாள். மேல் வலது கரத்தில் தாமரை மலரும் இடது கரத்தில் நீலோற்பல மலரும் ஏந்தி, வலது முன்கை அபய முத்திரை காட்டி இடது முன் கையைத் தொடை மீது ஊரு முத்திரை யாக வைத்துள்ளாள்.

அருள்மிகு கந்தசாமி திருப்போரூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தலத்தில் உற்சவ முருகனுடன் தனி வள்ளியும் தனி தெய்வயானையும் உள்ளனர். மாசி மாதம் நடைபெறும் பெருந்திருவிழா வின்போது நாள்தோறும் இவர்கள் முருக னுடன் பல விதமான வாகனங்களில் பவனி வந்து அருள் பாலிக்கின்றனர். இவர்கள் பவனி வர அழகிய வாகனங்கள் உள்ளன.

உற்சவருக்கு உரிய சபாமண்டபத்தின் இருபுறமும் இரு சந்நிதிகள் கட்டப்பட் டுள்ளன. அதில் உற்சவ தனித் தெய்வயானை யும், உற்சவ தனிவள்ளியும் எழுந்தருளியுள் ளனர். உற்சவரான வள்ளி, தேவசேனா உடனாய முருகப் பெருமானுக்கு நீள் சதுர மான சபாஹார விமானமும் தேவியர் இருவ ருக்கும் ஒற்றைக் கலசத்துடன் கூடிய ஏகதள விமானங்களும் அமைந்திருக்கின்றன. இதுவும் வேறு தலங்களில் இல்லாத அமைப் பாகும்.

அருள்மிகு தெய்வயானை

இத்தலத்தில் மாசிமாத விழாவின் இறுதியில் வள்ளி திருமண விழா சிறப்பாக நடைபெறுகிறது. இவ்விழாவின் பத்தாம் நாளில் கொடியிறங்கியதும் முருகன் மலை வலம் வரும் விழா கொண்டாடப்படுகிறது.

பன்னிரண்டாம்நாள் வள்ளி தினைப் புனம் காத்தல், முருகன் காதல் மொழி பேசி அவளைக் காந்தர்வ மணம்புரிதல், அவளைச் சிறையெடுத்து வருதல், செய்தியை அறிந்த வேடுவர் துரத்தி வந்து போரிடுதல், அவர்கள் மாண்டு வீழ்தலாகிய படுகளம், வள்ளியம் மையின் வேண்டுகோளையேற்று அவர்களை உயிர்ப்பித்தல் ஆகியவை மலையைச் சுற்றி லும் ஆங்காங்கு பந்தலிட்டு ஐதீக விழாவாக நடத்தப்பட்டது. இதைக் காண ஏராளமான மக்கள் கூடியுள்ளனர். இந்நாளில் மலை வலம் வருவது மட்டுமே நடைபெறுகிறது.

முன்பு தேவரடியார் என்னும் கோயிற் பெண்களே காமக்கூத்து எனும் பெயரில் வள்ளி திருமண ஐதீக நாடகத்தை நடத்தி வந்தனர். பின்னாளில் ஆலயங்களில் இருந்து அவர்கள் பணி நிறுத்தப்பட்டதால் அவர்கள் செய்து வந்த பணிகளும் ஆலயங்களில் நின்று போயின. அப்படி நின்று போன விழாக்களில் இந்த வள்ளி திருமண நாடகமும் ஒன்று. இந்நாளில் 12ம் நாளில் எளிய நிலையில் வேடர்பறிக் காட்சியும் தொடர்ந்து வள்ளி திருமணமும் நடைபெறுகின்றன.

நாள்தோறும், வள்ளி தெய்வயானை உடனாய முருகப்பெருமான் ஸ்ரீபலி நாயக ராக எழுந்தருளி, திக்பாலகர்களுக்குப் பலி அளிக்கும் நித்தியோத்சவ விழா நடத்தப்படு கின்றது. இரவில் அர்த்தசாம பூசைக்குப் பிறகு வள்ளி தெய்வயானையருடன் அமர்ந்த வாறு பிரம்மசாத்தனாக விளங்கும் முருக னின் திருக்கோலத்தைப் பல்லக்கில் வைத்துப் பவனிவந்து பள்ளியறையில் சேர்த்து விழா கொண்டாடுகின்றனர். நித்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உற்சவம்,பள்ளியறை நாயகர் ஆகிய இரு இவ்விரு மூர்த்தங்களிலும் பெருமானுடன் வள்ளி,தெய்வயானையர் இருவரும் உள்ளனர்.

இத்தலத்தில் ஐப்பசிமாதம் நடைபெறும் கந்தர் சஷ்டி விழாவில் சஷ்டியன்று சூரசம்ஹாரமும் அதற்கடுத்த நாள் தெய்வயானை திருமணமும் நடத்தப்படுகின்றன.

இத்தலத்தில் நவராத்திரி விழா சிறப்புடன் நடைபெறுகின்றது. இதில் வள்ளியும் தெய்வயானையும் எழுந்தருளியிருந்து விழா காண்கின்றனர். இவ்விழாவில் வள்ளி தெய்வயானையருக்குச் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. இதுவும் வேறு எங்கும் இல்லாத விழாவாகும்.

சிவாலயப் பெருவிழாவில் இடப வாகனக் காட்சியும், திருமால் ஆலயங்களில் கருடசேவையும் நடைபெறுவது போல, இத் தலத்தில் மயூரவாகனக் காட்சி நடத்தப்படுகின்றது.முருகன் வெள்ளி மயிலிலும்,தெய்வயானை தங்கமயிலிலும், வள்ளியம்மை பச்சை மயிலிலும் பவனி வந்து காட்சி அளிக்கின்றனர். திருப்போரூரில் நடைபெறும் தங்க மயில் வாகனக் காட்சி பெருஞ் சிறப்பு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சேயூர் மேய செவ்வேளும் இருபெரும்தேவியரும்

வங்கக் கடலோரம் அமைந்துள்ள முருகனின் திருப்பதிகளில் செய்யூர் ஒன்று. சேயூர் என்று இலக்கியங்களில் குறிக்கப்படும் செய்யூரில் பெரிய முருகன் ஆலயம் உள்ளது.சேய் என்பது முருகனுக்குரிய பெயர்களில் ஒன்று. அப்பெயரால் அமைந்த இவ்வூர் சேயூர் என அழைக்கப்பட்டு இப்போது செய்யூர் என வழங்குகிறது.

இவ்வாலயம்வேதாளகணம் சூழ முருகன் கொலு வீற்றிருக்கும் ஆலயமாக உள்ளது. இங்குள்ள பெருமானுக்குக் கந்தசுவாமி என்பது பெயர்.

இக்கோயிலில் தாவும் குதிரைகள் தாங்கும் பெரிய ஊஞ்சல்மண்டபமும், அம் மண்டபத்தின் நடுவில் விசாலமான ஊஞ்சற் கூடமும் உள்ளன. இம்மண்டபத் தின் வடக் குப் பகுதியில் இரண்டு அறைகள் உள்ளன. இவற்றுள் அமைந்திருக்க அதன் இருபுற மும் உள்ள அறைகளில் தனித்தனியே தெய்வயானையும்,வள்ளியம்மையும் எழுந்தருளியுள்ளனர்.இப்படி இணையாகவும் ஒரே மண்டபத்திலுமாக வள்ளி தெய்வயானையர் இருப்பது வேறெங்குமில்லை.

அருள்மிகு வள்ளி,தெய்வயானை மண்டபம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை மாநகர் முருகன் ஆலயங்களில் அருள்நிறை வள்ளி தெய்வயானையர் வழிபாடு

தண்தமிழ்நாட்டின் தலைநகராகத் திகழ்வது சென்னை மாநகரம். சிறியதும் பெரியதுமாக இருந்த கிராமங்கள் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் படிப்படியாக ஒன்று சேர்ந்து பெரியநகரமாக உருப்பெற்றுச் சென்னை என்ற பெயருடன் திகழ்ந்து வருகின்றது.

இந்த நகரம் வளர்ந்து வரும் வேளையில் பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் இங்கு குடியேறினர். அவர்கள் தத்தம் பகுதியில் தாம் சிறப்புடன் வணங்கிவந்த விநாயகர், சிவன், திருமால், அம்பிகைமுதலிய தெய்வங்களுக்கான திருக்கோயில்களைத் தத்தம் வாழிடங்களில் புதியதாகக் கட்டினர்.

இவ்வகையில் பெரிய முருகன் ஆலயங்களும் தோன்றின. புகழ் பெற்ற முருகன் ஆலயங்களான திருப்போரூர் கந்தசுவாமி ஆலயம் காஞ்சி குமரகோட்ட முருகன் ஆலயம் போன்றவற்றினைப் போற்றும் வகையில், பலஅருட்கோயில்கள் சென்னை யில் உருவாயின.

இப்படி பல்வேறு தலங்களைக் குறிக்கும் வகையில் கட்டப்பட்ட இத்தகைய முருகன் ஆலயங்களில் தனிச் சிறப்பு பெற்றவை சென்னையின் மையப்பகுதியான ஜார்ஜ் டவுனில் உள்ள கந்தசாமி கோயில், இதே பகுதியில், என்.எஸ்.சி. (நேதாஜி சுபாஷ் சந்திர)போஸ் சாலையில் உள்ள குமரக் கோட்டம், சைதாப்பேட்டை செங்குந்த கோட்டம் எனப்படும் சிவசுப்பிரமணியசுவாமி கோயில், சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனை ஒட்டியுள்ளகுசப்பேட்டை கந்தசாமி கோயில், திருவல்லிக்கேணி சுப்பிரமணியசுவாமி, தேனாம்பேட்டை பாலசுப்



கொலு மண்டபத்தில் வள்ளி தெய்வ யானை உடனாய முருகன் அவருக்கு வலப்புறம் வள்ளியும் இடப்புறம் தெய்வயானையும் தனித்தனியாக எழுந்தருளியுள்ள கோலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமணியசுவாமி கோயில் முதலியன வாகும்.

இவற்றில் பெரும்பாலானவை குமார தந்திரத்தின் அடிப்படையில் அமைந்தவை இத்தலங்களில் மூலவராக முருகன் வள்ளி தெய்வயானையருடன் காட்சியளிக்கின்றார்.

இக்கோயில்கள் அனைத்திலும் உலாத் திருமேனியாக விளங்கும் முருகப்பெருமானுடன் இணைந்த நிலையில் இருப்பதுடன் தனித்தனியேயும் வள்ளி தெய்வயானையரை நிலைப்படுத்தியுள்ளனர். இவர்களைத் தனி வள்ளி தனி தெய்வயானை என அழைக்கின்றனர்.

இக்கோயில்களில் நடைபெறும் பெருந் திருவிழாக்களில் நாள்தோறும் இரு வேளைகளிலும் முதலில் விநாயகர் அல்லது வீரபாகுவும் தொடர்ந்து வள்ளி தேவ சேனை உடனாய கல்யாண முருகனும், தொடர்ந்து தனி வள்ளியும்,அவளுக்குப் பின் தனி தெய்வயானையும் இறுதியாக சுமந்தரீசுவரரும் பவனி வருகின்றனர்.



இக்கோயில்களில் சூரசம்ஹார விழாவிற்குப் பின் தெய்வயானைத் திருமணமும், பெருவிழாவின் அங்கமாக வள்ளி திருமணமும் நடத்தப்படுகின்றன.

சென்னை கந்தகோட்டத்தில் நடைபெறும் வள்ளி திருமண விழாவும், தெய்வயானைத் திருவிழாவும் மிகவும் புகழ் பெற்றவைகளாகும்.

சென்னை நகரில் முருகனுடன் தனித் தெய்வயானை, தனி வள்ளி பவனி வருதல்

அறுபடை வீடு எனப்படும் முருகன் ஆலயங்களில் திருச்செந்தூரில் மட்டுமே தனி வள்ளி, தனி தெய்வயானையருக்கு உலாத் திருமேனிகள் உள்ளன. அங்கு கூட குடமுழுக்கு நாளான சம்வத்ராபிஷேக நாள் தவிர மற்றைய திருவிழா நாட்களில் தனி வள்ளி வரும் போது தனி தெய்வயானை வருவதில்லை. தெய்வயானை உலாப் போகும் நாளில் தனி வள்ளி வருவதில்லை. சென்னையிலுள்ள முருகன் கோயில்களில் மட்டுமே பெருந்திருவிழாவில் அனைத்து நாட்களிலும் முருகப் பெருமானைத் தொடர்ந்து தனி தெய்வயானையும், தனி வள்ளியும் வீதி வலம் வந்து அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

முருகன் மயிலில் வரும்போது இவர்கள் மயிலிலும், முருகன் யானையில் வரும்போது யானையிலும்,கற்பக விருட்சத்தில் வரும் போது காமதேனுக்களிலும் உலா வருவது காணற்கினிய காட்சியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் வள்ளி தெய்வயானையர்

காஞ்சிபுரம் குமரகோட்டம் முருகன் வரலாற்றில் சிறப்புப் பெற்ற தலம். கந்த புராணத்தைத் தமிழில் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் பணி செய்த திருத்தலம். அவர் கந்தபுராணத்தைப் பாடிய வேளையில், முருகன் நாள்தோறும் அவற்றைக் கேட்டு, அதில் திருத்த வேண்டிய இடங்களில் திருத்தியும், நூலின் அரங்கேற்றத்தின் போது முதற்பாடலிலேயே இலக்கணப் பிழை என்று புலவர்கள் தடை செய்தபோது தாமே இலக்கணப் புலவனாய் வந்து அதை விளக்கி,

அந்நூலை அரங்கேற்றம் செய்தும் அருள்புரிந்த தலம். இங்கு பெருமான் பிரமசாத்தன் என்னும் கோலத்தில் உள்ளார். இது உலகைப் படைத்துக் கொண்டு நிற்கும் கோலமாகும்.

கருவறையைச் சுற்றி அமைந்த முதற் பிரா காரத்தில் வள்ளி தெய்வயானையருக்கெனத் தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன. பிராகாரத்தின் வடகிழக்கு, தென்கிழக்கு முனைகளில்அமைந்துள்ள தனித்தனிச் சந்நிதிகளில் இவர்கள் எழுந்தருளியுள்ளனர். வடகிழக்கு முனையில் வள்ளியம்மை நாச்சியாரும், தென் கிழக்கு முனையில் தெய்வானைப் பிராட்டியாரும் எழுந்தருளியுள்ளனர். முருகன் மேற்கு நோக்கியுள்ளதால் இவர்களும் மேற்கு நோக்கியுள்ளனர்.

காஞ்சிபுரத்தில் உள்ள சைவ ஆலயங்களில் அம்பிகைக்குத் தனிச் சந்நிதியும், மூலவராகக் கல் வடிவமும் அமைக்கும் வழக்கமில்லை. அவளை உலாத்திருமேனியாகவே எழுந்தருளி வைத்து வழிபடுகின் றனர்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்திலும், ஏலவார் குழலியான (தனியம்மன்) அம்பிகை உலோகத் திருமேனியாகத் தனி ஆலயத்தில் இருக்கக் காண்கிறோம்.

இதையொட்டிக் குமரகோட்டத்திலும் வள்ளி, தெய்வயானையரை மூலவராகக் கல் திருமேனியாக அமைக்கவில்லை. என்றாலும், மூலவருக்கு ஏற்ற உயரத்தில் பஞ்ச லோகத் திருமேனிகளாகவே வள்ளி தெய்வயானையரைச் செய்து (மூலவருக்கு இணையாக இருக்கும் வகையில்) தனிச் சந்நிதிகளில் எழுந்தருளி வைத்துப் பூசித்து வருகின்றனர்.

இத்தலத்தில் வள்ளி தெய்வயானையர் தம்முள் இணைந்து ஒரே திருமேனியாகக் காட்சி அளிக்கும் ஸ்ரீமகாவல்லி கஜவல்லியின் அழகிய திருவுருவம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வயானையார் வழிபட்ட சக்திலிங்கம்

பலவிதமான நலங்களும் வளங்களும் பொருந்திய மங்கலமான வாழ்வு வாழ்வதற்கு இறைவனின் அருள்துணையிருப்பது இன்றியமையாதது. அத்தகைய அருளைப் பெற, மானுடர்கள் மட்டுமின்றி, தெய்வங்களும் சிவபூசை செய்கின்றனர்.முருகனின் இருபெரும் தேவியர்களில் ஒருத்தியான தெய்வயானையும்சிவபூசைசெய்து, மேன்மை பெற்றுள்ளாள் என்பதைப் புராணத்தால் அறிய முடிகிறது.

தெய்வயானை இந்திர லோகத்தில் தெய்வீக ஓடையில், நீலோற்பல மலரில் பெண் குழந்தையாக அவதரித்தாள். அது கண்ட இந்திராணியும் தேவேந்திரனும் அவளைத் தமது திருமகளாக ஏற்று வளர்த்து வந்தனர். கற்பகமரத்தில் கட்டப் பட்ட தங்கத் தொட்டிலில் காமதேனு பாலூட்ட, ஐராவதம் தாலாட்டத் தெய்வயானைப்பிராட்டியார் வளர்ந்தாள்.

சேனம் என்பதற்குக் காப்பது என்பது பொருள். தேவர்கள் குலத்தைக் காக்க வந்த வளாதலின் அவள் தேவசேனா எனப்பட்டாள்.

தேவசேனா தேவர்தம் மகளாக இருந்த போதும் முருகனைக் கணவனாக அடைய விரும்பினாள். நல்ல மண வாழ்வும் உயர்ந்த இன்பங்களையும் தருவது சிவபூசையே என்பதால், அவள் சிவபூசை செய்ய விரும்பினாள்.

வங்கக் கடலோரம் உள்ள சந்தன மரங்கள் நிறைந்த கந்தமாதன பர்வதத்தை அடைந்தாள். அங்கு, தேவர் தொழும் பிரானாக விளங்கும் பஞ்சலிங்கங்களைக் கண்டு வணங்கினாள்.

பின்னர்,சிவயோக சக்தியால் சூரியனிடமிருந்து உண்டான சத்திலிங்கத்தைப் பெற்று,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கு வைத்து வழிபட்டாள். கற்பகமரம் நிழல் பரப்ப, தேவர்தம் அமுதத்தாலும் காம தேனுவின் பாலாலும் லிங்கத்தை அபிஷே கித்துக் கற்பகமலர்களைச் சூட்டி வழிபட் டாள். ஐராவதம் தமது வளர்ப்பு மகளின் சிவபூசைக்கு உதவியாகச் சாமரம் வீசியது.

பூசையால் மகிழ்ந்த சிவபெருமான், அந்தச் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, அவளுக்குமுருகனைக் கணவனாக அடையும் வரத்தை அளித்தார்.

அவரை வழிபட்டு விடைபெற்றுக் கொண்ட தெய்வயானைப் பிராட்டியார், அந்த லிங்கத்தை அங்கேயே வைத்துவிட்டுத் தேவர் உலகம் திரும்பினாள்.

அந்த லிங்கத்திற்கு ஜகந்நாதர் என்பது பெயராயிற்று. பின்னாளில் சூரபத்மன் மீது போர் தொடுக்க வந்த முருகன் இந்தக் கந்த மாதனக் குன்றில்தான் முதல் படைவீடு அமைத்துத் தங்கியிருந்தார்.

அங்கு, தெய்வயானையால் வழிபடப் பட்ட யோக லிங்கமான ஜகந்நாதரை வெளிப்படுத்தி, தமக்கு வெற்றி உண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்து சிறப்புப் பூசைகள் செய்தார்.

சூரபத்மனை வென்று, அவனை மயிலா கவும் சேவற்கொடியாகவும் கொண்டார். தேவர்களைச் சிறைமீட்டார். தேவேந்திர னுக்குத் தேவேந்திரலோகத்தை அளித்தார்.

பின்னர், பெருவீரனாகிய சூரபத்மனை யும் அசுரர் கூட்டத்தையும் அழித்த பாவம் தீரக் கந்தமாதன பர்வதத்தின் குகையில் அமைந்திருக்கும் பஞ்சலிங்கங்களை வழி பட்ட பின்னர் ஜெகந்நாதரையும்வழிபட் டார். அவரைப் பூசை செய்யும் திருக்கோலத் திலேயே இன்றும் அங்கு சேவை சாதிக் கின்றார்.

திருச்செந்தூர் ஆலயத்தில் சிவபூசை செய்யும் கடற்கரையாண்டியாக சுப்பிரமணி யர் எழுந்தருளியுள்ளார். கருவறையில் உள்ள மாடத்தில் ஆதியில் தேவசேனையா லும், பின்னர் அவரால் சதா பூசிக்கப்படும் சிவலிங்கமாகவும் ஜகந்நாதர் எழுந்தரு ளியுள்ளார். மற்றோர் மாடத்தில் கஜ லட்சுமி யின் வடிவம் உள்ளது.

திருச்செந்தூரில் தினமும் செந்திலாதி பனுக்குப் பூசை நடைபெற்றதும், ஜெகந்நாத லிங்கத்திற்கும் வழிபாடு நடத்தப்படுகிறது. இவ்வழிபாட்டை முருகனே நடத்துவதாக ஐதீகம்.

இந்த லிங்கம் ஆவுடையாருக்குள்ளே யே அடங்கியிருக்கும் வகையில் பாணப் பகுதி வெளிப்படாத அமைப்பிலான சக்தி லிங்கமாகும். இதனைச் சூரியலிங்கம் என்றும் அழைக்கின்றனர்.

ஸ்ரீவள்ளி பாதம்

சிவபெருமான் தேவியின் திருவடிகளைப் பற்றி வணங்குகிறான் என்று புராண நூல்கள் பேசுகின்றன. அதுபோலவே முருகனும் தன்தே தவியான வள்ளியின் பாதங்களை வருடி மகிழ் கின்றான். அருணகிரிநாதர் முருகனை (வள்ளி) பாதம் வருடிய மணவாளன் என்றும், வள்ளி பதம் பணியும் அதிமோக தயாபரன் என்றும், குறமின் பதசேகரனே என்றும் போற்றுகின்றார். வள்ளியின் பாதம் பதிந்த பாறை சென்னிமலையில் உள்ளது. அதற்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்கின்றனர். முருகனின் பாதம் வள்ளிஅகரத்தில்(வெளியகரம்) உள்ளது. குகனின் அருளே வள்ளி யின் வடிவமாகும். அவளது பாதம் கரைகாண அருள் வெள்ளமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொங்குநாட்டில் வள்ளி தெய்வயானை வழிபாடு

முன்னாளில் தமிழகம் சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடுஎன்ற மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டிருந்தது. இன்றைய சேலம், கரூர், கோவை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியைக் கொங்குநாடு என்று அழைக்கின்றனர். கொங்குநாடு மலைகள் நிறைந்த நாடு. இங்குள்ள மலைகள் பல வற்றில் முருகன் பாலதண்டாயுதபாணியாக எழுந்தருளியிருக்கிறார். இவைகளில் ஏழு மலைகள் முதன்மை பெற்றவை. சிவன் மலை, சென்னிமலை, அரளிமலை, பழனி மலை, வெள்ளிமலை, வட்டமலை, கதித்த மலை என்ற ஏழும் கொங்கேழ் மலைகள் என்று போற்றப்படுகின்றன.

மேலும், மருதமலை, அலகுமலை, உதயகிரி, குருந்த மலை, கதித்தமலை முதலிய மலைகளில் முருகன் தண்டாயுத பாணியாக எழுந்தருளியிருந்து அருள்பாலித் துக் கொண்டிருக்கிறார்.

இத்தலங்கள் பெரும்பாலானவற்றில் வள்ளி, தெய்வயானையரைத் திருக்கோயி லுக்குள் அமைக்காமல் கோயிலை அடுத் துள்ள குன்றில் தனிஆலயம் அமைத்து அதில் எழுந்தருளச் செய்துள்ளனர்.

சில தலங்களில் ஒரே பாறையில் இரு வர் திருவுருவத்தையும் செதுக்கி அமைத் துள்ளனர். இதுபோன்று ஒரே சந்நிதியில் தேவியர் இருவரும் சேர்ந்துஇருப்பதை வேறு பகுதிகளில் காண முடியவில்லை. இவர்களுக்கெனத் தனியே உலாத் திருமேனி அமைக்கும் வழக்கமும் இல்லை.

❂ சென்னிமலையில் வள்ளி தெய்வ யானையர் திருவுருவங்களுக்கு இடையே சிவலிங்கம் உள்ளது. இந்த லிங்கத்தை அகத்தியர் அமைத்தார் என்கின்றனர்.

❂ கதித்தமலை-வள்ளி, தெய்வ யானையர்

❂ குருந்தமலையில் வள்ளிமலை என்னும் சிறு குன்றும், அதிலுள்ள வள்ளி குகையில் வள்ளி வடிவமும் உள்ளன.

❂ சிவன்மலையில் கருவறையில் முருகனுடன் வள்ளி மட்டுமே எழுந்தருளி உள்ளாள்.

❂ மருதமலையில் ஆதிகோயில் எனும் இடத்தில், வள்ளி தெய்வயானை உடனாகிய முருகனைச் சுயம்பு வடிவமாகக் காண்கி றோம். இதில் உருவமாக இல்லாமல் மூன்று கற்களின் வடிவில் காட்சியளிக்கின்றார். ❂

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுருகன், வள்ளி தெய்வயானைத் திருமண விழாக்கள்

இறைவன் தமது தேவியுடன் எழுந்தருளியிருக்கும் அனைத்து ஆலயங்களிலும் ஆண்டுதோறும் திருமண விழா கொண்டாடப்படுகிறது. பெருந்திரு விழாவின் அங்கமாகவோ தனியாகவோ இத்தகைய திருமண விழாக்கள் நடத்தப்படுகின்றன.

சிவாலயங்களில் சிவனுக்கும் பார்வதிக்கும், திருமால் ஆலயங்களில் தாயாருக்கும் (லட்சுமிக்கும்)பெருமாளுக்கும் திருமணம் நடைபெறுகின்றன.

முருகன் மூலமூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஆலயங்களில் வள்ளிகல்யாணமும், தெய்வயானைக் கல்யாணமும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. சிவாலயங்களில் முருகன் பரிவார மூர்த்தியாக எழுந்தருளியிருந்த போதிலும், அங்கும் அவருக்குத் திருமண விழாக்கள் நடத்தப்படுகின்றன.பெரும்பாலான சிவாலயங்களில் அதில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு ஐப்பசி மாதம் கொடியேற்றி,கந்தர் சஷ்டிப் பெருவிழா கொண்டாடுகின்றனர்.

பிரதமையில் கொடியேற்றத்துடன் தொடங்கும் இவ்விழா சஷ்டியில் சூரசம்ஹாரம், அடுத்த நாள் தெய்வயானைக் கல்யாணம் ஒன்பதாம் நாள் மஞ்சள் நீராடல், பத்தாம் நாள் இருப்பிடம் சேர்தல் ஆகியன நடத்தப்படுகின்றன. சில கொடியேற்றாமலும் இவ்விழா கொண்டாடப்படுகின்றது. பெரும்பாலும் சிவாலயங்களில் தெய்வயானைத் திருமண விழா மட்டுமே நடத்தப்படுகிறது. (வள்ளி திருமணம் நடத்துவதில்லை)

தனி முருகன் ஆலயங்களில் ஐப்பசி மாத சஷ்டியில் தெய்வயானைத் திருமணத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துடன் பங்குனி உத்திரப் பெருந்திருவிழா வின் அங்கமாக வள்ளி திருமணம் நடத்தப் படுகிறது.

திருச்செந்தூரில் ஐப்பசி சப்தமியில் தெய்வயானை திருமணமும் பங்குனி உத்திரத்தில் வள்ளி திருமணமும் நடத்தப் படுகின்றன. இத்தலத்தில் இரண்டு பெருந் திருவிழாக்கள் மாசி, ஆவணி ஆகிய மாதங் களில் நடைபெற்ற போதிலும், திருமண விழாக்கள் அவற்றின் அங்கமாக நடை பெறாமல் தனித்தனி விழாக்களாகவே நடத்தப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

திருத்தணிகையில் தெய்வானை, வள்ளி கல்யாணங்கள் ஐப்பசியில், பங்குனியில் நடத்தப்படாமல் மாசி, சித்திரை ஆகிய மாதங்களில் நடைபெறும் பெருந்திரு விழாக்களையொட்டி நடத்தப்படுகின்றன.

வள்ளியூரில் ஐப்பசி மாத கந்தசஷ்டி விழாவை சூரசம்ஹார விழாவாக நடத்தா மல், தாரகாசுர சம்ஹார விழாவாக நடத்தி, அதைத் தொடர்ந்து வள்ளி திருமண விழாவைக் கொண்டாடுகின்றனர்.

இவ்விதம் வள்ளி தெய்வயானையர் திருமணவிழாக்கள் அறுபடைவீடுகளிலும், புகழ் பெற்ற முருகன் தலங்களிலும் பல வகையாக நடத்தப்பட்டுவருகின்றன.

தொடர்ந்து வரும் பகுதிகளில் பல் வேறு தலங்களில் நடைபெறும் தெய்வ யானை திருமண விழாக்கள், வள்ளி திருமண விழாக்கள் பற்றிய செய்திகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

முன்னாளில் தேவதாசியர் எனப்படும் கோயிலில் பணிபுரிந்து வந்த ஆடல்மகளிர் வள்ளி திருமண விழாவைக் காதல் ரசம் சொட்டும் ஆடற்பாடற் கலைவிழாவாக நடத்தி வந்துள்ளனர். அவர்களது பணி கோயில்களில் இருந்து விலக்கப்பட்ட போது அக்கலையும் போய்விட்டது. இப்போது பழைமை மாறாது, வேடர்பறி முதலிய சடங்குகளுடன் மட்டுமே வள்ளி திருமணம் நடைபெறுகிறது.

முருகன் ஆலயங்களில் மட்டுமின்றி பச்சையம்மன் ஆலயங்களிலும் வள்ளி திருமணவிழா கொண்டாடப்படுகின்றது. பங்குனி உத்திரம் அல்லது சித்ரா பௌர்ண மியில் பச்சையம்மன் ஆலயங்களில் வள்ளி திருமணம் நடத்தப்படுகிறது.

அன்பர்கள் தம் இல்லத் திருமண விழாக்களுக்கான திருமண அழைப்பி தழ்களில் வள்ளி திருமணக்கோலத்தை அச்சிடும் வழக்கம் உள்ளது. வள்ளி கல்யாண விழா மங்கலம் தரும் விழாவா கவும், கருத்தொருமித்த காதலர்தம் விழா வாகவும் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வயானை திருமணம்

தெய்வயானைப் பிராட்டியார் இந்திரனின் மகளாகத் தோன்றிக் காமதேனு பாலூட்ட, ஐராவதம் காத்துச் சீராட்ட கற்பக மர நிழலில் வளர்ந்த தெய்வப் பெண். தேவ சேனாபதியாகப் பட்டம் சூடிய முருகப் பெருமான் சூரபத்மனையும் அவனது கூட்டத்தினரையும் வென்றழித்த பின்னர், தேவர்களைச் சிறைமீட்டு, அவர்களைத் தேவலோகத்தின் தலைநகரான அமராவதியில் குடியேற்றினான். இந்திரனுக்குத் தேவர்கள் தலைவனாகப் பட்டாபிஷேகம் செய்வித்த வேளையில், நாரதரின் ஆலோசனைப்படி தேவர்கள் சூரனை வென்று வாகை சூடிய முருகனுக்குத் தேவேந்திரனின் மகளான தெய்வயானையை மணம் முடித்து வைக்க விரும்பினர். அதற்கான ஏற்பாடுகளையும் செய்தனர்.

அருள்மிகு தெய்வயானை பிராட்டியார்

திருப்பரங்குன்றத்தில், தெய்வயானைக்கும் முருகனுக்கும் ஐப்பசி மாதத்து வளர்பிறை சப்தமியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இதையொட்டி முருகன் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள் அனைத்திலும் ஐப்பசி மாத சுக்ல (வளர்பிறை) சஷ்டியில் சூரசம்ஹார விழாவும் அடுத்த நாளான சப்தமியில் தெய்வயானைத் திருமணமும் சிறப்பாக நடத்தப்பட்டுவருகின்றன.

தெய்வயானைத் திருமணம் வேதாகம முறைப்படி மாலை மாற்றிச் செய்யப்படுகின்றது. திருமணத்திற்குப் பிறகு முருகன் தேவியுடன் வீதிகளில் பவனி வந்து அருள் பாலிக்கின்றார். திருச்செந்தூரிலும் பரங்குன்றிலும் நடைபெறும் தெய்வயானைத் திருமண விழாக்களைக் காணலாம்.

திருச்செந்தூரில் தெய்வயானைத் திருமணவிழா

திருச்செந்தூரில் நடைபெறும் தெய்வயானைத் திருமணவிழா சிறப்பு மிக்கதாகும். சஷ்டியில் சூரசம்ஹாரத்திற்குப் பிறகு முருகன், கடற்கரையில் உள்ள சந்தோஷ மண்டபத்திற்குச் சென்று, அங்கு வெற்றி அபிஷேகம் கண்டருள்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்மிகு தெய்வயானை முருகன் திருக் கல்யாணம் -- திருப்பரங்குன்றம்

அடுத்தநாளான சப்தமியன்று காலை தெய்வயானை ஊருக்கு மேற்கேயுள்ள தெப்பக்குளக்கரைக்குச் சென்று, அங்கிருக்கும் மண்டபத்தில் தவம் இருக்கிறாள்.

மாலையில்(குமாரவிடங்கர் எனப்படும்) முருகப்பெருமான் மாலை மாற்றுவதற்கு அங்கு எழுந்தருள்கிறார். தெற்குத் தேர் வீதியின்மேற்குக்கோடியில் மாலை மாற்றும் விழா நடைபெறுகிறது.

இருவரும் வலமாக வந்து மேலைக் கோபுரவாயில் முன்புள்ள திருமண மண்டபத்தில் எழுந்தருளுகின்றனர். இரவில் வேத விதிப்படி, திருக்கல்யாண விழா சிறப்புடன் நடைபெறுகிறது.

தொடர்ந்து மூன்று நாட்கள் ஊஞ்சல் காட்சியும், அடுத்தநாளில் மஞ்சள் நீராட்டலுடன் வீதியுலாவும் நடத்தப்பட்டு, யதாஸ்தானம் அடைகின்றனர். இதற்குப் பிறகு ஆறுமாதங்களுக்கு நடைபெறும் விழாக்களில் குமார விடங்கப்பெருமானுடன் தனித் தெய்வயானை எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள்.

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானைத் திருமணக் காட்சி

தெய்வயானையின் திருமணம் நடைபெற்றதாகப் புராணங்கள் போற்றும் திருப்பரங்குன்றத்தில் ஐப்பசி சப்தமியில் தெய்வயானைத் திருமணவிழா நடைபெறுவதில்லை. பங்குனி உத்திரத்தில்தான் தெய்வயானைத் திருமணம் நடத்தப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டும் சில ஊர்களில் தெய்வயானைத் திருமணத்தை பங்குனி உத்திரத்தில் கொண்டாடுகின்றனர்.

தொடக்க காலத்தில் திருப்பரங்குன்றத்திலும் ஐப்பசி சப்தமியே தெய்வயானைத் திருவிழா நடைபெறும் நாளாக இருந்திருக்கலாம் என்றும், ஆட்சியாளர்கள் ஆலய நடைமுறைகளில் செய்த மாற்றங்களால் இது பங்குனி உத்திரத்திற்கு மாறி இருக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தங்கமயில் வாகனத்தில் முருகனும் தெய்வயானையும் - திருப்பரங்குன்றம்

வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

பங்குனி உத்திர நாளில் காலை 5 மணி அளவில் சேத்தி எனப்படும் உற்சவர் இருப் பிடத்தில் முருகன் தெய்வயானையருக்கு மணக்கோல அபிஷேகமும், தீபாராதனை யும் முடிந்து, தேவேந்திரனால் அளிக்கப் படும் **தேவராஜ சம்பாவனை** நடத்தப்படு கிறது. தொடர்ந்து வெள்ளி சிம்மாசனத்தில் சுவாமி தெய்வயானையுடன் வீதிக்கு எழுந் தருள்கிறார். பல்வேறு மண்டபங்களில் ஆரா தனைகளைப் பெற்றுக்கொண்டபின், காலை 8 மணியளவில் சந்திப்பு மண்டபத்தை அடைந்து, தம் திருமணத்திற்கு வரும் அருள்மிகு மீனாட்சியம்மை உடனாய மீனாட்சிசுந்தரேசுவரரை எதிர்கொண்டு அழைத்துக் கொண்டு ஆலயத்திற்கு வருகிறார்.

பின்னர், கனு ஊஞ்சல்நடைபெறுகிறது. முற்பகலில் திருமண விழா சிறப்புடன் நடத்தப்படுகிறது. பிற்பகலில் அபிஷேக மும், அலங்காரமும் நடைபெறுகின்றன. இரவு 7 மணிக்கு மீனாட்சி சுந்தரேசுவரர் பல்லக்கிலும், சுப்ரமணியர் வெள்ளி ஹௌதா யானை வாகனத்திலும், தெய்வ யானை அம்மன் ஆனந்தராயர் புஷ்பப் பல்லக்கிலும் எழுந்தருளி, வீதிவலம் வரு கின்றனர். வீதிவலம் முடிந்ததும், கோயி லுக்கு முன்புறமுள்ள பதினாறுகால் மண்ட பத்தில் மதுரை சோமசுந்தரப் பெருமானுக்கு விடை கொடுத்தல் நடைபெறும்.

பின்னர் முருகனும் தெய்வயானையும் கோயிலுக்கு எழுந்தருளுகின்றனர். அடுத்த நாள் தேரோட்டமும், அதற்கடுத்த நாள் தங்க மயில் காட்சியும் நடைபெறும். (பொதுவாக, பெருந்திருவிழாவின் பன்னிரண்டாம் நாள் வள்ளி திருமணவிழாவை நடத்துகின்ற ஐதீகத்தைக் கடைப் பிடிக்கின்றனர். இங்கும் பன்னிரண்டாம் நாளில் தெய்வயானை திருமணம் நடத்தப்படுவது குறிப்பிடத் தக்க தாகும். முன்னாளில் இத்தலத்தில் வள்ளி திருமணம் நடைபெற்று வந்ததை நாட்டுப் புறப் பாடல்களால் அறியமுடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பரங்குன்றத்து தெய்வயானை திருமணச் சிற்பக்காட்சி

திருமணஅழைப்பிதழ்களின் முகப்பில் தெய்வங்களின் திருமணக் கோலங்களை அச்சிடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. பெரும்பாலும் மீனாட்சி திருமணமே அதிக அளவில் திருமண அழைப்பிதழ்களில் இடம் பெறுகின்றன. அதற்கடுத்த நிலையில் இருப்பது வள்ளி திருமணக்காட்சியாகும். சிற்ப ஓவியங்களிலும் இவ்விரு காட்சிகளே அதிகம் இடம் பெற்றுள்ளன.

தெய்வயானை திருமணக் காட்சியை அதிகம் காணமுடியவில்லை. மதுரையிலுள்ள மீனாட்சி கல்யாணச் சிற்பம் உலகப் பிரசித்தி பெற்றதாகும். அதை அடியொற்றிக் கணக் கற்ற ஓவியர்கள் மீனாட்சி கல்யாண ஓவியத்தைத் தீட்டியுள்ளனர். மேற்குறித்த மீனாட்சி கல்யாண சிற்பத்திற்கு இணையான தெய்வயானை திருமணச் சிற்பம் ஒன்று திருப்பரங்குன்றத்தில் உள்ளது.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்து ஆஸ்தான மண்டபத்தில் இடம் பெற்றுள்ள பெரிய தூணொன்றில் இச்சிற்பம் இடம் பெற்றுள்ளது.

இதில் நடுவில் தெய்வயானை நிற்கின்றாள். அவளுக்கு இடப்புறம் முருகன் நிற்கின்றார். அவர் தனது வலது முன்கையை நீட்டி, இந்திரன் கன்னிகாதானம் செய்துவிடும் நீரை ஏற்கும் கோலத்தில் உள்ளார். இடது கரத்தில் மலர்ச்செண்டு உள்ளது. மேற்கரங்களில் சக்தி குலிசங்கள் உள்ளன.

தெய்வயானையின் இடப்புறம் தேவேந்திரன் நிற்கின்றான். அவன் கீழ் வலது கரத்தில் நீர்க்கரகத்தை ஏந்திக் கன்னிகாதானம் செய்கின்றான். அவனது மேற்கரங்களில் சக்தி ஆயுதங்கள் உள்ளன. பீடத்தில் வேள்விக் குண்டம், திருமண வேள்வி செய்யும் பிரமன் ஆகிய பலரும் உள்ளனர்.

இச்சிற்பத்தின் கீழ்ப் பகுதியில் தெய்வயானை நாச்சியார் (கல்யாணம்) என்னும் நாயக்கர் காலக் கல்வெட்டு உள்ளது. எதிரிலுள்ள தூணில் அரசி மங்கம்மாளும் விஜயரங்க சொக்கநாத நாயக்கரும் இத்திருமணத்தைக் கண்டு வணங்கிக் கொண்டிருக்கும் சிற்பம் உள்ளது. இதை வைத்து இம்மண்டபம் ராணி மங்கம்மாளால் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இது அரிய சிற்பமாகும். இதையொத்த திருமணச் சிற்பம் வேறெங்கும் காணப் படவில்லை என்பதால் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது.

தெய்வயானைத்திருமணம்-திருப்பரங்குன்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி திருமணம்

சிவயோகத்தில் நிலைபெற்றிருந்த திருமாலின் ஆனந்தக் கண்ணீரில் இருந்து அமுதவல்லியுடன் தோன்றி சுந்தரவல்லி எனப் பெயர் கொண்டு வளர்ந்தவள் வள்ளி.

அவள் முருகனைக் கணவனாக அடைய வேண்டித் தவம் செய்த போது, அவர் ஆணை யிட்டபடி, மீண்டும் திருமாலின் கண்வழியே மான் வடிவிலிருந்த திருமகளின் வயிற்றில் புகுந்தாள். திருமகள், உரிய காலத்தில் குழந் தையை ஈன்று வள்ளி மலைச்சாரலில் வள்ளிக் கிழங்கை அகழ்ந் தெடுத்த குழியில் விடுத்துச் சென்றாள்.

அந்த அழகிய பெண் குழந்தையைக் கண்டெடுத்த அம்மலையின் தலைவனான நம்பிராஜன்,தன் மனைவியிடம் அளித் தான், அவர்கள் அக் குழந்தையைத் தன் மகளாக ஏற்றுச் சிறப்புடன்வளர்த்து வந்தனர். வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் இருந்து கிடைக் கப்பெற்ற தாலும், வள்ளல் தன்மை உடையவள் என்ற பொருளிலும்அவளுக்கு வள்ளி என்று பெயரிட்டனர். மானும், மயிலும் கிளிகளும்,சூழ்ந்திருக்க தோழியருடன் விளையாடிக் களித்தவாறே வள்ளி வளர்ந்தாள்.

உரிய பருவத்தில் வேடர்குல வழக்கப் படி, அவள் தோழியருடன் தினைப்புனம் காக்கச் சென்றாள்.நாரதர் மூலம்அவளு டைய சிறப்புகளை அறிந்த முருகன், அவள் முன் மானைத் தேடிவந்த வீரனாகவும், வளையல் விற்பவனாகவும், வேங்கை மரமாகவும் வயது முதிர்ந்த தளர்ந்த கிழவனா கவும், பற்பல வேடங்காட்டிக் காதல்மொழி பேசி, இறுதியில் தன் ஆறுமுகவடிவைக் காட்டி, அவளை ஆட்கொண்டார். அப்படி ஆட் கொண்டு திருமணம்செய்து கொண்ட வரலாறு வள்ளி திருமணம் என்ற பெயரில் ஐதீக விழாவாகவும், நாடகமாகவும், கதைப் பாட்டாகவும் பல்வேறு வடிவங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

வள்ளி கல்யாணத்தைப் பார்த்தாலும், கேட்டாலும் படித்தாலும் இனிய வாழ்வு கிட்டுமென்று நம்புகின்றனர்.வைண வர்கள் சுந்தர காண்டத்தைப் படிப்பது போல, முருகன் அடியார்கள் **வள்ளி திருமணக் காட்சிப் படலத்தைப் பாராயணம்** செய்கின்றனர் .

தென்னகத்தில் வள்ளி திருமணமே அதிக அளவில் தூண் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும், கோபுர, விமானம், மண்டப முகப்புச் சிற்பங்களாகவும் இடம் பெற்றுள்ளன.இதில் நம்பிராஜன் குல வழக் கப்படி வள்ளியை நீர் தாரை வார்த்து, முருக னுக்கு அளிக்கின்றான். விநாயகர் முன்னி லையில், நாரதர் வேள்வி வேட்கின்றார். சிவன், திருமால்,உமை, லட்சுமி ஆகி யோ ரும் தேவர்களும் புடை சூழ உள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி திருமண ஐதீக விழாக்கள்

முருகப்பெருமானின் முதல்தேவி தெய்வயானை. தெய்வயானை கல்யாணம் சூரசம்காரம் நடந்த மறுதினமான வளர் பிறை சப்தமியில் கொண்டாடப்படுகிறது.

முருகனுக்கும் தெய்வயானைக்கும் மாலை மாற்றுதல் தொடங்கி, வேத மந்திரங்களைக் கொண்டு ஆகம வழியில் திருக்கல்யாண விழா சிறப்புடன் நடத்தப்படுகிறது. மிகப்பெரிய நோன்பும், பெரிய விழாவுமான சஷ்டியைத் தொடர்ந்து வருவதால் இந்த விழா சிறப்பு பெறுவதில்லை. திருச்செந்தூரில் மட்டும் ஊஞ்சல் உற்சவத்துடன் ஐந்து நாட்கள் நடைபெறுகின்றது. மற்றைய தலங்களில் இது எளிய விழாவாகவே நடைபெறுகின்றது.

சூரசம்ஹாரமும், சஷ்டிவிழாவும் கொண்டாடப்படும் அனைத்து முருகன், சிவத்தலங்களிலும் அடுத்த நாளான சப்தமியில் தெய்வயானைத் திருமண விழா கொண்டாடப்படுகிறது.

பெரும்பாலான சிவாலயங்களில் கந்தர்சஷ்டி விழாவும் தெய்வயானை கல்யாணமும் கொண்டாடப்படுகின்றன. இக்கோயில்களில் வள்ளி திருமணம் நடத்தப்படும் வழக்கத்தைக் காண முடியவில்லை.

முருகனின் இரண்டாவது தேவியான வள்ளியம்மையுடன் செய்யப்படும் திருமண விழா தனிச்சிறப்புடையதாக விளங்குகிறது. இது முருகன் ஆலயங்களுக்குச் சிறப்பு விழாவாகவும் நடத்தப்படுகிறது. தெய்வயானைத் திருமணம் குறிப்பிட்ட நாளான ஐப்பசி சுக்ல சப்தமியில் நடப்பது போல் இது நடத்தப்படுவதில்லை. சில இடங்களில் பங்குனி உத்திரத்தில் நடைபெறுகிறது. பல இடங்களில் பெருந்திரு விழாவின் அங்கமாக நடத்தப்படுகின்றது.

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் ஏதாவது ஒன்றில் கொடியேற்றி நடைபெறும் பெருந்திருவிழாவின் அங்கமாக வள்ளி திருமணம் நடத்தப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடியேற்றி 10 நாட்கள் திருவிழா நடைபெற்றபின் பத்தாம் நாள் கொடியிறக்கப்படும். பதினோராம் நாள் சாந்திவிழாவாகவும், பன்னிரண்டாம் நாள் வேடர்பறி உற்சவமும் தொடர்ந்து வள்ளி திருமண விழாவும் கொண்டாடப்படுகின்றன.

வள்ளி திருமணம் வைதீக, ஆகமச் சடங்குகளுடன் இப்போது நடைபெற்ற போதிலும் முன்பாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளபடி, வள்ளி தினைப் புனங்காத்தல், முருகன் வேடனாகச் சென்று அவளைச் சந்தித்துக் காதல்மொழி பேசுதல், பின்னர் வேங்கை மரமாகி நிற்றல், வயோதிகனாக வருதல், வளையல் விற்பவனாக வருதல், வள்ளி கொடுத்த தேனையும் தினைமாவையும் உண்ணுதல், தாகம் தீர்ந்து மோகம் வந்ததென்று கூறுதல், காதலை மறுத்துக் கூறி ஓடும் வள்ளியை முருகனின் வேண்டுகோளை ஏற்று விநாயகர் யானையாக வந்து துரத்துதல், யானையைக் கண்டு அஞ்சிய வள்ளி முருகனை ஆரத் தழுவி நிற்க, முருகன் ஆறுமுகனாக அவளுக்குக் காட்சி தந்து களவு மணம் புரிதல், அவளைச் சிறையெடுத்துச் செல்லுதல், அதையறிந்து வள்ளியின் தந்தையான நம்பிராஜனும் வள்ளியின் சகோதரர் களும் துரத்தி வருதல், முருகனின் சேவல் பெருங்குரல் எழுப்ப, அந்த அதிர்வால் வேடர்கள் மாண்டுவிழுதல்,

யானை விரட்டு

வள்ளி கல்யாணத்தில் விநாயகர் யானையாக வந்து அச்சமூட்டி முருகனோடு சேர்த்து வைத்ததை நினைவூட்டும் வகையில் நடைபெறும் ஐதீக விழாவே யானை விரட்டு ஆகும். முருகன் கிழவன் வேடத்தில் நடுவில் நிற்க, வள்ளியம்மையைப் பல்லக்கில் சுமந்தவாறு அவரைச் சுற்றி வருவர். அவள் பின்னே யானையை ஓடிவரச் செய்வர். சுவாமிமலையில் நடக்கும் யானை விரட்டு சிறப்பாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளியின் வேண்டுகோளையேற்று, முருகன் அனைவரையும் உயிர்ப்பிப்பது, பிறகு நாரதர் வேள்வி செய்து, முருகன் - வள்ளி திருமணத்தை நடத்தி வைப்பது முதலியவை நாடகப் பாங்கிலும், கதைப் பாடலாகவும் ஆடிப்பாடி ஐதீகக் காட்சிகளாக நடத்தியபின் திருமணம் முடித்தல் நடைபெறுகிறது. வள்ளி கல்யாணம் கலை, இலக்கியம், சடங்குகள் ஆகியவற்றின் சுவைமிக்க கலவையாக உள்ளது.

சுவாமிமலை, குமரி மாவட்டத்திலுள்ள குமரக்கோயில், சென்னை கந்தகோட்டம் முதலிய தலங்கள் வள்ளி திருமணம் சிறப்பாக நடைபெறும் தலங்களாகும். அங்கு நடைபெறும் திருமண விழா பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம்.

சுவாமி மலையில் வள்ளி திருமணம்

முருகன் நீங்காது வாசம்செய்யும் இடங்களில் ஏரகமும் திருவிடைக்கழியும் சிறப்பு மிகுந்தவைகளாகும். ஏரகமும் இடைக்கழியும் நீங்கா இறைவன் என்பார் அருணகிரிநாத சுவாமிகள். ஏரகம் வள்ளியம் மைக்கும், இடைக்கழி தெய்வயானைக்கும் உரிய தலங்களாக உள்ளன.

திருவேரகமான சுவாமிமலை கும்ப கோணத்திற்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பேரூர். இங்கு வள்ளியம் மைக்கு ஏற்றம் அளித்துச் சிறப்பு விழா கொண்டாடுகின்றனர்.

இத்தலத்தில்வள்ளியம்மையின் அழகிய திருவுருவச்சிலை உள்ளது. பங்குனி உத்திர நாளில் திருவலஞ்சுழி திருக்கோயிலில் தினைப்புனம் அமைத்து, அதில் வள்ளியம் மையை எழுந்தருளச் செய்து சிறப்பு வழி பாடுகளை நடத்துகின்றனர்.

வேடனாக வந்த முருகன் வள்ளியை அழைத்துக் கொண்டு செல்லுதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy




வேங்கை மரமாகவும், வயோதிக வழிப்போக்கனாகவும், தெய்வக் குமரனாகவும் முருகன் மூன்றுநிலைகளில் காட்சியளித்தல்- சுவாமிமலை வள்ளி திருமணக் காட்சி

மாலையில் முருகன் வேங்கை மரமாகவும், வயது முதிர்ந்த வழிப்போக்கனாகவும், வளையல் விற்பவனாகவும், வேட்டுவனாகவும் தோன்றி அவளுக்கு அருள்பாலித்தல், விநாயகர் முருகனின் வேண்டுகோளை ஏற்று, யானை வடிவில் வந்து வள்ளியைத் துரத்துதல், வள்ளி முருகனை அணைத்துக் கொள்ளுதல் முதலிய ஐதீகக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. இரவு முழுவதும் விழா சிறப்புடன் நடைபெறுகின்றன.

அதிகாலையில் வள்ளியையும் முருகனையும் ஒரே பீடத்தில் எழுந்தருளுவித்துத் திருக்கோயிலுக்கு எடுத்து வருகின்றனர். இது முருகன் வள்ளியைச் சிறையெடுத்ததைக் குறிக்கும் நிகழ்வாகும். மாலையில் வள்ளிக்கு ஆறுமுகப்பெருமானான முருகன் காட்சி கொடுத்தல், இருவரும் மாலை மாற்றிக் கொள்ளுதல், தொடர்ந்து திருக்கல்யாணம் ஆகியவை சிறப்பாக நடைபெறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றன.வள்ளி திருமண விழாவிற்குப் பிறகு மூன்று நாட்கள் ஊஞ்சல் விழாவும் தொடர்ந்து விமானத்தில் ஆறுமுகனும் புஷ்ப பல்லக்கில் வேட முருகனும் வள்ளியும் வந்து விழா நடத்தப்படுகிறது.

இத்தலத்தில் வேடர்பறி உற்சவம் கொண் டாடப்படுவதில்லை. தினைப் புனத்திற்கு எழுந்தருளும் தனிவள்ளியின் உலாத் திருவுரு வமும், வேட்டுவனாக அவளைக் காணச் செய்யும் குமரனின் வேடவடிவத் திருவுருவ மும் மிகவும் அழகியனவாகும். இத்தலத்தில் நம்பிராஜனுக்கும் அவன் மனைவிக்கும் உலாத் திருமேனிகள் உள்ளன.

இத்தலத்தில் கந்தர் சஷ்டியை அடுத்த சப்தமியில் தெய்வயானை விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.



வள்ளி திருமண விழாவில் ஆறுமுகசுவாமி
சுவாமிமலை

குமரக்கோயிலில் வள்ளி திருமணம்

அருணகிரிநாதர் முதலிய அடியவர் களால் குடந்தையை அடுத்த சுவாமி மலையைத் திருவேரகம் என்ற படைவீடாகக் கொள்ளப்பட்டது என்றாலும், குமரி மாவட் டத்திலுள்ள குமரக்கோயிலே திருஏரகம் என்பது சில அறிஞர்களின் கருத்து. இத்தலத் தில் கருவறையில் முருகனுடன் வள்ளி மட்டுமே காணப்படுகிறாள். இதையொட்டி யுள்ள மலையில் வள்ளி தோன்றிய குறக் குடியின் வம்சாவளியினர் வாழ்ந்து வருகின் றனர். வள்ளி திருமண விழாவில் இவர்களது பங்களிப்பும் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகிறது. வள்ளி காத்த மலை மீது தினைப்புனங்களும், நீராடி மகிழ்ந்த சுனை களும் திருமணம்செய்து கொண்ட மண்ட பமும் உள்ளன.



குமரக்கோயில்மலையும்
வள்ளி திருமண மண்டபமும்

குமரக்கோயில் வள்ளி திருமண விழா புகழ் பெற்றதாகும். இங்கு வள்ளி வாழ்ந்ததை நினைவூட்டும் இடங்கள் அநேகம் உள்ளன. வள்ளியோடு தொடர்புடைய வள்ளியூரும் இத்தலத்திற்கு அருகில்தான் உள்ளது.

வள்ளி திருமண விழாவை ஐதீக விழாக்களாகக் கொண்டாடும் தலங்கள் சிலவேயாகும். இவ்விழா மக்களின் மனம் கவர்ந்த விழாவாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடர்பறி உற்சவம்



முன்னாளில் ஊர்கள் நகரங்களின் பெருக்கமும் வழிப்பாதைகளும் அதிகம் இல்லை. நாட்டின் பெரும்பகுதி காடாக இருந்தது. காட்டின் நடுவே அமைந்த சிறு குன்றுகளில் குறவர்களின் ஒருபகுதியினரான ஆறலைக் கள்வர் இருந்தனர். இவர்களை எயினர் எனவும் அழைப்பர். இவர்கள் போது மான வேட்டை கிடைக்காதபோது, வழிப் பறியில் ஈடுபட்டனர். (ஆறலை - வழிப்பறி) இத்தகைய வழிப்பறியினரிடம் பொருட் களை இழந்தவர்கள் ஏராளமாக இருந்தனர். மக்கள் விழிப்புணர்வு பெற ஆறலைக் (வழிப்பறி)காட்சிகள் நாடகமாக நடத்திக் காட்டப்பட்டன. காலப்போக்கில் அது வேடர்பறி விழா எனும் பெயரில் ஐதீக விழாவாக மாறி விட்டது. ஆலயங்களில் நடைபெறும் இவ்விழா புராண வரலாறு களோடு இணைத்துக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சிவாலயங்களில் திருமுருகன் பூண்டி யில் சிவபெருமானின் கணங்கள் வேடர்க ளாக வந்து வழிப்பறி செய்து, அவர் திருப் பதிகம் பாட, பொன்னைத் திருப்பி அளித்த வரலாறோடு தொடர்புபடுத்தி நடத்தப்படு கிறது.

திருமால் ஆலயங்களில் வழிப்பறி செய்துவந்த திருமங்கையாழ்வாரைத் திருத் திப் பணி கொள்ள நாராயணன் மகா லட்சுமியோடு வந்து நடத்திய திருவிளை யாடலோடு தொடர்புபடுத்தி நடத்தப்படு கிறது.

முருகன் ஆலயங்களில் நடத்தப்படும் வேடர்பறி என்பது முருகன் வள்ளியைக் களவு மணம் புரிந்து சிறையெடுத்துவந்த போது குறவர்கள் துரத்தி வந்து போரிட்ட கதையோடு தொடர்புடையதாகும்.

வேடர்பறி விழாவை நடத்த ஊருக்கு வெளியே காடு போன்ற பகுதியில் தனி மண்டபம் அமைக்கப்பட்டது. இதற்கு வேடர்பறி மண்டபம் என்பது பெயர்.

விழாவின் போது இம்மண்டபத்திற்கு முருகனும் வள்ளியும் எழுந்தருளுகின்றனர். சிறப்புவழிபாடுகள் நடைபெறும். வள்ளி யோடு முருகன் ஓடுவதும், அவரைத் துரத்து வதுமாக வேடர்பறி உற்சவம் நிகழும். அதன் பிறகு முருகனும்வள்ளியும் திருமண மண்ட பத்திற்கு எழுந்தருளுவர். அங்கு திருமணம் நடைபெறும்.

சென்னை கந்தசாமி கோயிலுக்குச் சொந்தமான வேடர்பறி மண்டபம் கோயி லில் இருந்து ஏறத்தாழ 8 கி.மீ. தொலை விலுள்ள கல்மண்டபத்தில் உள்ளது. ஆண்டு தோறும் வள்ளி திருமணத்திற்கு முன்பாக இம்மண்டபத்திற்கு முருகன் எழுந்தருளி விழா காண்கின்றார். பல ஊர்களில் இத்த கைய வேடர்பறி விழா மண்டபங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனம், மொழி, நாடு ஆகியவற்றின் மானத்தைக் காக்கவும், மாற்றான் வலிமையை ஒடுக்கவும், வீழ்த்தவும் போர்கள் நடத்தப்படுகின்றன. பெரும்போர் நடந்ததும், போர் நடந்த இடத்தில் வெட்டுண்டு மாண்டு கிடக்கும் குதிரைகள், யானைகள் இவற்றிற்கு இடையே பகைவர்களின் உடலையும் தமது உறவினர் வீரமரணம் எய்தியதையும் அங்கு சென்று பார்ப்பர். இதனைக் களங்காணுதல் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. வென்ற களத்தைக் கண்டு மகிழ்வதும், வெற்றியைக் கொண்டாட அங்கு கூத்தாடி மகிழ்வதுப் பண்டைய வீரர்களின் வழக்கமாகும்.

பரணி இலக்கியங்களில் கடுமையாக நடந்த யுத்தத்தினை வர்ணிப்பதைப் போலவே பகைவர் மாண்டு கிடக்கும் போர்க் களத்தையும் விவரித்துள்ளனர்.

பகைவர் பட்டுக்(மாண்டு)கிடக்கும் களமே படுகளமாகும். நாட்டுப்புற வீரப் பெண்கள் வழிபாட்டிலும், திரௌபதி அம்மன் வழிபாட்டிலும்படுகளம் அமைத்து, அங்கு வீரர்கள் வீழ்ந்து கிடப்பது போல் நேர்ந்து கொண்டு கிடப்பதும், அந்தக் களத்தைத் தெய்வங்கள் கண்டு மகிழ்வதும், ஐதீகச் சடங்குகளாக இப்போதும் நடத்தப் படுகின்றன.

முன்னாளில் படுகளம் அமைப்பது வீரர்கள் வழிபாட்டின் ஓர்அங்கம் என்பதால், வீரர்களுக்கெல்லாம் வீரனான முருகன் வழிபாட்டிலும் படுகளம் இடம் பெற்றது. அதை வள்ளி திருமணத்தோடு தொடர்பு படுத்தி, வள்ளி திருமணத்திற்கு முன்பாக படுகள நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

முருகன் ஆலயங்களில் முருகன் வள்ளியைச் சிறையெடுத்து வரும்போது வள்ளியை மீட்டுச் செல்லத் தம்மைத் துரத்தி வந்த குறவர்களுடன்முருகன் போரிட்டது, அந்தப்

குறவர் படுகளம்

போர்க்களத்தின் நடுவில் நின்று பெருங்குரல் எடுத்துக் கூவிய சேவலின் கடுங்குரலால் அவர்கள் வீழ்ந்து மாண்டது, நாரதரும், வள்ளியும் வேண்டிக் கொண்டபடி முருகன் மாண்டவர்களை உயிர்ப்பித்தல் முதலான நிகழ்ச்சிகள் நாடகமாக நடிக்கப் படுகின்றன.

குறவர்கள் மாண்டு கிடக்கும் படுகளத்தை நினைவூட்டும் வகையில் படுகளம் அமைக்கப்படுகிறது. நோயுற்றவர்கள் இந்தப் படுகள நிகழ்ச்சியில் மாண்டவர் போல் கிடந்து, விபூதி தெளித்த பின் எழுந்து முருகன் வழிபடுவதால், நோய் நீங்கிப் புதிய வாழ்வைப் பெறுவதாக நம்பினர்.

இந்நாளில் குறவர்களால் வேளிர் மலைக் குமரக்கோயிலில் மட்டுமே மலையக மக்கள் பங்குபெறும் படுகளம் என்னும் பண்டைய மரபுவழி விழா கொண்டாடப் படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறவர் தாங்கும் பல்லக்கு



திருமண விழாவின் போது மணப் பெண்ணின் சகோதரர்களும், மாமன் முறையினரும் மணமகளைப் பல்லக்கில் அமர்த்தி ஊர்வலமாக அழைத்துச் சென்று, மணமகன் வீட்டில் விடும் வழக்கம் முன்னாளில் இருந்தது. இது மணமகளுக்குப் பிறந்த வீட்டார் தரும் கௌரவமாகவும் எல்லோரும் திருமணத்தை நடத்திக் கொடுத்து உறவைப் பலப்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சியாகவும் அமைகிறது.

தொடக்கத்தில், மானுட வாழ்வியல் சடங்குகளில் ஒன்றாக இருந்த பல்லக்கு விழா காலப்போக்கில் கோயில் விழாக்களின் அங்கமாகவும் மாறிவிட்டது.

திருமணம் முடிந்ததும், ஆண்தெய்வத்தைக் குதிரை அல்லது யானை மீது அமர்த்தியும், மணந்து கொண்ட பெண் தெய்வத்தைப் பல்லக்கிலும் வைத்து உலா நடத்துவர். மணவிழா முடிந்து இப்படிப் பவனிவரும் தம்பதியினரைக் காண்பதால் தங்கள் வீட்டிலும் இனிய திருமண விழாக்கள் நடைபெறும் என நம்பினர்.

வள்ளி திருமண விழாவில் குறவர்கள் பல்லக்கில் வள்ளியம்மையும், தெய்வயானைத் திருமண விழாவில் தேவர்கள் தாங்கும் பல்லக்கில் தெய்வயானையும் பவனி வந்து அருள்பாலித்தனர். இதையொட்டி ஆலயங்களிலும் இதுபோன்று பல்லக்கில் வைத்துப் பவ்னி வருகின்றனர்.

திருச்செந்தூரில் குறவர் தாங்கும் பல்லக்கு எனும் பெயரில் பல்லக்கு உள்ளது. முன்னாளில் வள்ளி திருமணத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இப்பல்லக்கு இப்போது வள்ளி தெய்வயானையர் இருவருமே பவனி வரப் பயன்படுத்தப்படுகிறது.

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானைத் திருமணம் முடிந்ததும், தெய்வயானை ஆனந்தராயர் பல்லக்கில் பவனி வருகின்றாள். சுவாமிமலையில்நடைபெறும் பங்குனி உத்திரக் கல்யாண விழாவில் வேடவடிவான முருகனும், வள்ளியும் பல்லக்கில் பவனி வருகின்றனர்.

சென்னை கந்தகோட்டத்தில் மாசி மாதத்தில் நடைபெறும்வள்ளி திருமணத்திலும் ஐப்பசியில் நடைபெறும் தெய்வயானை திருமண விழாவிலும் அம்பிகையர் பூப் பல்லக்கில் பவனி வருகின்றனர்.

பல்லக்கு விழாவைக் காண்பதால் பதவி உயரவும் அதிகாரம் செலுத்தவும் யோகம் கிடைக்கும் என்கின்றனர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பள்ளியறை வழிபாட்டில் வள்ளியம்மை நாச்சியார்

ஆலயங்களில் நாள்தோறும் உஷத்காலம் தொடங்கி பள்ளியறை வரை நடைபெறும் பூசைகளானது உலகம் இறைவனிடத்தில் தோன்றி, நிலைபெற்று, மீண்டும் அவனுக் குள்ளே ஒடுங்கும் நிலையைக் குறிக்குமென்று பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன. காலையில் தொடங்கும் விசுவரூபபூஜை உலகத் தோற் றத்தையும், முன்னிரவில் நடைபெறும் பள்ளி யறை பூசை என்பது உலக ஒடுக்கத்தையும் உணர்த்துகிறது என்கின்றனர்சமயச் சான்றோர்.

ஆலயங்களில் பள்ளியறை பூசை என்பது தினப்பூசையின் நிறைவாக உள்ளது. இந்த பூசைக்குப் பிறகுகோயிலின் நடை அடைக்கப் படுகிறது.நடைமுறையில் மக்கள் பள்ளி யறைப் பூசையை இறைவனும், இறைவி யும் ஏகாந்த நிலையில் இருப்பதை உணர்த்தும் என்பர்.

இறைவனும் இறைவியும் கூடிக் களிப்பதனாலேயே உயிர்களிடையே காதலும் கனிவும் உண்டாகி, அன்பு செழித்து வம்சம் விருத்தியாகிறதென்று மந்திர நூலார் கூறுவர்.

சிவன், முருகன், விநாயகர், திருமால்முதலிய அனைத்துப்பெருந் தெய்வ ஆலயங்களிலும் அர்த்த ஜாமவழிபாட்டைத் தொடர்ந்து பள்ளியறை பூசைகள் நடைபெறு கின்றன. நாம் இப்பகுதியில் முருகன்ஆலயத்தில் நடைபெறும் அர்த்தஜாம வழிபாடு பற்றிய செய்திகளைச் சிந்திக்கலாம்.

வாரியார் சுவாமிகள் இவ்வழிபாட் டைக் கிரியா சக்தியாகிய தெய்வயானை யையும், இச்சா சக்தியாகிய வள்ளியம்மை யையும், முருகன் உயிர்கள் இன்புறும் பொருட்டுத் தழுவுகிறான். கண்ணாடியில் தெரியும் நிழலை அசைப்பதற்காக, தான் அசைவது போல,உலகஉயிர்கள் இன்புறும் பொருட்டு, ஞான பண்டிதனான முருகப் பெருமான் சக்தியுடன் இன்புறுகிறான் என்று உணர்க என்று கூறுகிறார்.

முருகப்பெருமான் ஆலயங்களில், பள்ளியறை நாச்சியாராக வள்ளியம் மையை மட்டுமே எழுந்தருளச் செய்யும் வழக் கம்இருந்துவந்துள்ளது.

சிவபெருமானுக்குத் தேவியராகக் கங்கையும், கௌரியாகிய

பள்ளியறை முருகனும்வள்ளியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உமாதேவியாரும்சொல்லப்பட்டாலும், உமா தேவியார் மட்டுமே பள்ளியறையில் சிவனு டன் வழிபடப்படுகிறாள். பள்ளியறைக்குச் செல்லச் சிவபெருமான் பல்லக்கில் ஏறி யதும்,கங்கை அவரது சடையிலிருந்து வெளி வந்து அவரிடம் விடை பெற்றுக் கொண்டு நீர்நிலைகளை அடைந்து அங்கு சதா தியா னத்தில் மூழ்குகிறாள் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

திருமால் ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி ஆகியமூவருடன் இருந்தாலும், மார்பில் இருக்கும் திருமகளோடு மட்டுமே அவர் பள்ளியறை விழா காண்கிறார்.

விநாயகருடன், சித்தி, புத்தி, வல்லபை ஆகிய முத்தேவியர் இருப்பினும் விநாயகர் ஆலயங்களில் சித்திதேவி மட்டுமே பள்ளி யறை நாச்சியாராக எழுந்தருளியுள்ளாள்.

இவ்வகையில் முருகன், இருபெரும் தேவியருடன் இருந்தாலும், வள்ளியம்மை யோடு மட்டுமே பள்ளியறை பூசையில் கண் ணாடி அறையில் ஊஞ்சலில் அமர்ந்து காட்சி ய ளிக்கின்றார். தெய்வயானை யோக நாயகி யாகவும், வள்ளியம்மை போக சக்தி யாகவும இருப்பதால், போக சக்தியாகவும் வள்ளியை மட்டும் பள்ளியறைக்கு எழுந்தருளச் செய் யும் வழிபடும் வழக்கமுள்ளதென்கின் றனர்.

திருச்செந்தூரில் பள்ளியறையில் வள்ளி யம்மையார் மட்டுமே முருகனுடன் எழுந் தருளியிருந்து அருள்பாலிப்பதை முன்பு விளக்கியுள்ளோம்.

பழனியிலும் இந்த வழக்கமே இருந் ததை அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். அவர் பள்ளியறைச் சேவையைக் கண்டு மகிழ்ந்து அதைத் தன் பாடலில்குறித்துள்ளார். ஞானங்கொள் என்று தொடங்கும் பழனி திருப்புகழில், பள்ளியறை வழிபாட்டை **அமளி சேவை** என்று குறிப்பிடுகிறார். அமளி என்பது பள்ளி கொள்ளும் இடமா கும். மேற்சொன்ன திருப்புகழில்,

காமன் கை மலர்கள் நாண,
வேடப்பெண் அமளி சேர்வை
காண் எங்கள் பழனி மேவும்- பெருமாளே

என்று அருளிச் செய்துள்ளார்.இவ்வரி களின் பொருள், காமன் வீசிய பஞ்ச பாணங் கள் தம்மீதுபட்டவர்கள் காமத்தால் துன்புறு கின்றனர். அந்த அம்புகளே வெட்கப் படும் படியாக வள்ளியுடன் கூடி முருகன் இன்பம் துய்க்கிறான் என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி மணவாளனாகவும், தேவசேனாபதியாகவும் முருகன் வீற்றிருக்கும் திருத்தலங்கள்

முருகனை அன்பர்கள்,பாலதண்டாயுதபாணியாகவும், பாலசுப்பிரமணியராகவும், தனித்த நிலையில் வைத்து வழிபடுகின்றனர். கல்யாண சுப்பிரமணியனாகவும், ஆறுமுகப் பெருமானாகவும் வழிபடும் வேளையில் அவருடைய தேவியரான வள்ளி, தெய்வயானையரையும் உடன் வைத்து வழிபடுகின்றனர். பெரும்பாலான தலங்களில் இந்த வழிமுறையே கையாளப்படுகின்றது.

சில தலங்களில் முருகனோடு இரு பெருந்தேவியரையும் அமைக்காமல் வள்ளி அல்லது தெய்வயானை ஆகிய இருவரில் ஒருத்தியை மட்டும் வைத்து வழிபடும் வழக்கமும் உள்ளது.

திருவிடைக்கழி, கந்தன்குடி முதலிய தலங்களில் தெய்வயானையம்மனுக்கு முகமண்டபம், மகா மண்டபம், கருவறை ஆகிய அமைப்புக்களுடன் தனிச்சந்நிதி உள்ளது. இவை தெய்வயானை அம்மைக்கு ஏற்றம் தரும் தலங்களாகும்.

இதுபோல், வள்ளியை மட்டும் முருகனுடன் அமைத்து வழிபடும் தலங்களும் உள்ளன. குமரி மாவட்டக் குமரக்கோயில், சிவன்மலை, கேரளத்து அஞ்சைக்களம், வள்ளியூர் முதலான தலங்களில் வள்ளிக்கு ஏற்றம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தலங்களில் முருகனுடன் வள்ளி மட்டுமே எழுந்தருளியுள்ளாள். வள்ளி மலையில் வள்ளிக்குத் தனிக் கோயில் இருக்கிறது.

தொடர்ந்து வரும் கட்டுரைகளில் முதலில் தெய்வயானைக்கு ஏற்றம்கொடுத்து, முருகன் தேவசேனாபதியாக வீற்றிருக்கும் தலங்களையும், தொடர்ந்து வள்ளிக்கு ஏற்றம் கொடுத்து, அவளோடு கூடி நிற்கும் திருக்கோலக் கோயில்களையும் அறிந்து மகிழலாம்.

தெய்வயானைக்கு ஏற்றம் அளித்துள்ள தலங்கள்

தேவேந்திரனின் மகளாக வளர்ந்து, முருகப்பெருமானை மணந்த தெய்வயானையைச் சிறப்பிக்கும் வகையில் சில ஆலயங்களில் தனிச்சந்நிதி அமைத்து, சிறப்பு வழிபாடுகளும், விழாக்களும் கொண்டாடி வருகின்றனர். இவ்வகையில் அமைந்த ஆலயங்கள் சிலவற்றை இங்கே கண்டு மகிழலாம்

திருப்பரங்குன்றம்

தெய்வயானைப் பிராட்டியாருக்குத் திருமணம் நடந்த இடமாகவும், அவள் தனிச் செங்கோல் நடத்தும் தலமாகவும் இருப்பது திருப்பரங்குன்றம். அறுபடை வீடுகளில் ஒன்றான இத்தலத்தில் முருகன் தெய்வயானையைத் திருமணம் செய்து கொள்ளும் கோலத்தில் கருவறையில் எழுந்தருளியுள்ளாள். முதன்மை உலாத் திருமேனியிலும் வள்ளியின்றி முருகனுடன் தெய்வயானை மட்டுமே இருக்கிறார். மேலும் இத்தலம் பற்றிய செய்திகள் திருப் பரங்குன்றத்தில் இருபெரும்தேவியர் என்னும் தலைப்பில் பக்கம் 24-லில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

திரு விடைக்கழி

திருமுறைத்தலங்களில் ஒன்றாகத் திகழ்வது திருவிடைக்கழி. இங்கு முருகன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீங்காது வாசம் புரிகின்றான் என்கிறார் அருணகிரிநாத சுவாமிகள்.

ஏரகமும், இடைக்கழியும் நீங்கா இறைவன் என்று அவர் பாடிப் பரவுவதைக் காண்கிறோம்.

இத்தலத்தில் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்த கருவறைகளில் பாபவிநாசர் என்னும் சிவபெருமானும் பாலசுப்பிரமணியரும் எழுந்தருளியுள்ளனர். பாலசுப்பிரமணியர் இறைவனை இங்கு பூசித்துக் கொண்டிருக் கும் வகையில் கருவறைகள் உள்ளன.

இத்தலத்தில் முகமண்டபம் மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்னும் விசாலமான அமைப்புகளைக் கொண்ட பெரிய சந்நிதியில் தெய்வயானை எழுந்தருளியுள்ளாள். தெற்குநோக்கியிருக் கும் இச்சந்நிதியில் அவள் நின்றநிலையில் காட்சி தருகின்றாள். வலது கையில் நீலோற் பல மலரை ஏந்தி, இடது கையை ஒயிலாகத் தொங்கவிட்டவாறு தனது முகத்தைச் சற்றுத் திருப்பிக் கருவறையில் நிற்கும் முருகனை நோக்கியவாறு உள்ளார்.

தெய்வயானைப் பிராட்டியார் இங்கு தவக் கோலத்தில் இருப்பதாக ஐதீகம். அதனால் இங்கு பள்ளியறை வைபவம் நடப்பதில்லை. மேலும் அவள் முருகனைக் கணவனாக அடைய சிவபூசை செய்தவாறு யோகத்தில் இருப்பதாகவும் கூறுவர். அவள் வழிபடும் பெருமானுக்கு அகிலாண்டே சுவரி உடனாய காமேசுவரர் என்பது பெயர்.

இத்தலத்திலுள்ள அனைத்து முருகன் வடிவங்களும் சிவ சொரூபங்களாகக் கொள் ளப்பட்டு, சிவபெருமானின் மகேசுவர வடிங் களுக்குரிய பெயர்களாலேயே அழைக்கப் படுகின்றன.

எடுத்துக்காட்டாக, தியாகேச குமார விடங்க சோமாஸ்கந்த பரமேஸ்வரர் எனும் பெயரில் உற்சவசபையில் எழுந்தருளி யிருப்பவர் வள்ளி தெய்வயானை உடனாய முருகப் பெருமான் ஆவார்.

இவருடன் தனியம்மன் என்னும் பெய ரில் தெய்வயானைப் பிராட்டியார் எழுந் தருளியுள்ளார். தனியம்மனாகத் தெய்வ யானைப் பிராட்டியார் மட்டுமே உலாத் திருமேனியாக எழுந்தருளியிருப்பது இங்கு மட்டுமேயாகும்.

அடுத்த நிலையில் சபாபதி ஸ்தானத் தில்உள்ள வடிவில் முருகன் வில்லேந்திய வேலவனாகக் காட்சி யளிக்கின்றார். இவ ருடன் தெய்வயானை யும் எழுந்த ருளியுள் ளாள். இம்மூர்த்தியைப் புராணங்கள் இரண் யாசுர சம்ஹாரர் என்று அழைக்கின்றனர்.

மார்கழிமாதம் திருவாதிரையைக் கடை நாளாகக் கொண்டு நடைபெறும் திருவெம் பாவை விழாவின் போது இவர் முன்பாக மணிவாசகப் பெருமானை எழுந்தருளு வித்துத் திருவெம்பாவை பள்ளிஎழுச்சிப் பாடல்களைப் பாடிப் பாவை விழா கொண் டாடுகின்றனர். திருவாதிரையன்று இவரே நடராசப் பெருமானாக வீதிகளில் பவனி வந்து விழா காண்கிறார்.

இவருக்கு அடுத்தபடியாக முருகனும் தெய்வயானையும் நின்ற நிலையில் காட்சி தரும் கோலம் உள்ளது. அது சந்திரசேகர மூர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது.

இந்த மூர்த்தியைப் போலவே அளவால் சற்று சிறிய மூர்த்தியும் உள்ளது. அதனைப் பிரதோஷ நாயகர் என அழைக்கின்றனர். பிரதோஷத்தின்போது சிறிய மயில்வாக னத்தில் இவர் உட்பிராகாரத்தில் வலம் வந்து அருள்பாலிக்கின்றார்.

சோமாஸ்கந்தர் என்னும் முருகன் வடிவம் மட்டுமே வள்ளி தெய்வயானை ஆகிய இருபெரும்தேவியருடன் உள்ளது. மற்றபடி இரண்யசம்ஹாரரான நடராசர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சோமாஸ்கந்தர் எனப்படும் கல்யாணசுப்பிரமணியரும் - தனியம்மனாகத் தெய்வயானையும் திருவிடைக்கழி

சந்திரசேகரர் என்னும் பெயரில் தெய்வ யானையை மட்டும் உடன் கொண்டுள்ள முருகனையே காண்கிறோம். சிவப்பரம் பொருளே இங்கு முருகனாக உருவம் கொண்டு அருள்பாலிக்கிறது என்னும் கொள்கையால் முருகனைச் சிவனின் பெயரால் அழைக்கின்றனர்.

முன்னாளில் பஞ்சமூர்த்திகள் விழா நடைபெற்றபோது விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய முருகப்பெருமான், தனி தெய்வயானை, சுமந்தரீசர், சந்திரசேகரர் ஆகியோர் வீதியுலா கண்டுள்ளனர்.

அம்பிகை தெய்வயானை முருகனை அடையத் தவமிருப்பதாலும், சிவபாலக னான முருகனும் சிவபூசையில் ஈடுபட்டி ருப்பதாலும் இத்தலத்தில் திருமண விழா நடத்தப்படுவதில்லை என்கின்றனர். மேலும் அர்த்தசாம வழிபாட்டிற்குப் பிறகு பள்ளியறை சேவையும் நடத்தப்படுவ தில்லை.

இத்தலத்தில் கல்யாணசுந்தரர் எனும் பெயரில் தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்டு அருள்பாலிக்கும் கோலத் திலான முருகப்பெருமானை எழுந்தருளச் செய்துள்ளனர்.

....

கருவறையில் கந்தன் வள்ளி தெய்வ யானையரோடு இருப்பினும் தெய்வ யானைக்குத் தனிச்சந்நிதி அமைத்து வழி படும் தலங்கள் கந்தன்குடி, திருப்போரூர் முதலியனவாகும். தொடர்ந்து இவ்விரு தலங்களில் தெய்வயானை வழிபாடு பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குஞ்சரி ரஞ்சித குமரன்
திருவிடைக்கழி

கந்தன்குடி

மயிலாடுதுறையிலிருந்து பேரளம் சென்று அங்கிருந்து காரைக்கால் செல்லும் சாலையில் 6 கி.மீ. சென்றால் கந்தன்குடியை அடையலாம்.

கருவறையில் வள்ளி தெய்வயானை உடனாய முருகன் இருக்கிறார். தெய்வ யானைப் பிராட்டியாருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. முருகனுக்கு எதிராக ஐராவதம் நிற்கின்றது.

திருப்போரூர்

சென்னைக்குத் தெற்கே 36 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தலம். திருச் செந்தூரைப் போன்றே சூரர்குலம் வென்று வாகையுடன் நிற்கும் தலம். இத்தலத்தில் கருவறையில் வள்ளி தெய்வயானையருடன் முருகப் பெருமான் சுயம்புவடிவாகவும், அபிஷேக மூர்த்தியாகவும் இரண்டு நிலை களில் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத் தினையொட்டி அமைந்த தனிச்சந்நிதியில் தெற்கு நோக்கியவாறு தெய்வயானை எழுந்தருளியுள்ளாள். முதலில் இத்தலத்தில் தெய்வயானை மட்டுமே இருந்திருக்கிறாள். பின்னாளில் திருச்செந்தூர் மரபையொட்டி வள்ளி சந்நிதியை உற்சவர் சந்நிதிக்கு அருகில் எழுந்தருளுவித்தனர். பிரதான சக்தி தெய்வயானையே.

முதன்மை உலாத்திருமேனியாக விளங் கும் முருகப்பெருமான் இருபெரும் தேவிய ருடன் விளங்குகின்றார். அத்துடன் தனித் தனியே தனிவள்ளியும் தனித் தெய்வயானை யும் உள்ளனர்.

பெருந்திருவிழாவில் இவர்கள் இருவ ரும் தனித்தனி வாகனங்களில் பவனி வந்து அருள்பாலிக்கின்றனர்.

இத்தலத்தில் தனிச் சந்நிதியில் எழுந்த ருளியிருக்கும் தெய்வயானை நான்கு கரங்களுடன் திகழ்கின்றாள். இது ஓர் அரிய அமைப்பாகும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளிக்கு ஏற்றம் அளித்துள்ள திருத்தலங்கள்

வாசவன் மகளான தெய்வயானைக்கு ஏற்றம் அளித்துச் சிறப்புச் சந்நிதிகள் அமைத்து அதில் அவளை எழுந்தருளுவித்து வழிபடுவதைப் போல வேடர்குல விளக்காகத் தோன்றிய வள்ளி அம்மையைப் போற்றிச் சிறப்பித்து வழிபடும் தலங்களும் பல உள்ளன. இத்தலங்களில் வள்ளிக்கெனத் தனி ஆலயங்களும், உலாத் திருமேனிகளும் இருக்கின்றன. அத்தகைய தலங்களில் சிலவற்றை இங்கே சிந்திக்கலாம்.

வேளிர்மலை வள்ளி மணவாளன்

குமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் இருந்து 10 மைல் தொலைவில் இயற்கை வளம் சூழ்ந்த பகுதியில், வேளிர் மலை பரந்து விரிந்துள்ளது. முருகன் ஆலயம் சிறிது உயரத்தில் 38 படிகளுக்கு மேல் கட்டப்பட்டுள்ளது.

கருவறையில் 8 3/4 அடி உயரமுள்ள முருகப் பெருமானும், அவருக்கு இடப் புறத்தில் 6 அடி உயரமுள்ள வள்ளியம்மையும் உள்ளனர். இத்தகைய பெரிய முருகன் சிலை வேறெங்குமில்லை. வாயிலில் வீர மகேந்திரனும், வீரபாகுவும் உள்ளனர். மணவிடைக்குமாரர், குமாரர் எனும் பெயர்களிலும் ஆறுமுக நயினாராகவும் முருகன் இங்கு தனிச் சந்நிதிகளில் உள்ளார். நடராசரும் சிவகாமியும் உள்ளனர்.

முருகன் தினைப்புனத்தில் வள்ளியைத் தேடிவந்து காதல்மொழி பேசிக் கொண்டிருந்த வேளையில், நம்பிராசன் அங்கு வர, முருகன் உடனே வேங்கை மரமாகி நின்றார். அந்த மரம் இன்றும் அங்கு உள்ளது. வேங்கை மரம் அமைந்த சந்நிதி சிறப்புடன் போற்றப்படுகிறது. மேலும், வேங்கை மரத்தில் தண்டொன்று சார்த்தி வைக்கப் பட்டுள்ளது. இது வயோதிகனாக வடிவம் கொண்டு வந்த முருகன் வைத்திருந்த தண்டு என்கின்றனர்.

கோயிலுக்குப் பின்புறம் உள்ள மலையில் குறவர்கள் வாழ்கின்றனர். கோயிலிலிருந்து 2 மைல் தொலைவில் அமைந்திருக்கும் மலைக் கிராமத்தில் வள்ளி

அருள்மிகு வள்ளியோடு மகிழ்ந்திருக்கும் குமரக்கோயில் லட்சணகுமாரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவதரித்ததாகக் கூறுவர். இப்பகுதியில் வள்ளியம்மையார் எழுந்தருளி இருந்த குகை உள்ளது. அங்கு வள்ளியின் திருவுருவத்தை வைத்து வழிபாடுகள் நடக்கின்றன. இப் பகுதியில் தினைப்புனம், வள்ளி சோலை, வட்டச் சோலை, கிழவன் சோலை முதலான வள்ளி தொடர்புடைய இடங்கள் உள்ளன.

வள்ளியம்மை தினைப்புனம் காத்தது, முருகன் வள்ளியுடன் சோலைகளில் ஆடிக் களித்தது, அவர்கள் வட்டமடித்த சோலைகள், முருகன் வயோதிகனாக வந்து லீலை புரிந்தது முதலானவற்றை இவை நமக்கு நினை வூட்டிக் கொண்டிருக்கின்றன என்கின்றனர்.

இப்பகுதியில் யானைகள் அதிகமாக உள்ளன. முருகனின் வேண்டுகோளை ஏற்று, விநாயகர் யானையாக வந்ததை இது நினைவூட்டுவதாகும். இங்குள்ள விநாயகர் கல்யாண விநாயகர் என்றழைக்கப்படு கிறார்.

இவ்வூருக்கு அருகில் ஓடும் ஆறு வள்ளியாறு என்று அழைக்கப்படுகிறது. மலை மீது வள்ளி திருக்கல்யாண மண்டபம் உள்ளது.

பங்குனி மாதத்து அனுஷ நட்சத்திரத் தில் வள்ளி திருமணத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. வேளி(ர்) மலைகுமரர் மலைமேலுள்ள கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றார். அங்கு திருமண விழா சிறப்பாக நடைபெறுகிறது.

வள்ளியோடு முருகன் வரும் வழியில் அவர்களைக் குறவர்கள் தடுத்து நிறுத்திச் சண்டையிடுதல், சண்டையில் அவர்கள் இறத்தல், பின்னர் முருகன் அவர்களை உயிர்ப்பித்தல் ஆகியன நாடகக் காட்சிகளாக நடத்தப்படுகின்றன. இதற்குக் குறவர் படுகளம் என்பது பெயர்.

திருமுருகாற்றுப் படையில் கூறப்படு வது போல், அன்பர்கள் நீராடி, ஈர ஆடை யுடன் கைகளைத் தலைமேல் குவித்துக் கொண்டு கோயிலுக்குச் செல் வதும், பூக்களை ஏந்தி வந்து வழிபடுவதும் (புஷ்பா பிஷேகமும்) ஆகிய வழக்கங்கள் இப் போதும் உள்ளன.

சிவன்மலை
வள்ளி மணவாளன்

கோவை மாவட்டத்தில் காங்கேயத் திலிருந்து திருப்பூர் செல்லும் வழியில் 5 கி.மீட்டரில் சிவன் மலை உள்ளது. இதன் மீது செல்வக்குமரன் சிவாசலாதிபதி என்னும் பெயரில் எழுந்தருளியுள்ளார்.

இவர் நான்கு கரங்கள் கொண்ட வராக மயிலுடன் நிற்கின்றார். இவருடன் வள்ளி யம்மை இருக்கிறாள். இவ்வூருக்கு அருகி லுள்ள பட்டாலியூரில் வாழ்ந்து வந்த வேட்டு வக்குடியில்தான் வள்ளி தோன்றி வளர்ந்த தாகவும் அவளை முருகன் சிறை எடுத்துக் கொண்டு வந்து இம்மலை மீது நிற்பதாகவும் கூறுகின்றனர். தைப்பூசத்தில் பெருந்திரு விழா நடைபெறுகின்றது.

வள்ளியூர்

இவ்வூர் நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி- நாகர்கோயில் நெடுஞ் சாலையில் இருக்கிறது. ஏறத்தாழ பத்து ஏக்கர் பரப்புள்ள கோயில். மலையிலுள்ள குகையே கருவறையாகும். கருவறையில் முருகன் இருபெரும் தேவியருடன் காட்சி தருகிறார். மேலும் ஒரு குகையில் வள்ளி யம்மை மூலவராகவும், மற்றோர் சந்நிதியில் முருகனுடன் உலாத் திருமேனியாகவும் அவள் எழுந்தருளியுள்ளாள்.

முருகனுடன் விளங்கும் தேவியரை வள்ளி தெய்வயானை என்றழைக்காமல்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அவர்களின் தேவர் உலகப் பெயர்களான ஆனந்தவல்லி, சுந்தரவல்லி என அழைக்கின்றனர். குகைக்கோயிலை வளர்த்திக் கட்டிப் பெருங்கோயிலாக்கியுள்ளனர்.

இம்மலையே கிரௌஞ்சகிரி என்றும், இதன் தலைவனாக இருந்தவன் தாரகன். என்றும் கூறுகின்றனர். முருகன் தாரகனை வென்றழித்தபின் அவனுக்கு அருள்புரிந்ததாக வரலாறு கூறுகிறது. எனவே, இத்தலத்தில் நடைபெறும் ஐப்பசி மாத விழா சூரசம்ஹார விழாவாக இல்லாமல், தாரகாசுர சம்ஹார விழாவாக நடைபெறுகிறது. தாரகன் வதம் முடிந்ததும் வள்ளி திருமண விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

வள்ளி விரும்பியவண்ணம் இவ்வூருக்கு முருகன் வள்ளியூர் என்று பெயரிட்டதாகக் கூறுகின்றனர். வள்ளி இத்தலத்தை ஆண்டு வந்த நம்பிராஜனுக்கு மகளாகப் பிறந்து அருகிலுள்ள குமரக்கோயில் மலைகளில் புனங்களைக் காத்து வந்ததாகவும், முருகன் அவளை நாடிச் சென்று அருள் புரிந்து மணந்து கொண்டு இத்தலத் திற்கு அழைத்து வந்து தங்கியதாகவும் கூறப்படுகிறது.

தருமையாதீனத்தின் ஆறாவது குரு மகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள். இங்கு வந்த போது முதலில் முருகன் மட்டும் காட்சிதர, அவர் தமக்கு வள்ளியம்மையும் காட்சிதர வேண்டுமென்று வேண்டினார் என்றும் முருகன் தன் மேனியிலேயே வள்ளியைக் காட்டினார் என்றும் கூறப்படுகிறது.

ஆதியில் முருகன் தெய்வயானையோடு இங்கே தங்கியிருந்தார் என்றும், வள்ளியை அவர் மணந்து கொண்டு வந்ததைக் கண்டு கோபங்கொண்ட தெய்வயானை உக்ர வடிவம் கொண்டு குகையை விட்டு வெளியேறினாள் என்றும், வெளியே சென்ற அவள் இங்குள்ள சரவணப் பொய்கையின் கரையில் அமர்ந்திருந்தாள் என்றும் கூறுகின்றனர்.

கோப வடிவில் இருக்கும் தெய்வயானைக்குத் தடாகத்தி என்பது பெயராகும். முருகன் தெய்வயானையின் கோபத்தைத் தணித்து, வள்ளியுடன் சேர்த்து வைத்து மூவருமாகக் குகையில் கோயில் கொண்டனர் என்பது இவ்வட்டார வழக்கம். இத்தலத்தில் வள்ளியம்மைக்குக்தனிஆலயம் உள்ளது. உலாத் திருமேனியாக உள்ள முருகன் வள்ளியம்மையுடன் காட்சிதருகின்றார். இத்தலம் வள்ளியம்மைக்கு ஏற்றம் தரும் வகையில் அவளுக்குச் சிறப்புக்களைத் தருவதுடன் அவள் பெயரால் அமைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதியாகவும், அவள் பெயரால் ஓடும் ஆற்றையும் கொண்டு விளங்கு கின்றது. இத்தலத்தில் ஐப்பசி மாதம் பெருந்திருவிழா நடத்தப்படுகின்றது. இதில் எட்டாவது நாளில் கந்தர் சஷ்டி விழா நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து தாரகன் வதமும், வள்ளி திருக்கல்யாணமும் நடைபெறுகின்றன. இங்கு முருகனுக்கும் வள்ளிக்கும் தனித்தனி மயில் வாகனங்கள் உள்ளன. இந்த இரண்டு வெள்ளி மயில் வாகனங்களும் திருவாவடு துறை ஆதீனத்தால் செய்து அளிக்கப் பட்டதாகும். மேற்படி ஆதீனத்தினர் இக் கோயிலில் உதய மார்த்தாண்டம் முதல் பல்வேறு அறக்கட்டளைகளை நிறுவித் திறம்படச் செயல்படுத்தி வருகின்றனர்.

கேரளத்து ஏலாத்துருத்தி

கேரள மாநிலத்தில் சுந்தரமூர்த்திகளால் பாடல்பெற்ற திருத்தலமாக விளங்கும் அஞ்சைக் களத்திற்குக் கிழக்கே 2 மைல் தொலைவில் ஏலாத்துருத்தி என்னும் ஊர் உள்ளது. இத்தலத்தில் அண்மைக் காலத்தில் கட்டப்பட்ட வள்ளி மணவாளன் ஆலயம் உள்ளது. முருகன் ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு நின்றவாறு காட்சியளிக்கிறார். இடதுபுறம் குறவள்ளி நின்றவாறு காட்சி அளிக்கிறாள். முருகரின் வலது முன்கை அபயம் காட்ட, இடது முன்கரத்தால் வள்ளியை அணைத்த வாறு மகிழும் அழகனாக இங்கே அவரைக் காண்கிறோம்.

இங்கு பங்குனி மாதத்தில் பால் காவடி, ஆறாட்டு முதலிய விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

வள்ளிமலை

தமிழகத்தின் வடபகுதியில் அமைந் துள்ள திருத்தலம் வள்ளிமலை ஆகும். ஐந்தாம் படைவீடாகிய திருத்தணியிலிருந்து ஏறத்தாழ 36 மைல் தொலைவில் உள்ளது. வேலூர், அரக்கோணம் முதலிய நகரங்களில் இருந்து இதற்குப் பேருந்து வசதி உள்ளது.

வள்ளியம்மை வாழ்ந்து முருகனோடு இணைந்த தலமாதலின், வள்ளிமலை என்று அழைக்கப்படுகிறது. வள்ளியம்மை இத் தலத்தில் மான் மகளாகப் பிறந்து குறக் குடியில் வளர்ந்து தினைப்புனம் காத்துவரும் வேளையில் தணிகைமலையில் இருந்த முருகன் நாரதமுனிவரால் அவளுடைய அழகையும் பெருமைகளையும் முன்பு செய்த ஒப்பற்ற தவத்தையும் அறிந்து அவளுக்கு அருள்புரிய இங்கு வந்தார்.

அவளுக்கு அருள்பாலிப்பதற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பாக திருவிளையாடல்கள் நிகழ்த்தக் கருதி, யானையை மானென்றும் கூறுவர். வேட்டை யாடித் துரத்தி வந்த வேடனாகவும், வளையல் விற்பவனாகவும், தீர்த்த யாத்திரை செல்லும் போது வழிதவறி வந்த வயோதிகனாகவும், வேங்கை மரமாகவும் பலவிதங்களில் காட்சி தந்து அவளோடு ஆடல் புரிந்தார். பின்னர், காதல்மொழி பேசி, களவு மணம் புரிந்து ஆடிப் பாடி மகிழ்ந்திருந்தனர்.

முருகன் வள்ளியைக் கவர்ந்து கொண்டு வரும் போது அவளுடைய தந்தையும், சகோதரர்களும் துரத்தி வந்தனர். அவர் அவர்களோடு போரிட்டு வென்றார். பின்னர் நாரதர் முன்னின்று வேள்வி நடத்த விநாயகர் சாட்சியாக இருக்க, நம்பிராஜன் நீர்வார்த்து அவளைத் திருமணம் செய்து கொடுத்தார்.

திருமணக் கோலத்திற்குப் பிறகு, இருவரும் பூரணகிரியான திருத்தணியை அடைந்தனர். திருத்தணியும் வள்ளி மலையும் தொடர்புடைய திருத்தலங்கள் ஆகும்.

இம்மலையைச் சுற்றியுள்ள பகுதிகளை நம்பிராஜன் எனும் வேட்டுவர்குல மன்னன் ஆண்டு வந்தான் என்றும், அவனே வள்ளியம்மையைக் கண்டெடுத்து வளர்த்துப் பேறு பெற்றான் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

மலையடிவாரத்திலும், மலை மீதும் கோயில்கள் அமைந்துள்ளன. மலை மீதுள்ள கோயிலில் ஒரு பாறையில் வள்ளியின் திருவுருவம் ஆலோலம் ஓட்டும் கோலத்தில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தில் வள்ளியோடு தொடர்புடைய பல இடங்கள் உள்ளன. வள்ளி ஒளிந்த குகை, காத்த தினைப்புனம் ஆகியவை உள்ளன. வள்ளி மஞ்சள் அரைத்துப் பூசிக் குளித்த சுனை வள்ளிசுனை எனும் பெயரில் உள்ளது. அதன் நீரில் துணியைத் தோய்த்துப் பிழிந்தால் மஞ்சள் நிறமாகி விடுகிறது.

வள்ளியை அச்சுறுத்த யானையாக வந்த விநாயகப் பெருமான் மீண்டும் தன்னுலகம் செல்லும் போது யானை உடலை இங்கேயே விட்டுச் சென்றதாகவும், அது மலை வடிவமாகி விட்டதென்றும் கூறுகின்றனர். யானை படுத்துள்ளது போன்று தோற்றமளிக்கும் அக்குன்றை கணேசகிரி என அழைக்கின்றனர்.

மாசி மாதம் வள்ளி திருக்கல்யாண விழா சிறப்புடன் நடைபெறுகிறது. இவ்விழாவின் எட்டாம் நாள் வள்ளியை முருகன் சிறையெடுத்தல், வேடர்கள் துரத்தி வருதல், வள்ளியை மணம்புரிதல் ஆகியன ஐதீக விழாவாக நடத்தப்படுகின்றன.

இந்த மலையையும், வள்ளி வரலாற்றையும் அருணகிரிநாத சுவாமிகள் சிறப்புடன் குறித்துள்ளார். இத்தலத்திற்கு அருளிய திருப்புகழில், **வள்ளி படர் சாரல் வள்ளி மலைமேவு வள்ளி மணவாளப் பெருமானே** என வள்ளி பெயரை மும்முறை குறித்து மகிழ்கிறார்.

இத்தலத்துக்கு அருகில் மகா விஷ்ணு யோக நாராயணர் எனும் பெயரில் தவக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இவருடைய யோக சக்தியிலிருந்து வள்ளி தோன்றி, அவரது கண்வழியே மான் வடிவில் இருந்த திருமகளின் வயிற்றில் புகுந்து வளர்ந்து வெளிப்பட்டாள். யோக நாராயணர் வழிபட்ட சிவாலயம் திருமாலீசர் எனும் பெயரில் உள்ளது.

குகஸ்ரீ வாரியார் சுவாமிகள் இத்தலத்தில் விரிவான திருப்பணிகள் செய்துள்ளார்.

வள்ளிக்கு இத்தலத்தில் தனி ஆலயம் உள்ளது. அதில் அவள் ஆயலோட்டும் கோலத்தில் கவணுடன் காட்சி தருகிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருந்தமலை

கொங்குநாட்டுத் தலமான குருந்த மலையும் வள்ளிக்கு ஏற்றம் அளித்துள்ள தலமாகும். கோவையை அடுத்த கார மடையில் இருந்து அத்திக்கடவு செல்லும் பாதையில் 4 கி.மீ. தொலைவில் புங்கம் பாளையம் உள்ளது. இங்கிருந்து 2 கி.மீ. தொலைவில் குருந்தமலை உள்ளது. கொங்குநாட்டு மலைக்கோயில்களில் இருப் பது போல் வள்ளி தெய்வயானையர் இரு வரும்அமைந்த சிற்றாலயம் இங்கு இல்லை.

குமரன் வீற்றிருக்கும் குருந்தமலையை ஒட்டியவாறு வள்ளிமலை உள்ளது. இது கன்னிமலை, கரியமலை என்றும் அழைக்கப் படுகிறது. இம்மலையில் வள்ளி எழுந்த ருளியுள்ள சிறிய குகை உள்ளது. இக்குகை யின் உச்சியில் இருக்கும் துளை வழியாக வெளிச்சம் வருகிறது. பெருவிழாவின்போது இக்குகைக்கு முருகன் எழுந்தருளியிருந்து வள்ளிக்குஅருள்புரிந்துதிருமணம் காண்கிறார்.

வள்ளி மணவாளத் தலங்களைக் கண்டு வழிபடுவதால் வாழ்வு சிறக்கும். வளம் கூடும் என்கின்றனர்.

வெளியகரம்

திருத்தணிக்கு அருகில் வெளியகரம் என்னும் ஊர் உள்ளது. வள்ளி அகரம் என்பதே வெளியகரம் ஆனதென்பர். இங்குள்ள மலைமீது முருகன் ஆலயம் உள்ளது. மலைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் முருகனின் திருவடிச் சுவடு பெரிய பாறையில் உள்ளது.உலாத் திருமேனியாக வள்ளிக் குமரன் உள்ளார்.

இத்தகைய வள்ளி மணவாளத் தலங் களைக் கண்டு வழிபடுவதால் வாழ்வு சிறக்கும், வளம் கூடும். தடைபட்டு மண வாழ்வு கிட்டாமல் இருக்கும் ஆண்களும் பெண்களும் முறையாக விரதம் இருந்து வழிபட, விரைவில் உயர்ந்த துணையைப் பெற்று நிறைந்த வாழ்வைப் பெறுவர்.

பொங்கி தேவி

வள்ளிமலைக்கு ஆதியில் பொங்கி மலை என்னும் பெயர் வழங்கி வந்ததாகவும், அம்மலையின் காவல் தெய்வமாக பொங்கி தேவி இருக்கிறாள் என்றும் கூறுகின்றனர். வள்ளிக்கு அம்மலைத் தெய்வத்தின் பெயராலேயே நம்பி ராஜன் பொங்கி என்னும் பெயர் சூட்டினான். வள்ளியைப் பொங்கி என்றும் அழைக்கின்றனர். வள்ளி மலையில் பொங்கிப் பாறை என்னும் பாறை உள்ளது. வள்ளி மலையில் திருப்புகழ்சாமி எனப்படும் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் வாழ்ந்ததும், சமாதி கொண்டிருப்பதுமாகிய குகைக்கு அருகில் பொங்கிப் பாறையும் அதன் முன்பாகப் பொங்கி தேவியின் உருவமும் உள்ளன. வள்ளி யின் அம்சங்களைப் பொங்கிதேவி பெற்றிருக்கிறாள் என்றும் திருப்புகழ்ப் பாடல்களை விரும்பிக் கேட்கிறாள் என்றும் கூறுகின்றனர். ஆதியில் பொங்கியின் பெயரால் அழைக்கப்பட்ட மலை வள்ளி தோன்றிய பின்னர் அம்மலை அவள் பெயரால் வள்ளி மலை என்னும் பெயரைப் பெற்றது என்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வயானைப் பிராட்டியாரும் முளைப்பாரி விழாவும்

மக்கள் தாம் மேற்கொள்ளும் சடங்குகளினால் ஏற்படும் பலாபலன்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள நல்லதொரு நாளில் நவதானியங்களை முளையிட்டு, அவை வளர்வதைப் பொறுத்து, நன்மை தீமைகளை அறிந்துகொள்ளும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

திருமணம், பெருந்திருவிழாக்கள், மகா கும்பாபிஷேக வைபவங்கள் எனச் சடங்குகள் யாவற்றிலும் முளையிடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த வைபவங்களுக்கு முன்பாக நல்லதொரு நாளில் தூய மண்ணை எடுத்துவந்து, பாலிகைக் கிண்ணங்களில் நிறைத்து, அவற்றில் பாலில் நனைத்த நவ தானியங்களை இடுவர்.

நடுவில் சந்திரன், கார்த்திகை, ரோகிணி ஆகியோரைக் குறிக்கும் கும்பங்கள் வைக்கப் படும். தானியங்களை முளையாக விட்டு அதன் மீது மண்ணைத்தூவி, பின்னர் தர்ப்பை யால் மூடித் தினமும் இருவேளையும் தண்ணீர் தெளிப்பர். சில நாட்களில் தானியங்கள் முளைவிட்டு வளர்ந்துவிடும்.

சடங்கின் முடிவில் இந்த முளைப் பாலிகைகளுக்கும் வழிபாடுகள் செய்யப் படும். நாம் மேற்கொள்ளும் சடங்குகளில் அழைக்கப்படும் தெய்வங்களும், தெய்வ நிலை பெற்றுள்ள நமது முன்னோர்களும் வந்து கலந்து கொண்டிருந்தால் முளைகள் செழிப்பாக ஓங்கி வளர்ந்திருக்கும்.

சடங்குகளில் குறை நேர்ந்தும் தெய்வங் களின் வரவு இல்லாமலும் இருந்தால் முளைகள் சரியாக வளராததுடன் கருகியும் போகும் என நம்பினர். அப்படி சில சமயம் முளைக்காமலும் கருகியும் போகுமானால் உரியவர்களைக் கொண்டு வரப்போகும் தீங்குகளை முன்கூட்டியே அறிந்து கொண்டு அதற்கேற்ற பரிகாரங்களை மேற்கொள்வர்.

திருமணம் முதலிய சடங்குகள் செய்ய வேண்டிய தேவைகள் அடிக்கடி இருப்ப தில்லை. எனவே குறித்த சமயங்களில் முளைப்பாரிட்டு அந்த ஆண்டிற்குரிய பலன்களைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படும் முறையும் மிகுந்து வருகிறது.

ஆதியில் மக்கள் பயிர்த்தொழிலையே பெரும்பாலும் நம்பிஇருந்ததால், பயிர் விளைச்சலின் தன்மையையும் அதன் பயன் களையும் தெரிந்து கொள்ளப் பயிர்செய் வதற்கு முன்பாக வரும் ஆடிமாதத்தில் முளைப்பாரி விழாவை நடத்தினர்.

ஊர்களில் தனித்தனியே வீடுகளில் வைக்கும் முளைப்பாரிகளை எல்லோரும் ஒன்றாக எடுத்துச் சென்று கிராமதேவதைக் கோவில்களில் வைத்து வழிபாடு செய்தபின் ஆற்றில் அல்லது நீர்நிலைகளில் விட்டு விடுவது வழக்கம்.

பெருந்தெய்வ ஆலயங்களிலும் அம்பிகை முளைப்பாரி வைக்கும் விழா ஆடி மாதத்தில் நடைபெறுகிறது. ஆடிப் பூரத்திற்கு முன்பாக முளையிட்டுத் தொடங் கும் விழா ஆடிப்பூரத்தில் நிறைவு பெறும். ஆடிப்பூர நாளில் அம்பிகை திருவுருவத் துடன் முளைப்பாலிகைகளையும் எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்று, ஊருக்கு அருகிலுள்ள ஆறு, குளம், ஓடை முதலிய வற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குச் செல்வர். அங்கு பெண்களுக்கு முழுக்காட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



எண்ணையும் சிகைக்காயும் மஞ்சள் குங்குமமும் தருவர். கொண்டுவந்த முளைகளை வழிபட்டு, நீரில் கரைத்து விட்டபின் அம்மனுக்கு அபிஷேகம் நடைபெறும். மாலையில் சிறுபயிற்றை வெல்லத்துடன் சேர்த்து அம்பிகைக்கு நிவேதித்தபின் கோயிலுக்கு எழுந்தருளச் செய்வர். இதுவே முளைப்பாரி விழாவாகும். இது இடம்,காலம்,பொருள் நிலைக்கு ஏற்ப மாறுபடும். பெரும்பாலும் ஆடிப்பூர அம்மன் எனப்படும் பராசக்திக்கே முளைப்பாரி விழா கொண்டாடப்படும். வள்ளி, தெய்வ யானையரை எழுந்தருள வைத்து விழா கொண்டாடும் வழக்கம் இல்லை.

திருவிடைக்கழியில் மட்டும் தெய்வயானை நாச்சியார் ஆடிப்பூரத்தில் முளைப்பாரி விழா கொண்டாடுகிறாள். தெய்வயானை வீரசோழன் ஆற்றிற்கு எழுந்தருளி முளையிட்டு ஆராட்டு காண்கிறாள். திருச்செந்தூர் , சுவாமி மலை முதலிய தலங்கள் படைவீடுகளாக இருந்தபோதும் அங்கெல்லாம் ஆடிப்பூர நாயகியான பராசக்தியே எழுந்தருளி முளைப்பாரி விழா காண்கிறாள்.

தெய்வயானைப் பிராட்டியும் எண்ணெய்க் காப்பு விழாவும்

மார்கழியில் பாவை விரதமிருக்கும் பெண்கள் தினமும் நீராடி பூசை செய்வர். அவர்கள் விரத காலத்தில் மையிட்டுக் கண்களுக்கு வனப்பூட்டுவதில்லை. கூந்தலை வாரி மலர் கொண்டு முடிவதில்லை. பாவை நோன்பு நோற்கும் ஆண்டாள் திருப்பாவையில் மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்.செய்யாதன செய்யோம் என்று கூறுவது இங்கு எண்ணத் தக்கதாகும்.

விரதம் முடிந்த மாலை வேளையில் பல் துலக்கி, முகம் கழுவி, பொட்டிட்டு, தலைக்கு எண்ணை தடவி, கூந்தலைத் திருத்தி வாரிப் பின்னி அணிகள் பூண்டு, பூச்சூடி இல்லுறை தெய்வங்களை வணங்குவர். மாலைவேளையில் பெண்கள் விரதத்தை முடித்து, கூந்தலைப் பின்னி, அழகுபடுத்திக் கொள்வதே எண்ணெய்க்காப்பு உற்சவம் என அழைக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் ஆண்டாளுக்கும் மாசி மாதத்தில் மதுரை மீனாட்சிக்கும் சிறப்பான முறையில் எண்ணெய்க்காப்பு உற்சவங்கள் நடத்தப்படுகின்றன.

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானைப் பிராட்டியாருக்கு எண்ணெய்க்காப்பு உற்சவம் மாசி மாதத்தில் ரோகிணி முதல் பூசம் வரையுள்ள ஐந்து நாட்கள் நடத்தப்படுகிறது. தெய்வ யானைஅம்மனுக்கு முடிசாத்தி, திருவாச்சி மண்டபத்தில் அமர்த்தி, அங்கு துயிலெழுப்பிப் பல்துலக்கி, முகம் கழுவித் தலையில் எண்ணெய் தேய்த்துச் சிக்கெடுத்துச் சீவி முடித்து கண்ணாடி பார்க்கவைப்பது, தாம்பூலம் தரித்துக்கொள்வது ஆகியவை பாவனையால் செய்யப்படுகின்றன. இதற்கென வெள்ளியாலான கண்ணாடி, சீப்பு, கண்மை கூடு, வெள்ளித் தட்டு முதலியவற்றை வைத்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி தெய்வயானை உடனாய மணவிடைக் குமரர் எனும் கல்யாண முருகன்.



சிவபெருமான் அடியவர்களுக்கு அருள வரும் போது வெண்மையான, அலங்கரிக் கப்பட்ட இடப(காளை) வாகனத்தில் உமா தேவியோடு விண்ணில் தோன்றிக் காட்சி தருவதாகப் புராணங்கள் கூறுகின்றன. அது போலவே முருகன் வள்ளி தெய்வயானை யருடன் மயில் மீது வரும் கோலம் மயில் வாகன சேவை என்று போற்றப்படுகின்றது.

சிவாலயங்களில் இடப வாகனக் காட்சி யும், திருமால் ஆலயங்களில் கருடவாகன சேவையும் சிறப்புப் பெற்றிருப்பதைப் போல முருகன் ஆலயங்களில் மயூர வாகன சேவை சிறப்புடன் போற்றப்படுகிறது. இருபெரும் தேவியருடன் மயில் மீது வரும் குமரன் கல்யாண முருகன் என்றும், காட்சி கொடுக்கும் கந்தவேள் என்றும் கொண்டா டப்படுகிறது.

கல்யாணமுருகன் திருக்கோலம் என்பது ஒரு முகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு வள்ளி தெய்வயானையருடன் எழுந்தருளியிருக்கும் முருகனின் அருட் கோலமாகும்.

முருகன் ஆலயக் கருவறையில் முருக னின் சோடச வடிவங்களான தண்டபாணி, கார்த்திகேயன், பாலசுப்ரமணியர், சிவசுப்ர மணியர், பிரம்மசாத்தன் முதலியவற்றில் எந்த வடிவத்தில் எழுந்தருளி இருப்பினும் உலா மூர்த்தியாக இருப்பது மேலே குறித்த கல்யாண முருகனின் கோலமே.

மயில் வாகனத்தில் பவனி வந்து அருள் பாலிப்பதும் இக்கோலமே. கோயிலின் மூல மூர்த்தியை ஒத்த சிறப்புமிக்க முருகன் மூர்த் தங்கள் ஆலயங்களில் பல இருந்தபோதும் திருமணவிழாக் காண எழுந்தருளும் கோலம் இது ஒன்றே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகவேள் பழனியில் தண்டாயுத பாணியாகவும், திருவிடைக்கழியிலும், திருச் செந்தூரிலும் சிவசுப்ரமணியனாகவும், காஞ்சி குமரகோட்டத்தில் பிரம்மசாத்தனாக வும், திருத்தணியில் ஞானசக்தி தரனாகவும், எழுந்தருளியிருந்து அருள்பாலித்துக் கொண்டி ருக்கிறார். இங்கெல்லாம் மூலவர் வடிவி னை யொத்த முருகனின் உலாத்திருமேனி இருந்த போதிலும் கொடியேற்றிக் கொண்டா டப்படும் பெருவிழாவில் பவனி வரும் மூர்த்தியாகவும் திருமண விழாவில் எழுந்த ருளி திருமணம் காணும் மூர்த்தியாக இருப்பவர் கல்யாண முருகனே.

இதையொட்டி இக்கோலம் மண விடைக் குமரர், மாப்பிள்ளைசுவாமி என்றும் பலவாறு அழைக்கப்படுகின்றது.

ஆகமங்கள் இந்தத் திருவுருவத்தை சிறப்புடன் போற்றுகின்றன. கொடியேற்றிச் செய்யப்படும் விழாவிற்கு இவரே முதன்மை மூர்த்தியாவார்.

தம்பியர் நவவீரரும் - அண்ணன்மார் வேடர் ஒன்பதின்மரும்

முருகனின் தம்பியர் நவ வீரர்கள் ஆவர். அன்னை பராசக்தி யின் திருவடிச் சிலம்பில் இருந்து தெறித்து விழுந்த நவமணிகளில் அவளது திருவுருவம் பதிந்து பெண்களாக வெளிப்பட்டது. அவர்கள் கருவுற்று ஒன்பது குழந் தை களைப் பெற்றனர். அவர்களே நவவீரர் எனப்படுகின்றனர். வீரபாகு (மாணிக்கம்), வீரமார்த் தாண்டன் (மரகதம்), வீராந்தகன் (பவழம்), வீரதீரன் (இந்திர நீலம்), வீரகேசரி (முத்து), வீரமகேந் திரன் (புஷ்பராகம்), வீரமகேஸ் வரர்(கோமேதகம்),வீரபுரந்தரன் (வைடூரி யம்), வீரராட்சசன் (வைரம்) என்ப தாகும். முருகன் ஆலயங்களில் நவவீரர்கள் எனும் பெயரில் இவர்கள் தனிச் சந்நிதியில் இருக் கின்றனர்.

முருகனுக்குத் தம்பியர் ஒன்பதுபேர் இருப்பது போலவே வள்ளிக்கு அண்ணன் மார் ஒன்பதின்மர் உள்ளனர். இவர்கள் வள்ளிக்குக் காவலராக இருப்பவர்கள். முருகன், வள்ளியைத் சிறையெடுத்துச் சென்றபோது அவரை எதிர்த்துப் போரிட்டு மாண்டுபின்னர் அவரால் உயிர்ப் பிக்கப்பட்டவர்கள். இவர்கள் வில்லேந்திய வேடர்க ளாகச் சித்த ரிக்கப்படுகின்றனர்.

தெய்வயானையைச் சூழ்ந் திருக் கும் ஒன்ப தின்மர் கூட்டமும் உள்ளது.அவை நவநிதி தேவர்க ளாவர். இவர்கள்1.கச்சநிதி, 2.கற்பநிதி, 3.சங்கநிதி, 4.பத்ம நிதி,5.நந்த நிதி6.நீல நிதி, 7. மகா நிதி, 8.மகாபத்மநிதி,9.முகுந்தநிதி என ஒன்பதாகும்.பண்டைய நூல்கள் பல வற் றில் நவநிதிகளாக1.வண்டுகை,2. மனோ கை,3.பிங்கலிகை,4.பதுமை, 5.சங்கை, 6. ஏசங்கை,7.காளை,8.மாகாளை, 9. சர்வதம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

மகாலட்சுமி அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் வீற்றிருப்பது போலவே, அவளது மகளான தேவசேனா இந்த ஒன்பது நிதிகளால் சூழப் பட்டிருக்கிறாள். இதனால், இவளை நவ நிதிப்பாவை என்றும் அழைப்பர். இந்திர உல கில் கற்பக மர நீழலில் நவநிதிகள் சூழ, தெய்வயானை விளங்குகிறாள். ஆக இம் மூவர் பின்னாலும் ஒன்பதின்மர் கூட்டம் இருப்பதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளியும், தெய்வயானையும் பவனிவரும் வாகனங்கள்

அன்பர்கள் தாம் வணங்கும் தெய்வங்களை அவற்றிற்குரிய வாகனங்களில் அமர்த்தி, வீதியுலா வரச்செய்து கண்டு மகிழ்கின்றனர். சிவபெருமானுக்கு இடபமும், திருமாலுக்குக் கருடனும், குமரனுக்கு மயிலும், காளிக்கு வேதாளமும், துர்க்கைக்கு மான் (அ) சிங்கமும், அம்பிகைக்குப் புலியும், ஐயனாருக்குக் குதிரையும்,என தெய்வங்களுக்குரிய வாகனங்களின் பட்டியலைப் புராணங்கள் கூறுகின்றன.

ஒவ்வொரு தெய்வமும் தமக்கே உரித்தான சிறப்புமிக்க வாகனங்களில் மட்டும் பவனி வருவதில்லை. அன்பர்கள் விரும்பி மகிழவும் தத்துவங்களை விளக்கும் வகையிலும் பல்வேறு வாகனங்களில் பவனி வந்து காட்சி தருகின்றன. பெருந் திருவிழாக்களின்போது காலையிலும் மாலையிலும் தெய்வங்கள் பல்வேறு வாகனங்களில் பவனி வந்து அன்பர்களுக்குக் காட்சி தருகின்றனர்.

முருகன் ஆலயங்களில் நடை பெறும் பெருந்திருவிழாவின்போது முருகன் காலையிலும் மாலையிலும், புலி, யாளி, சிங்கம், சூரியப்பிரபை, ஆட்டுக்கடா, அன்னம்,

அன்னத்தில் அருள்மிகு வள்ளியம்மையும் - மயில்வாகனத்தில் தெய்வயானையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரபத்மன், தாரகாசுரன் முதலிய சிறப்பு மிக்க வாகனங்களில் பவனிவந்து அருள்பாலிக் கின்றார். அவருடன் தனி வள்ளி தெய்வ யானைரும் அந்நாளைக்கு உரிய வாகனங் களில் பவனி வருகின்றனர்.

முருகன் மயில்மீது வரும்போது வள்ளி, தெய்வயானையர் தனித்தனி மயில்களில் பவனி வருகின்றனர். முருகன் ஆட்டுக் கடா வில் வரும் போது வள்ளி அன்னத்திலும் தெய்வயானை மயிலிலும் வலம்வருகின்றனர்.

முருகன் கற்பக விருட்சத்தில் பவனி வரும் வேளையில் வள்ளி, தெய்வயானையர் காமதேனுக்களில் வலம் வருகின்றனர்.

முருகன் யானைமீது வலம் போது இருவ ரும் தனித்தனியே யானைகளில் வலம் வருகின்றனர். முருகன் சிங்கத்தின் மீது பவனி வரும்போது வள்ளி, தெய்வயானையர் புலிகள் மீது வலம் வருகின்றனர்.

முருகன் சிவப்புக் குதிரையில் வலம் வரும் போது வள்ளி பச்சைக் குதிரையிலும், தெய்வயானை வெள்ளைக் குதிரையிலும் பவனி வருகின்றனர்.

இந்நாளில் இந்த விழாக்களை அதிகம் காண முடியவில்லை. பொருளாதார ரீதியில் விழாச் செலவுகள் அதிகரிப்பு, ஸ்ரீபாதம் எனப்படும் சுவாமி தூக்கும் ஆட்கள் கிடைக்காமை முதலிய பல்வேறு காரணங் களால் இப்போது இத்தகைய பவனிகளைக் காண முடியவில்லை.

இலங்கையிலுள்ள நல்லூர் கந்தசாமி கோயிலில் நடைபெறும் பெருந்திருவிழா வின்போது காலையிலும், மாலையிலும் வெற்றி வேலாயுதசுவாமி என்னும் பெய ருடன் முருகன் வேல் வடிவில் சகல அலங் காரங்களுடன் யானை, யாளி, குதிரை, அன்னம், மயில் முதலான வாகனங்களில்



சகோபுரக் காட்சியில் வெற்றிவேலாயுதசுவாமி, வள்ளி, தெய்வயானையர் தனித்தனி இடப வாகனங்களில் - நல்லூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவனி வருகின்றார். அவருடன் தனி வள்ளி, தனி தெய்வயானையரும் அதேபோன்ற வாகனங்களில் வருகின்றனர்.

திருச்செந்தூரில் வெள்ளி முத்துக்கடா வாகனம் என்னும் வாகனம் உள்ளது. இதில் நடுவில் ஆட்டுக்கடாவும், இருபுறமும் மயிலும் அன்னமும் உள்ளன. ஆட்டுக் கடாவில் குமாரவிடங்கரும் அன்னத்தில் வள்ளியும், மயிலில் தெய்வயானையும் எழுந்தருளுகின்றனர்.

முருகனுக்கு இணையாக வள்ளியும் தெய்வயானையும் தனித்தனி வாகனங்களில் வருவது காணற்கினிய காட்சியாகும்.

முருகன் சந்நிதியில் எழுந்தருளியுள்ள வள்ளி தெய்வயானையர் வீற்றிருக்கும் வாகனங்கள்

முருகன் ஆலயங்களில் கருவறையிலும், சிவன் அம்பிகை ஆலயங்களில் துணைச் சந்நிதிகளிலும் முருகப்பெருமான் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். அவருடன் அவரது இரு பெரும்தேவியரும் எழுந்தருளியுள்ளனர்.

பெரும்பாலான தலங்களில், கல்யாண முருகன் நின்றிருக்க, தேவியரும் நின்றவாறே காட்சி அளிக்கின்றனர். இக்கோலத்தில் முருகனின் பின்புறம் மயில் நிற்கின்றது.

முருகன் ஆறுமுகப் பெருமானாக எழுந்தருளும்போது,அவர் மயில் வாகனத்தில் வீற்றிருக்கத் தேவியர் இருபுறமும் நின்றவாறே காட்சியளிப்பதே பெரும்பாலான தலங்களில் உள்ளன.

சில தலங்களில் ஆறுமுகன் மயில்மீது வீற்றிருக்க, அம்பிகையர் இருவரும் தனித்தனியே மயில் வாகனங்களில் அமர்ந்திருக்கக் காண்கிறோம். குன்றக்குடி, திண்ணியம் முதலான தலங்களில் கருவறையிலும் திருமெய்யம்(திருமயம்) முதலிய தலங்களில் துணைச் சந்நிதிகளிலும் இவ்வாறு உள்ளன.

திருமயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் சிங்காரவேலர் மயில்மீதும் தேவியர் இருவரும் யானைகள் மீதும் அமர்ந்துள்ள திருக்கோலம்

முருகன் மயில்மீது அமர்ந்திருக்க, இருபுறமும் தேவியர் யானைகள் மீது அமர்ந்துள்ள கோலத்தைத் திருமயிலை கபாலீசுவரர் ஆலயத்திலுள்ள சிங்காரவேலர் சந்நிதியில் கண்டுமகிழலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகோபுரக் காட்சியில் முருகனுடன் வள்ளி தெய்வயானையர்

ஆலயங்களில் தேர்த் திருவிழா சிறப்புடன் கொண்டாப்படுகிறது. இது கருவறைக்குச் சக்கரங்கள் பூட்டி அதனாலேயே தெய்வங்கள் வீதியில் பவனி வந்து அன்பர்களுக்குக் காட்சி கொடுப்பதைக் குறிக்கிறது என்கின்றனர்.

இதுபோல் ராஜ கோபுரத்துடன் சுவாமி வீதி வலம் வருவதைக் குறிப்பது சகோபுரக் காட்சியாகும். சகோபுரம் என்பது ராஜகோபுரத்தை ஒத்த வடிவுடையது. ஓலையைக் கொண்டு கண்ணைக் கவரும் விதத்தில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டது. இதனுள் சிவபெருமானையும், அம்பிகையையும் தனித்தனி இடபங்களில் எழுந்தருளி வைத்து உலாக் காண்கின்றனர்.

முருகன் ஆலயங்களில் சிலவற்றில் மட்டுமே சகோபுரக் காட்சி நடத்தப் படுகிறது.

இலங்கையிலுள்ள நல்லூர் ஆலயத்தில் நடைபெறும் சகோபுரக் காட்சி புகழ் பெற்றதாகும். சகோபுரம் அமைப்பிற்குள் வேலாயுதக் கடவுளும், வள்ளியும், தெய்வயானையும், தனித்தனியே (மூன்று) இடபங்களில் எழுந்தருளி வீதியுலா காணும் இவ்வரிய காட்சி நம்மை மகிழ்விக்கிறது.



சகோபுரக் காட்சி நல்லூர் முருகன் கோயில் - இலங்கை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறுமுகனும் வள்ளி தெய்வயானையரும்

முருகனின் திவ்ய திருக்கோலங்களில் மிக உயர்ந்ததாக விளங்குவது அறுமுகன் திருக்கோலமேயாகும். இதில் பெருமான் ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங் களும் கொண்டு மயில்மீது அமர்ந்தவாறு அருள் பாலிக்கின்றார்.

முருகனடியார்கள் இத்திருக்கோலத் தைச் சபாபதி என்று அழைத்து, நடராசப் பெருமானுக்கு இணையாகப் போற்றி வழி படுகின்றனர். திருக்கோயில்களில் நடரா சரை அமைப்பது போலவே இவரையும் தெற்கு நோக்கிய சந்நிதியில் அமைப்ப துடன், திருவாதிரை நாளில் சிறப்புப் பூசை களையும் செய்து மகிழ்கின்றனர். பெருந்திரு விழாவில் எழுந்தருளித் தீர்த்தம் தந்து காட்சி யளிப்பதும் நடைபெறுகிறது.

ஓயாது நிகழும் நடராசரின் ஆட்டத்தைச் சிவகாமி இடையறாது கடைக்கண்ணால் நோக்கி மகிழ்ந்து கொண்டிருக்கின்றாள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. அதை யொட்டிச் சிவகாமியின்றி நடராசரைத் தனித்து வழிபடக்கூடாது என்று நடை முறைப் படுத்தினர். அதுபோன்றே முருகன் வழிபாட்டிலும், ஆறுமுகப்பெருமானைத் தேவியரின்றி வழிபடக்கூடாது என்னும் வழக்கமும் உள்ளது.

ஆறுமுகனின் திருமுகங்கள் புரியும் அருட்திறங்களைப் பற்றிப் பேசும் நூல்கள் பலவாகும். அவற்றில் தனிச்சிறப்பு பெற் றவை திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா முதலியனவாகும்.

இவற்றில் முருகன் தனது ஆறு திரு முகங்களில் ஒன்றால் வள்ளிக்கு, அருள் புரி வதை, திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்,

ஒருமுகம்குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பன் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே என்று

குறிக்கின்றார். ஆறுமுகனின் திருமுகங் களில் ஒன்று குறவர்களின் பெண்ணாக வளர்ந்த கொடி போன்ற இடையை உடைய வள்ளியை நோக்கிப் புன்சிரிப்பைச் சிந்திக் கொண்டிருக்கின்றது என்பது பொருள் இவரை அடியொற்றி அருணகிரிநாதர் சுவாமிகள் **வள்ளியை-மணம்புணர வந்தமுகம் ஒன்று** என்று போற்றுகின்றார்.

கந்தர்கலிவெண்பாவில் குமரகுருபரர் ஆறுமுகன் தன் ஒரு முகத்தால் வள்ளி யம்மையையும் தேவர் குல மகளான தெய்வ யானையையும் அன்புடன் நோக்கி மகிழ் விக்கிறார் என்பதை ....**நேசமுடன்**

போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர்பூங்கொடிக்கும் மோகம் அளிக்கும் முகமதியும் என்று கூறுகிறார்.

வள்ளி தெய்வயானையுடன் அனைத்து ஆலயங்களிலும் ஒருமுகமும் நான்கு கரங் களும் கொணடு நின்றவாறு காட்சி தரும் கல்யாண முருகனை எழுந்தருளுவித்து திருமணவிழா கொண்டாடுவதே வழக்கம். ஆறு முகனுக்குத் திருமணவிழா கொண்டா டப் படுவதில்லை.பழனியில் தெய்வயானை கல்யாணமும் சுவாமி மலையில் வள்ளி கல்யாணமும் ஆறுமுகப் பெருமானோடு நடத்தப்படுகின்றன,.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகனின் அருள்நிறை வடிவங்களில் வள்ளி தெய்வயானையர்

முருக வழிபாட்டில் முருகனைத் தனியாகவும், தேவியருடனும் எழுந்தருளி வைத்து வழிபடும் இரண்டு விதமான வழிபாட்டு முறைகள் உள்ளன.

பாலமுருகன், பழனியாண்டவர், சுவாமிநாதன் முதலிய முருகனின் வடிவங்களில் அவனைத் தேவியரின்றித் தனியாக வழிபடுகிறோம்.

கல்யாண சுப்பிரமணியர், ஆறுமுகர் போன்ற கோலங்களில் அவனை இருபெரும் தேவியருடன் அமைத்து வழிபடுகின்றனர். குறிப்பாக ஷண்முகநாத சுவாமியைத் தேவியரின்றி வழிபடக்கூடாது என்பது குமர சித்தாந்தம்.

முருகனோடு தேவியர் இரண்டு பேரையும் அமைக்காமல் இருவரில் ஒருவரான வள்ளி அல்லது தெய்வயானையோடு அமைத்து வழிபடும் வழக்கமும் உள்ளது.

வள்ளி மணவாளன் கோலங்களில் அவனுடன் வள்ளியம்மை மட்டும் இணைந்து காட்சி தருகின்றாள். தேவசேனாபதி கோலங்களில் அவனுடன் தெய்வயானையை மட்டுமே காண்கிறோம்.

இக்கட்டுரையில் முருகனின் திவ்ய மூர்த்தங்களில் முதலில் தெய்வயானையுடன் மட்டுமே காட்சிதரும் கோலங்கள் பற்றிய செய்திகளையும், வள்ளியம்மைப் பிராட்டியருடன் மகிழ்ந்திருக்கும் கோலங்களையும் காண்போம். இவை சிற்ப நூல்களும், புராணங்களும் கூறும் வழியில் அமைந்ததாகும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவசேனாபதி

தேவர்களின் தலைவனான இந்திரனின் மகளாக வந்தவளாதலின், அமுதவல்லி தேவசேனா எனப்பட்டாள். தமிழில்அதுவே தேவசேனை என வழங்குகிறது. முருகனுக் குரிய பெயர்களில் தேவசேனாபதி என்பதும் ஒன்றாகும். அது இரண்டு விதமான பொரு ளைத் தருகிறது.

முதற்பொருள் தேவர்களின் சேனைக் குத் தலைவன் என்பதாகும். தேவர்கள் தம்மை வருத்திய சூரபத்மன் மீது போர் தொடுக்கத் திரண்டனர். உரிய வலிமை மிக்க தலைமை கிடைக்காததால் தவித்தனர். சிவனருளால் தோன்றிய கந்தனைப் பெற்று, அவனைத் தம் தலைவனாக முடிசூட்டினர். தேவர்களின் சேனாதிபதியாகப் பட்டம் சூட்டப்பட்டதால், முருகன் தேவசேனாபதி என்று அழைக்கப்படுகின்றார். (தேவர் + சேனை + அதிபதி=தேவசேனாதிபதி)

தேவர்களின் சேனாதிபதியாக முடி சூட் டப்பட்டபின், அவர் தனக்கு வெற்றியைத் தர வேண்டிச் சிவனிடம் பிரார்த்தித்து, காஞ்சியில் சிவலிங்கம் அமைத்து வழிபட் டார். அந்த லிங்கம் தேவசேனாபதீசுவரர் என்று அழைக்கப்படுகிறது.

காஞ்சிபுரத்திலுள்ள புகழ்பெற்ற முருகன் கோயிலான குமரகோட்டத்திற்குள் மகாமண்டபத்தில் தேவசேனாபதீசுவரர் ஆலயம் உள்ளது. காஞ்சிப் புராணம் இந்தச் சிவாலயத்தின் பெருமைகளை விரிவாகக் கூறுகிறது.

தேவசேனாபதி என்பதற்கு இரண்டா வதாக அமைந்த பொருள் தேவசேனாப் பிராட்டியாரின் (தெய்வயானை) கணவன் (பதி) என்பதாகும்.

உமையின் கணவன் உமாபதி என்றும், லட்சுமியின் கணவன் லட்சுமிபதி என்றும் அழைக்கப்படுவது போல, தேவசேனையின் கணவனாக விளங்குவதால் முருகன் தேவ சேனாபதி என்று அழைக்கப்படுகின்றான்.

சூரபத்மனை வென்று, தேவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்து, அவர் களுக்குத் தெய்வலோகத்தின் ஆட்சியைக் கொடுத்து, அதில் அவர்களை மீண்டும் குடியேற்றி, இந்திரனுக்கு முடிசூட்டினார். தேவர்கள் எல்லோரும் கூடி நிச்சயித்தபடி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவேந்திரனும் இந்திராணியும் தெய்வ யானையாரை முருகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.

தெய்வயானையை மணந்த முருகன் அவளைத் தம் இடப்பாகத்தில் அமர்த்திக் கொண்டு அன்பர்களுக்குக் காட்சியளித்தார். அக்கோலமே தேவசேனாபதி என்று அழைக் கப்படுகின்றது. இருவரும் கற்பக மரத்தின் கீழ் தங்க சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர்.

சுப்பிரமணிய பராக்கிரமம் தேவர்களின் தலைவனான தேவசேனாதிபதியாகவும், தெய்வயானையின் தேவசேனாபதியாகவும் விளங்கும் அவரது திருக்கோலங்களைச் சிறப்பித்துக் கூறுகின்றது.

கந்தபுராணம் தேவசேனாபதி என்பது தெய்வயானையைத் தழுவி நிற்கும் ஆறுமுக னின் கோலம் என்பதைக் குறிக்கின்றது.

இதன்படி ஆறுமுகனின் இடப்பாகத் தில் தேவியிருக்கின்றாள். வலது கையால் அபயம் காட்டும் குமரன் இடது கையால் அவளை ஆரத் தழுவியபடி விளங்குகின் றான். இடது கரங்களில் கேடயம், வில், கதை, சேவல், குலிசம் ஆகிய ஐந்தையும், வலது கரங்களில் சக்தி, கோல், அம்பு, சூலம், குறு வாள் ஆகியவற்றையும் தாங்கியுள்ளான். இது

ஒருகை தனது வலக்குறங்கின்
அணங்கைத் தழுவி யுகள மூலை
மருவ அபயம் ஒன்றாக
வளர்கோல் வாள் சூலம் குலிசம்
பெருவேல் வான்வில் கறை புள்ளம்
புயங்கள் பத்தும் கரம்பத்தின்
இருவும் ஆறுமுகத் தேவ
சேனாபதி சீர் (இழைப்போதும்)

எனும் புராணப் பாடலால் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஸ்ரீதத்துவநிதி என்னும் நூல் அபயம், வரதம், சங்கு, சக்கரம் கொண்ட

நான்கு கரங்கள் கொண்டவரென்றும், ஒரு முகமும் இருகண்களும் கொண்டவ ரென்றும்தேவசேனா வடிவத்தைக் கூறு கிறது.

திருவிடைக்கழியில் தேவசேனாபதி யின் திருக்கோலம் அண்மையில் புதிதாக வடிக்கப்பட்டு, எழுந்தருளிவைக்கப்பட் டுள்ளது. இதற்கு குஞ்சரி ரஞ்சித குமரன் என்பது பெயர். இதில் முருகன் இரண்டு கரங்களுடன் திகழ்கிறார். வலது கை அபயம் காட்ட, இடது கரத்தால் இடது பக்கம் நிற்கும் தெய்வயானையை அணைத் துக் கொண்டுள்ளார். தெய்வயானை வலது கையில் மலரேந்தி இடது கரத்தைத் தொங்க விட்டவாறு உள்ளாள்.

தெய்வயானையோடு மகிழ்ந்திருக்கும் இம்மூர்த்தியை வழிபட்டால், இந்திர போகமான வாழ்வும் பெருமகிழ்ச்சியும் உண்டாகுமென்று கூறுகின்றனர். ✪

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோலக்குறவள்ளி மணவாளன்

இரஞ்சிதமொழித் தெய்வயானையோடு இணைந்து காட்சிதரும் தேவசேனாதி பதியாக விளங்கும் முருகனைச் சிந்தித்த நாம் கோலக் குறத்தியுடன் அவன் விளங்கும் கோலங்களையும் சிந்தித்து மகிழலாம்.

சிவபெருமான் ஒப்பற்ற வேதத்தின் ரகசியங்களையும் ஆகம நுண்பொருளையும் பராசக்திக்கு உபதேசித்துக் கொண்டிருப் பதைப் போலவே, முருகன் வள்ளியம் மைக்கு உபதேசித்துக் கொண்டிருக்கின்றான். வள்ளியொடு காதல் மொழி பேசி நிற்கும் குமரனே அவளுக்கு உயர்ந்த ஞானத்தை உபதேசிக்கும் ஞானமூர்த்தியாகவும் விளங்கு கின்றான். அவனை வள்ளிகேள்வன் என்றும் வல்லீபதி என்றும் அழைக்கின்றனர்.



சிற்பநூல்களில் பிரம்மசாத்தன் எனப் படும் (ஞானத்தை உபதேசிக்கும்) ஞான ஸ்கந்தனை வள்ளியம்மையைச் சேர்த்து அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள் ளது. இக்கோலத்தில் வள்ளியம்மை வலப் பக்கம் நிற்க முருகன் ஓங்கார வடிவமான சேவல், ஞானவாள், சக்தி ஆயுதம், கேடயம் ஆகியவற்றை ஏந்தியவராகக் காட்சியளிக் கின்றார்.

அருணகிரிநாதர் போன்ற அடியார்கள் முருகன் குருநாதனாக வந்து உபதேசம் புரிந்து ஆட்கொள்ளும் வேளையில் மயில் மீது வள்ளியம்மையுடன் வந்து அருள் பாலிப்பதாகக் கூறுகின்றனர். ஞானமலை யில் குறமகள் தழுவிடும் குமரனின் இக்கோலத் தைக் கண்டு மகிழ்கிறோம். தம் இடது மடி மீது அமர்ந்துள்ள வள்ளியைத் தனது இடது கரத்தால் அணைத்தவாறு மயில் மீதமர்ந்து முருகன் குருநாதனாகக் காட்சி தருவது இனிமையாக உள்ளது.

வள்ளி கல்யாணசுந்தரர் வடிவிலும் முருகன் வள்ளியோடு மட்டுமே காட்சி தருகின்றார்.

சிறுவாபுரியில் எழுந்தருளியுள்ள வள்ளி கல்யாணசுந்தரரை வள்ளிமணவாளப் பெருமாள் என்று போற்றுகின்றனர். இதில் தொண்டை நாட்டு அமைப்பின்படி முருகன் மேற்கரங்களில் கெண்டி அட்சமாலை ஏந்தியுள்ளார். வலது முன்கரம் அபயம் காட்ட, இடது கரத்தால் வள்ளியை அணைத் துக் கொண்டுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞான மலையில் அருணகிரி நாதருக்கு ஞான உபதேசம் செய்த முருகன், வள்ளியைத் தொடை மீது அமர்த்திக் கொண்டு மயில் மீது அமர்ந்தவாறு காட்சி தந்தது அழகிய உலாத் திருமேனியாக எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது.

நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான் குருநாதன் என்று அருணகிரிநாதர் அருளிச் செய்ததை இங்கு உலாத்திரு மேனியாகக் கண்டு களிக்கிறோம். மேலும் **அமரர்கோவே குறமின் கொடிதோள் புணரும் தேவே சிவசங்கர தேசிகனே** என்று கூறுவதும் இங்கு நினைவுக்கு வருகிறது

முருகனுக்கு வள்ளிக்கொடி வழங்கிய தேனும் தினைமாவும்

மலைபடு பொருட்களில் தேனும், தினைமாவும் முதன்மை பெற்றவை. இந்த விரண்டையும் மலையக மக்கள் உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

மலைக்குற மகளான வள்ளி தினைப் புனம் காக்கச் சென்றபோது, தேனையும், தினை மாவையும் தாம் உண்பதற்கு எடுத்துச் சென்றிருந்தாள். அதையே வயோதிக வடிவில் வந்த முருகனுக்கு உண்ணக் கொடுத்தாள். தேனையும், தினைமாவையும் உண்ட முருகன் அதில் வள்ளியின் அன்பும் கலந்திருக்கக் கண்டான். அதுவே அவன் விரும்பும் நிவேதனமானது.

தேனும் தினைமாவும் பரிந்தளித்த வள்ளிக் கொடியை மணந்தோனே என்கிறார் குமர குருபரர். வள்ளி திருமண விழாவின் போது தேனும் தினைமாவும் நிவேதித்து அன்பர்களுக்கு வழங்கப்படுகின்றன.

திருச் செந் தூரில் பங்குனி உத்திர வள்ளி கல்யாணத் தில் மக்கள் தினை மாவுடன் தேனைப் படைத்து வழிபடுகின்றனர்.

பழனிமலையில் பழனியாண்டவருக்குத் தினமும் தினைமாவு தேனுடன் நிவேதிக்கப்படுகிறது.

வல்லக்கோட்டை முருகனுக்கு தைப் பூசத்தில் விபூதி அபிஷேகம் போல தினை மாவைக் கொண்டு அபிஷேகம் செய்து அன்பர்களுக்கு வழங்குகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மகாவல்லி கஜவல்லி

இரண்டு பெரும் தெய்வ சக்திகள் தம்முள் இணைந்து அன்பர்களுக்குக் காட்சி தந்து அருள்பாலிப்பதைப் புராணங்கள் ஆங்காங்கு கூறுகின்றன.

சிவனும், பார்வதியும் தம்முள் இணைந்து அர்த்தநாரீசுவரராகப் பிருங்கி முனிவருக்குக் காட்சியளித்ததைச் சிவ மகாபுராணம் விவரிக்கிறது.

சிவபெருமானும் திருமாலும் தம்முள் இணைந்து சங்கர நாராயணனாகத் (அரிஅர்த்த ராக)தோன்றி சங்கன், பதுமன் என்னும் நாகர்களுக்குக் காட்சியளித்து அருள்புரிந் ததைச் சங்கரன்கோயில் தலவரலாறு கூறுகின்றது.

இவற்றைப் போல் வனவல்லியான வள்ளியம்மையும், மகாவல்லியான தெய்வ யானைப் பிராட்டியாரும் தம்முள் இணைந்து அன்பர்களுக்கு ஒருருவில் நின்று அருள் பாலிப்பதைப் புராணங்களும் நாட்டுப்புறக் கதைகளும் விரிவாகக் கூறுகின்றன.

இப்படி வள்ளியும் தெய்வயானையும் தம்முள் இணைந்து தோன்றும் கோலமே ஸ்ரீ மகாவல்லி கஜவல்லி என்றும், கஜவள்ளி அம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஆதியில் முருகன் தேவியரின்றித் தண்டபாணியாகவோ, பால முருகனாகவோ எழுந்தருளியிருக்கும் ஆலயங்களில் வள்ளி தெய்வயானையருக்குத் தனிச்சந்நிதி அமைக் கப்படுவதில்லை.

இத்தகைய முருகன் கோயில்களில் பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் வழிபட வும், அம்பிகைக்குரிய நோன்புகள் மேற் கொண்டு வழிபாடுகள் நடத்த வேண்டியும், முருகன் தொடர்புடைய பெண்தெய்வங் களை எழுந்தருளி வைக்க வேண்டிய அவசியம் உண்டானது.

அதையொட்டி, இருபெரும் தேவியரான வள்ளியும் தெய்வயானையும் தம்முள் இணைந்து தோன்றும் திருக்கோலமான மகாகஜ வல்லியை எழுந்தருளிவைத்து வழிபடும் வழக்கத்தைச் சான்றோர்கள் உரு வாக்கினர். இத்திருவுருவத்தை மூலவராக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைத்து வழிபடும் வழக்கமில்லை. பஞ்சலோகத் திருமேனியாகவே செய்து வைத்து வழிபடுகின்றனர்.

இத்திருவுருவில், அம்பிகை நான்கு கரங்களுடன் திகழ்கிறாள். வலது மேற்கரத்தில் தாமரை மலரும் இடது மேற்கரத்தில் நீலோற்பல மலருமுள்ளன. வலது முன்கை அபயம் காட்டுகிறது.இடதுகரத்தைத் தொடை மீது வைத்துள்ளாள். தலையில் சடாமகுடமும் அதில் ரத்தின அணிகளும் உள்ளன. இடையில் பட்டாடை அணிந்துள்ளாள். தலையில் மயில்தோகை அணிந்துள்ளார்.

அவளது இடப்பாகம் தாமரை மலர் போல் இளம் சிவப்பாகவும்,வலப்புறம் இளம்பச்சையாகவும்தோன்றுகிறது. இவளைக் குமாரகெளரி எனவும் அழைக்கின்றனர். நெடிய வேலாயுதத்தை ஏந்தியவளாக விளங்குகிறாள்.

ஆதிபராசக்தி உலகைப் படைத்த போது வெளிப்பட்ட இவள், முருகனைக் கணவனாக அடைவதற்குச் சிவபூசை செய்தாள். பின்னர் இரண்டு தனித்தனிவடிவம் கொண்டு திருமாலின் கண்களில் இருந்து தோன்றி, அமுதவல்லி-சுந்தரவல்லியாக வளர்ந்து மீண்டும் இந்திரனுக்கும், திருமாலுக்கும் பெண்களாகத் தோன்றி வளர்ந்தவள்.

கஜவல்லி மலைகளிலும் கடலோரங்களிலும் உறைபவள். மயிலை வாகனமாக உடைய இவளதுசந்நிதியில் மயிலும் மானும் யானையும் உள்ளன என்று கூறுகின்றனர்.

காஞ்சி குமரகோட்டத்தில் கஜவள்ளி அம்மன் உலாத்திருமேனி உள்ளது. நவராத்திரியில் இவளுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள வேலாயுதசாமி திருக்கோயிலில் ஸ்ரீ கஜவல்லி மகாவல்லி சந்நிதி உள்ளது. இதில் அழகிய உலாத்திருமேனியாக இவள் இருக்கிறாள்.(வீதிக்கு உலா வரும் வழக்கமில்லை.) ஆடிப் பூரம், ஆடி வெள்ளி, தை வெள்ளி, நவராத்திரி முதலிய விழாக்களில் இவளை எழுந்தருளுவித்து அபிஷேகம் அலங்காரம் செய்து வழிபடுகின்றனர்.

குகனும் குகானந்த வல்லியும்

முருகனுக்குக் குகன் என்பது பெயர். அன்பர்களின் மனமாகிய குகையில் வாழ்பவன் என்பது அதன் பொருள். குகை என்பதற்கு ரகசியம் என்றும் பொருள். உயிருக்குள் உயிராக ஒளிந்திருப்பவன் என்பதும் அதன் பொருள். மலை முகடுகளில் அமைந்திருக்கும் இயற்கையான வாழிடங்களுக்கும் குகை என்பது பெயர். தனிமையையும் இனிமையையும் நாடித் தவம் செய்யச் செல்லும் அன்பர்கள் குகைகளை இருப்பிடமாகக் கொண்டனர்.

மலையக மக்களான குறவர் குடியில் தோன்றிய வள்ளியம்மை குகைகளை விரும்பி அங்கு வசிக்கின்றாள். அவளை விரும்பும் குமரனும் குகைகளைத் தனது வசிப்பிடமாகக் கொண்டுள்ளாள். இப்படி குகையில் இருப்பதாலும் அவன் குகன் எனப்படுகிறான். திருச்செந்தூர், வள்ளிமலை, வள்ளியூர், குருந்தமலை முதலிய அநேக தலங்களில் வள்ளி மணவாளனாக முருகன் குகைக் கோயில்களில் தங்கியிருக்கிறார். குகானந்த வல்லி என்பது வள்ளியின் பெயர். இதற்குக் குகையில் வசிப்பவள். குகனுக்கு ஆனந்தம் அளிப்பவள். குகனால் விரும்பித் தழுவப்படும் கொடி என்பன பொருட்களாகும்.

ஆதிசங்கரர் சுப்பிரமணிய புஜங்கத்தில், குகையில் வசிப்பவன் என்பதை, குஹபாயாம் வாசம் என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலக்கியம் காட்டும் வள்ளி தெய்வயானை ஏசலும் தெய்வயானை ஊடல் விழாவும்

ஒருவருக்குரிய பொருளை அவர் அறியாமல் மற்றவர் கைக்கொள்ளும் போது அப்பொருளின் உரிமையாளருக்குக் கோபம் வருவது இயற்கை. அதுவும் தன் உயிருக்கு உயிரான கணவனை இன்னொரு பெண் உரிமை கொண்டாடும்போது உண்டாகும் கோபம் அளவிட முடியாததாகிறது.

வள்ளியை முருகன் திருமணம் புரிந்து கொண்டு அவளைத் தன் மாளிகைக்கு அழைத்து வந்தபோது, தெய்வயானைப் பிராட்டியார் கோபம் கொண்டு ஊடல் புரிந் தாள் என்கின்றனர். அது ஒரு ஊடற் காட்சி யாகப் பரிபாடல் எனும் சங்க இலக்கியத்தில் பாடப்பட்டுள்ளது.

வனக்குற மடமானான வள்ளி தேவி யுடன் முருகன் தன்மாளிகைக்குள் புகுந்தான் அதைக்கண்டு முதல்தேவியான தெய்வ யானை ஊடல் கொண்டாள். வள்ளியை ஏசி னாள்.முருகனிடம் இனி வள்ளியைப் பார்க் கக் கூடாது என்று ஆணை யிட்டாள்.

முருகன் தெய்வயானையின் கோபத் தைத் தணிக்க முற்பட் டான். அதைக் கண்டு வள்ளி கோபித்தாள். தனது மலர் மாலை களால் அவனைக் கட்டினாள். பூங்கொம்பால் அதட்டினாள். அதைக் கண்டு தெய்வயானை மேலும் கோபித்து வள்ளியைப் பலவாறு ஏசினாள்.

மேலும், அவளது மயில்கள் வள்ளியின் மயில்களோடு போரிட்டன. இருவரது கிளி களும் மோதிக் கொண்டன. இருவருடைய கூந்தலில் சூடியிருந்த மலர்களில் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்த வண்டுகளும்கூட மோதிக் கொண்டனவாம்.

அவ்வேளையில் தெய்வயானையின் தோழியர்களான அரம்பையர்கள் வள்ளி யரின் தோழியர்களான குறப் பெண்கள் மீது மாலைகள், பூப்பந்துகள், சந்தனம் ஆகிய வற்றை வாரி எடுத்து வீசினர். அதைக் கண்ட வள்ளியின் தோழியரான குறப் பெண்கள் கோபம் கொண்டு வில்லை எடுத்து நாண் பூட்டினர்.

அதைக் கண்டு அஞ்சிய தெய்வப் பெண்கள் மீனாகத் துள்ளி, சுனைகளிலும் குயிலாக மாறிமரங்களிலும் வண்டுகளாக மாறிப் பூக்களிலும் ஒளிந்துகொண்டனர். (அவர்களது கோபத்தை முருகன் தணித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரு தரப்பினரையும் அன்பு கொள்ளும்படிச் செய்தான். வள்ளியும் தெய்வயானையும் ஒரு மனத்தர் ஆயினர்.

இது என்ன தெய்வங்களுக்குள் போராட்டமா என்று கேட்காதீர்கள். ஞானமயமான, குறவள்ளி தெய்வயானையுடன் போரிட்டு நிற்பாளா அல்லது தேவேந்திரனின் மகளாகிய தெய்வயானைதான் வரம்பு கடந்து முருகனுக்குக் கீழ்ப் படியாது இருப்பாளா?

கவிஞன் தன் கற்பனையின் ஊற்றில் சங்க கால இலக்கியக் காதற்காட்சிகளை யொட்டி இந்தக் காட்சியையும் அமைத்திருக்கிறான். இதைப் பத்திக் கண்கொண்டு பாராமல் இலக்கியக் கண்கொண்டு பார்த்து இதிலுள்ள இலக்கிய இன்பத்தை நுகர்வோம்.

பிற்காலத்தில் தோன்றிய இலக்கிய வகைகளில் ஒன்றான ஏசல் இலக்கியத்திலும் கவிஞர்கள் வள்ளி தெய்வயானையர் பூசலிட்டுக் கொள்வதாகக் காட்சி அமைத்துப் பாடியுள்ளனர்.

வள்ளியம்மையைக் கண்ட தெய்வயானையர் அவரை அன்புடன் அழைத்து நான் தனியாக இருந்தேன் எனக்குத் துணையாக நீ வந்து விட்டாய், என்று வரவேற்றதாகவே கந்தபுராணம் கூறுகிறது. அக்காட்சியை அன்பர்கள் ஓவியமாகத் தீட்டிவைத்துள்ளனர். வள்ளியம்மையைத் திலகமிட்டு வரவேற்கும் அந்தக்காட்சி இங்கு ஓவியமாகக் காண்கிறோம்.

ஊடுதல் காமத்திற்கின்பம். அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின் என்பது வள்ளுவனின் திருக்குறள். தமிழர் ஊடலும், கூடலும் இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

ஆலயங்களில் ஊடல் என்பது விழாவாக நடத்தப்படுகின்றது. ஊடலும் கூட லும் மண வாழ்வின் அங்கம் ஆகும். கங்கையைச் சிவபெருமான் தலையில் சூடியதைக் கண்டு உமாதேவியார் கோபித்து ஊடல் கொண்டாள் என்று சைவப் புராணங்கள் கூறுகின்றன.

இதையொட்டித் திருவாதிரை நாளிலும், பெருந்திருவிழாவின் இறுதி நாளிலும் ஊடல் விழா கொண்டாடப்படுகிறது. இவ் விழாவில் அம்பிகை கோயிலின் கதவை அடைத்துக் கொண்டு சிவனை உள்ளே விட மறுப்பதும், சிவபெருமான் சுந்தரரைத் தூதனுப்பி, அவளது கோபத்தைத் தணித்து அவளோடு சேர்ந்து கொள்வதும் ஐதீக விழாவாக நடத்தப்படுகின்றன.

திருமால் ஆலயங்களில் பெருமாள் கோபிகையருடன் விளையாடி மகிழ்ந்ததையும் வெண்ணையைத் திருடி உண்டதையும் கண்டு கோபிக்கும் திருமகள் ஊடல் கொள்வதும், பெருமாள் நம்மாழ்வாரை அனுப்பி ஊடலைத் தீர்த்து அவளுடன் சேர்ந்து கொள்வதும் விழாவாக நடத்தப் படுகின்றன.

முருகன் வள்ளியைக் களவு மணம் புரிந்து கொண்டுவருவதைக் கண்டு கோபித்த தெய்வயானை, ஊடல் கொண்டு கதவை அடைத்துக் கொள்வதும் அகத்தியரும் நாரதரும் தோன்றி, அவளது கோபத்தை மாற்றி, வள்ளியுடன் முருகனை ஏற்றுக் கொள் ளும்படிச் செய்வதும், ஊடல் விழாவாக நடத்தப்பட்டு வந்துள்ளது. இப்போது இவ்விழாவைக் காண முடியவில்லை.

திருத்தணிகையில் மட்டும் மாசி மாதம் நடைபெறும் வள்ளி திருமண விழாவின் போது தெய்வயானைத் திருமணத்தின் போது வள்ளி ஊடல் கொள்வதை ஐதீக விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

ஊடல் அன்பு முதிர்வதையும், அது தணிந்து கூடுதல் இன்பத்தின் முதிர்வையும் காட்டுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகக்குடை நிழலில் வள்ளிதெய்வயானையர்

முருகவழிபாட்டோடு நாக வழிபாடு தொடர்புடையது. நாகர்குல அரசர்களான வாசுகி, அனந்தன், கார்க்கோடகன், ஆதி சேடன், மகாகாளன் ஆகியோர் தன்னை நோக்கித் தவம் செய்ததை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு முருகன்அருள்புரிந்துள்ளான்.

அமுதம் பெற வேண்டி தேவர்களும், அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்த போது, வாசுகியைக் கயிறாக மந்திரமலையில் சுருட்டிக் கட்டிக் கடைந்ததால்,அவனது உடல் ரணமாகிப் பெருந்துன்பத்தை அடைந் தான். அவனுடைய உடலைத் தடவிக் கொடுத்து, நோயைப் போக்கி வேதனையை நீக்கி விடுபடச் செய்ததால், முருகனுக்கு நாக நோய் தீர்த்த நாகன் என்றும், நாக வேதனா நிவாரண மூர்த்தி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இது முருகப்பெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்களில் ஒன்றாகும்.

முருகன் தானே ஒரு பெரும்பாம்பு வடிவம் கொண்டு நாகர்களுடன் சூழ(சுப்பிர மணியர்) குமாரகிரியில், வசித்ததாக அத்தல புராணம் கூறுகின்றது. நாக வடிவில் சுப்பிரமணியர் புற்றினுள் எழுந்தருளியிருக் கும் தலங்கள் கர்நாடக மாநிலத்தில் உள்ள குக்கே சுப்பிரமணியா, கட்டே சுப்பிரமணியா ஆகியன. நாக வடிவில் விளங்கும் முருகப் பெருமானை சுப்புராயன் என அழைக்கின் றனர். அவனோடு விளங்கும் வள்ளி (தெய்வ யானை) சுப்புலட்சுமி என அழைக்கப் படுகிறாள். (இங்கு லட்சுமி என்பதற்குப் பொருந்தி இருப்பவள் என்பது பொருள். முருகனோடு இணைந்திருப்பவளான வள்ளியே சுப்புலட்சுமி எனப்படுகிறாள்.)

பாம்பு வடிவில் விளங்கும் முருகனோடு வள்ளியும் தெய்வயானையும் நாக வடிவில் உறைவதாகக் கூறுகின்றனர். தமிழகத்தில் முருகன் வழிபாடு நாக வழிபாட்டுடன் தொடர்பு கொண்டு உள்ளது. திருச்செங் கோட்டில் நாகமலை மீது வேலவர் நிற்கின்றார். அருணகிரிநாதர் திருச்செங் கோட்டு வேலனை நாகாசல வேலவன் என்று போற்றுகின்றார்.

நாக வடிவில் விளங்கும் சுப்பிரமணி யரை நாக சுப்பிரமணியன், அனந்த சுப்பிரமணியன் என அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சிபுரம் குமரகோட்டத்தில், நாக சுப்பிரமணியர் எனும் பெயரில் பால சுப்பிரமணியரின் உலாத் திருமேனி உள்ளது. வலது கை அபயம் காட்ட, இடது கையைத் தொடை மீது வைத்து நின்றவாறு காட்சி அளிக்கும் இம்முருகனின் திருமுடி மீது ஐந்தலைப் பாம்பு தனது படங்களை விரித்துக் குடைபிடிப்பது போல் உள்ளது. இவருடன் விளங்கும் வள்ளி தெய்வ யானையர், திருமுடிகளின் மீதும்,முத்தலைப் பாம்புகள் படம் எடுத்து குடைபிடிப்பது போல் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு மட்டுமே நாகம் குடைபிடிக்க நாகவள்ளி யாகவும், நாகதேவசேனையாகவும் முருக னின் தேவியர் காட்சி அளிக்கின்றனர். இப் பெருமானுக்கு முறையாக வழிபாடு செய் தால் புத்திர தோஷம் நீங்கிச் சிறந்த குழந் தைகள் பிறப்பார்கள் என்பது நம்பிக்கை.

குறவள்ளி பங்கன்

பங்கன் என்ற சொல் தன் உடலில் தமது தேவிக்கென பங்கை அளித்தவன் என்பது பொருள். சிவபெருமான் தனது உடலில் சரி பாகத்தை உமைக்கு அளித்ததால் உமை பங்கன் என்றும்,உமாபாகர் என்றும்அழைக்கப்படுகின்றாள். திருச்செங்கோட்டு மலைமீது அவன் உமை பங்கனாக வீற்றிருக்கின்றான். அன்பர்கள் இந்த கோலத்தை அர்த்தபாகர், நாரீபாகர், அர்த்தநாரீ என்று பல பெயர்களால் அழைக்கின்றனர்.

திருச்செங்கோட்டில் மலை மீது எழுந்தருளி இருக்கும் வேலவனை,குணசீலர் என்னும் புலவர் அவனை வள்ளி பங்கன் என்று போற்றுகின்றார்.

வள்ளி பங்கன் என்ற சொல்லுக்கேற்ப முருகன் வள்ளியைத் தம் பாகத்தில் கொண டுள்ளவனா?. அர்த்தநாரியைப் போல அவன் வள்ளியைத் தம் உடலில் கொண்டு காட்சி தருகிறானா என்ற கேள்விகள் எழுகின்றன.அப்படியான சிற்பமோ அல்லது ஓவியங் களோ இருப்பதாகத் தெரியவில்லை. எனி னும், வட்டார வரலாற்றில் இது புழக்கத்தில் இருக்கிறது.

தருமையாதீன குருமகாசந்நிதானம் ஆறாம் பட்ட மாக எழுந்தருயிருந்த ஸ்ரீலஸ்ரீ சம்பந்ததேசிகர் தலயாத்திரை மேற்கொண்டு வள்ளியூருக்கு வந்தி ருந்தார். அப்போது முருகன் அவருக்குக் காட்சி தந்தார். அவர் முருகனிடம் தனக்கு அவர் வள்ளி யோடு காட்சி தர வேண்டும் என்று பிரார்த்திக்க, முருகன் தன் மேனியிலேயே வள்ளியை உடனி ருக் கக் காட்டினார் என்று அவரது வரலாறு கூறுகிறது.

நாதவிந்து கலாதீ நமோ நம என்னும் திருப் புகழில் அருணகிரிநாதர், முருகன் தெய்வயானை யையும் தன் பங்கில் கொண்டிருக்கிறான் என்பதை தேவ குஞ்சரி பாகா நமோநம என்று கூறிப் போற் றியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமர்ந்த கோலத்தில் காட்சி தரும் வள்ளி, தெய்வயானை உடனாய முருகன்

கருவறைகளில் மூலமூர்த்தியாகவும், உலாத் திருமேனியாகவும் விளங்கும் முருகன் எப்போதும் நின்ற நிலையிலேயே காட்சியளிக்கிறார். அவனுக்கு இருபுறம் உள்ள தேவியரும் நின்ற வண்ணமாகவே உள்ளனர். முருகன் ஆறுமுகனாகக் காட்சி தரும் வேளையில் மயில் மீது அமர்ந்தவனாக உள்ளான். அப்போதும் அவனது தேவியர்கள் நின்ற வண்ணமாகவே உள்ளனர்.

குன்றக்குடி, திண்ணியம், மயிலை முதலிய சில தலங்களில் மட்டுமே ஆறு முகனுடன் இருக்கும் தேவியரும் தனித்தனி மயில்களிலும் தனித்தனி யானைகளிலும் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றனர்.

மூவரும் ஒரு பீடத்தில் அமர்ந்து ராஜகோலாகல சுப்பிரமணியராக இருப் பதைப் பெரும்பாலும் காண முடிய வில்லை. மயிலாடுதுறையை அடுத்த மேலப்பாதி என்னும் ஊரிலுள்ள ஐரஹரேசுவர சுவாமி கோயிலில் உள்ள முருகன் சந்நிதியில் மூவரும் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றனர். திருப்போரூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாட்டில் இல்லாமல் தனியாக மேடையில் நிலைப் படுத்தப்பட்டுள்ள சிலைகளாக மூவரும் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர்.

வள்ளி, தெய்வயானையரை அமர்ந்த கோலத்தில் அமைப்பது அரிதாக உள்ளது. பள்ளியறை மூர்த்தங்களில் மட்டுமே அவர்கள் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக் கின்றனர்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்பெரும் தேவியரும் வள்ளி தெய்வயானையரும்

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய முருகனை அன்பர்கள் மும்மூர்த்திகளின் வடிவமாகவே போற்றுகின்றனர். குமாரன் என்ற சொல் கு+மா+அரன் எனப் பிரித்து, கு - பிரம்மனையும், மா - திருமகள் கேள்வனாகிய திருமாலையும், அரன் என்பது உருத்திரனையும் குறிக்கும் என்பர். மும் மூர்த்திகளின் வடிவாக அவன் இருப்பதைக் குறிக்கத் திருச்செந்தூரில் சிவப்புச்சாத்து, வெள்ளைச் சாத்து, பச்சைச் சாத்து என்னும் மூவகை அலங்காரங்கள் செய்யப்படுவதாகக் கூறுகின்றனர்.

முருகன் மும்மூர்த்திகளின் வடிவமாக இருப்பது போலவே அவனதுதேவியரான தெய்வயானையும், முப்பெரும் தேவியர்களின் அம்சங்களைக் கொண்டுள்ளனர்.

பிரம்மனின் சக்தியர் சரஸ்வதி சாவித்திரி. திருமாலின் தேவியர் திருமகளும், புவி மகளும். சிவனின் தேவியர் கங்கையும் உமையுமாவர்.

இதில் காயத்திரி, திருமகள், உமை ஆகிய மூவரின் அம்சங்களைக் கொண்டவளாக தெய்வயானையையும், கங்கையையும் சரஸ்வதி, பூதேவி என்னும் மூவரின் அம்சத்தையும், வள்ளியம்மையையும் கொண்டுள்ளனர் என்பர்.

மலைகளில் உறைவது, சுனைகளில் நீராடி மகிழ்வது வேத சாத்திர ஞானங்களில் தேர்ச்சி அடைதல் ஆகியவை வள்ளி தேவியின் அருங்குணங்கள். முருகன் குருநாதனாக வரும் வேளையில் உடன் வரும் வள்ளி ஞானத்தை உபதேசிக்கும் குருநாதனுடன் அருள்வதைக் குறிக்குமென்பர். அவளே பொங்கி எனும் பெயர் பூண்டாள். அவளே பொங்கி வரும் ஞான கங்கையாவாள்.

வாழ்க சீர் அடியாரெல்லாம்......

ஆறிரு தடந்தோள் வாழ்க !!
அறுமுகம் வாழ்க !! வெற்பைக்
கூறுசெய்த் தனிவேல் வாழ்க !!
குக்குடம் வாழ்க !! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க !!
யானைதன் அணங்கு வாழ்க !!
மாறிலா வள்ளி வாழ்க !!
வாழ்க சீர் அடியாரெல்லாம் !!.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



எங்கே நினைப்பினும் அங்கே வரும் செங்கோட்டுக்குமரன்

செங்கேழ் அடுத்த சினவடிவேலும் திருமுகமும்
பங்கேநிறைத்த நல்பன்னிருதோளும் பதுமமலர்
கொங்கே தரளஞ் சொரியும் செங்கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்து நிற்பனே.

– கந்தர் அலங்காரம்